BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 02 Issue - 35 18 Friday November 2005 விற்பனைக்கல்ல

**DIAMONDS PALACE**



**MITHUS**

020 8767 5333
76 Tooting High Street
London



020 8683 1756
322-324 London Rd
Croydon

## எங்கிருந்தாலும் எங்களின் இதயம் உங்களுக்காகத் துடிக்கும்!




**OFF LICENSE ON LICENSE**
**HEALTH AND SAFETY AND FOOD HYGIENE**

Personal Licenses (The New Req.)

Brand New/ Empty Shop, Shop Transfer



**Mr Ravi**
**07782 223 005**

**FOR YOUR WEDDINGS & BIRTHDAYS**

or any other ceremonies call us and make the most of your special day with our variety of great food



**SPICELAND**

for the Asian Taste 0208 667 1700
of Spicy Curry 0798 403 8757
212 London Road, Croydon

**EPoS SOLUTIONS FOR TODAY'S RETAILERS** IPOS

**The ultimate costs effective and complete 'EPoS and News Delivery System'**



- Barcode Scanning
- Pre-Loaded 20000 Stock
- Stock Control
- Handles all Promotions
- Paper & Magazine Control
- Home News Delivery
- Prints Shelf Edge Labels
- Invoice Control
- Reports
- Costcutter & NISA Link

Special Offer Starts from £1999

**Tel: 0845 838 0856**
Terms & Conditions apply

*Rasam Gayathri Silks*

Specialists in Wedding Sarees
- Deepam
- Kolam
- Mangalyam
- Suyamvaram

Golden Tissue
Wedding Collection Sarees



165, Upper Tooting Road,
Tooting SW17 7TJ
020 8682 3958

Tel:
020 8552 6060

312, High Street North,
Eastham E12 6SA

**MortgageLink**
*The National Mortgage Network*

100% MORTGAGE - எந்த விதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?

MORTGAGE ARREARS - பல மாதங்களாக மாதாந்தக்கட்டணம் கட்டாமல் வீடுபறிபோகும் நிலையில் இருக்கிறீர்களா? சகல விதமான சட்ட ஆலோசனைகளும் வழங்கி உதவத் தயாராக இருக்கின்றோம்.

குறைந்த Deposit உடன Leasehold/Freehold வர்த்தகஸ்தாபனங்கள் வாங்க வேண்டுமா? SHOPS/OFF LICENCE/ CHICKEN SHOP

Mobile: 07930 62 65 85
020 8946 5566

**Nearest underground: Tooting Broadway - Northern Line**

YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

*Rani Fashions*



Our New Branch
377, Rayners Lane, Pinner,
Middlesex HA5 5EN
Tel: 020 8426 1113

302, High Street North, Manor Park E12 6SA
Tel: 020 8472 9970

**Portland**
Estate Agents

| Sales | Letting |
| Commerical Mortgages | Loans

Call Pon Siva

இது ஒரு தமிழர் நிறுவனம்

9 st. James Road, Croydon
Surrey CR0 2SB
Tel: 020 8683 1313
Fax: 020 8684 0444

## ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# THE JACKPOT MACHINE

- Fruit Machine
- Video Game Machine
- Table Football &
- All other Amusment
- Equipment

Why don't you make more than
**£500/Month**
Income without any investmetn at all if you have a small space in your shop & interested

Please call **Hari**
**079 4467 8271**
(No information seekers please)

**Suitable for:**
*Takeaway Shops, Pubs, Restaurants, Cafes, Video Shops, Mini Cab Offices, Fried Chicken Shops etc., (Anywhere in England)*




*Extra Income:*
find me a site and get £150/site
No contract to sign



# You can count on us

*for* • Canned & Bottled Beers • Wines & Champagne • Spirits • Soft Drinks • Confectionery • Groceries • Tobacco

**Dhamecha**
GROUP
**The Cash & Carry that Cares**

**Barking**
125 River Road, Barking, Essex, IG11 0EG
T: 020 8594 9494

**Croydon**
625A Mitcham Road, Croydon, Surrey, CR0 3AF
T: 020 8684 8383

**Enfield**
Unit 8, Crown Road, Enfield, EN1 1TH
T: 020 8804 9494

**Watford**
Imperial Way, Watford, WD24 4UA
T: 01923 252 511

**Wembley**
Wembley Stadium Industrial Estate, First Way, Wembley, Middlesex, HA9 0TU
T: 020 8903 8181

**W:** www.dhamecha.com **E:** info@dhamecha.com
STRICTLY TRADE ONLY



# IDEAL KITCHENS

***Suppliers & Installers Of Kitchens***




Highest Quality & Guaranteed Fitted Kitchens
For Unbeatable Prices

We are Corgi Registered (Gas, Plumbing)
& N.I.C.E.I.C (Electrics) Approved Installers

விதவிதமான நவீன சமையலறைகள்!
உங்கள் விருப்பத்திற்கு, தேவைகளுக்கேற்ப
நல்ல விலைகளில் செய்து தரப்படும்
கோர்கி மற்றும் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம்
அழைப்புகளுக்கு,

Please Contact for **FREE** Consultation - **07917731361**





Realise your child's potential

**Maths and English After-School Programmes**

உங்கள் குழந்தையின் வயது தகுதி வல்லமை எதுவாயினும்

- ஆங்கிலம் கணிதம் ஆகிய இருபாடங்களிலும் முறையான தகுதியையும் தேர்ச்சியையுமடைய உதவுவார்கள்.
- நிரந்தரதுணிவும் தன்னம்பிக்கையும் அடையச் செய்வார்
- நல்ல மன ஒருமைப்பாடும் படிப்பு நேரவழக்கங்களையும் அடைய உதவுவார்கள்.
- தங்கள் முயற்சியால் எவ்வாறு தேர்ச்சி பெறலாம் என்ற நம்பிக்கையை பிள்ளைகளுக்கு ஊட்டுபவர்கள்.
- போட்டிகளில் வெற்றிநிலையை அடைய செய்யும் வகையில் கல்வியை ஊட்டுவார்கள்.

0800 854 714
kumon.co.uk
KUMON
**Every Child Shine**

**உங்கள் உள்ளூர் ஆசிரியரை உடனே தொடர்பு கொள்ளுங்கள்.**

**Neela Patel**
(Kumon Instructor)
(Tooting Church Lane)
**020 8646 6791**
neelapatel16@yahoo.com

**My centre runs at**
St, Nicholas Church
Church Lane,
Tooting
SW17 9PW


**The centre is open**
Mondays and Fridays
from 4.00pm to 6.00pm

**Jitu Patel**
(Kumon Instructor)
(Thornton Heath)
**020 8646 6791**

**My centre runs at**
Elim Pentecostal Church,
Mersham Road,
Thornton Heath
CR7 8NS


**The centre is open**
Tuesdays (4PM - 6PM)
Saturdays (10AM -12PM)

# தமிழீழ தேசிய மலர், மரம், பறவை, விலங்கு ஆகியன அறிவிப்பு!!!









தமிழீழத்தின் தேசிய மலர், மரம், பறவை, விலங்கு என்பன 15.11.05 அன்று அறிவிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே 2004ம் ஆண்டு காந்தள் தேசிய மலராக அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றியின் சின்னமான வாகை, தமிழீழத்திற்கு சிறப்பான செம்பகம், தமிழீழ விலங்கினங்களில் வேகம், மிடுக்கு அடங்கிய சிறுத்தை என்பன முறையே தமிழீழத்தின் தேசிய மரம், தேசியப் பறவை, தேசிய விலங்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

*நன்றி சங்கதி*




# கூத்து.. கூத்து.. Western கூத்து...





Photos: www.imperialphotos.com

கடந்த 5ம் திகதி சனிக்கிழமை தமிழ் இளையோர் அமைப்பின் ஐக்கிய இராட்சிய கிளை ஒழுங்கு செய்த 'Western கூத்து' நிகழ்ச்சி Greenford Assembly Hallல் நடைபெற்றது. தலைப்பை பார்த்ததும் வடமோடி தென்மோடி போன்று இது மேற்கத்தய முறையில் ஆடப்படும் நாட்டுக்கூத்து என நீங்கள் நினைத்திருந்தால் தவறில்லை. ஆனால் இது மேற்கத்தய பாணியிலான, சற்று வித்தியாசமான, தமிழ் இளைஞர்களின் ஆடல் பாடல் நிகழ்ச்சி.

நிகழ்வில் 'தமிழ் மொழியும், தமிழ்க் கலாச்சாரமும் புலம்பெயர் சூழலில் வாழும் வருங்காலச் சந்ததிக்கு அவசியமா' எனும் தலைப்பில் விவாதம் நடைபெற்றது. அவசியமென கஜிநாத் ஜெயக்குமாரும், சொப்னா சீவராசாவும் வாதிட, எதிராக காயத்திரி பாலச்சந்திரனும், தினேஸ் சந்திரகுமாரும் வாதிட்டார்கள். விறுவிறுப்பாக நடைபெற்ற, இன்றைய காலகட்டத்துக்கு மிக அவசியமான, இந்த விவாதத்துக்கு திரு. ரஞ்சித் நடுவராகவிருந்தார். அவர் தனது தீர்ப்பில் தமிழ் மொழியின் அவசியத்தை வலியுறுத்தி தீர்ப்பளித்தார். இருப்பினும் பிற கலாச்சாரங்களுடன் கலந்து போயுள்ள இன்றைய தமிழ் கலாச்சாரத்தின் குழப்பங்களை காரணங்காட்டி இவ்விடயத்தில் தீர்ப்பை ஒத்தி வைத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற பல இசை நடன நிகழ்வுகள் தென்னிந்திய திரைப்பட பாடல்களை மையப்படுத்தியே இருந்தன. வித்தியாசமாக RAP, Hip Hop இசை வடிவங்களையொத்த, தமது சொந்த படைப்புகளான, தமிழ்ப் பாடல்களை வருணன் (Sub Zero) மற்றும் கிருசான் மகேசன் குழுவினர் வழங்கியபோது பார்வையாளர்களின் மத்தியில் பெருத்த ஆரவாரத்துடனான வரவேற்புக் காணப்பட்டது. இவர்களை பற்றி முன்னமே அறிந்திராத என் போன்றோர் பனிப்பிரதேசத்துக்கு வழிதவறி வந்துவிட்ட ஒட்டகங்கள் போல முழித்துக் கொண்டது என்னவோ உண்மைதான்.

Kings College தமிழ் மாணவர்களின் கர்நாடக இசைக்கச்சேரி சிறப்பாக இருந்ததது. குறிப்பாக பிரவணன் பாலகிருஸ்ணனின் புல்லாங்குழலிசை பலரையும் கவர்ந்தது. இருப்பினும் இது சில பார்வையாளர்களுக்கு கொத்து ரொட்டி சாப்பிடப்போன இடத்தில் வடை பாயசத்துடன் மரக்கறிச் சோறு பரிமாறியது போன்ற உணர்வைக் கொடுத்திருந்தது. அவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெரிந்தது.

மண்டபத்தில் எனக்கு இடது புறம் அமர்ந்திருந்த ஆச்சி, 'இந்தப் பொடி-பெட்டையளின் உடுப்பும் அவையின்ர ஆட்டமும்' என நிகழ்ச்சி முழுக்க புறு புறுத்துக் கொண்டிருக்க, வலது புறமிருந்த இளசு அடிக்கடி விசிலடித்தபடியும் செல்லிடப் பேசியினை தூக்கி படமெடுத்தபடியும் நிகழ்ச்சியுடன் ஒன்றிப் போயிருந்தது. இந்த தலைமுறை இடைவெளிக்குள் (வயதிலும்) இருந்த என்னால் நிகழ்ச்சியை ரசிக்கக் கூடியதாக இருந்தது.

இதுபோன்ற நிகழ்வுகள், புலம் பெயர் தமிழருக்கென மேலைத்தேச கலை வடிவங்களுடன் கலந்த ஒரு புதுக் கலாச்சாரத்தை காலத்துக்கேற்ற வகையில் உருவாக்கப் போகிறதா, அல்லது எமது அடையாளங்களை அழித்து ஒரு கலாச்சாரச் சிக்கலுக்குள் எம்மை தள்ளிவிடப் போகிறதா என்பது புரியாமலே வீடு வந்து சேர்ந்தேன்.

*- தேவபுத்திரன்*

**LIVE FROM VANNI**



**PULIKALINKURAL.COM**

# நேரடி ஒலிபரப்பு

தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையினை நேரடி ஒலிபரப்பாக புலிகளின் குரல் வானொலியினூடாகக் கேட்கலாம்

வன்னியில் இடம் பெறும் மாவீரர்தின நிகழ்வுகளை நேரடி ஒலிபரப்பு செய்கிறது புலிகளின் குரல் வானொலி

தேசியத் தலைவருக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவிக்க விரும்புகிறவர்கள் www.pulikalinkural.com இணைய தளத்தின் ஊடாக வாழ்த்தினைத் தெரிவிக்கலாம்.

FASTCASH
WE NOW SEND MONEY TO THE FOLLOWING COUNTRIES
FOR ONLY £10
INDIA, CANADA, USA
AUSTRALIA, EUROPE
+ 120 COUNTRIES
RING FOR DETAILS
020 8886 4488

YOU DON'T HAVE TO COME TO US
PAY AT BARCLAYS
FOR INSTANT FASTCASH TRANSFER TO SRI LANKA
A/C NAME : C.E.C LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47

FAST MONEY TRANSFERS TO SRI LANKA
YOUR TRANSFER IS MUCH SAFER WITH FASTCASH, THAN ANY NEWSAGENT OR A GROCERY STORE
இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.
Transfer fees from only £5*
FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS
- IMMEDIATE COLLECTION
- CREDIT TO ANY BANK ACCOUNT
- UNBEATABLE EXCHANGE RATES
- ONLINE TRACKING & RECEIPT
- NO CHARGES IN SRI LANKA
*FOR MORE INFORMATION CALL
020 8886 4488
FASTCASH WEBSITE FOR RATES: WWW.CECLTD.BIZ
CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.
No. 125 - 127, Bramley Road, Oakwood, London N14 4UT, E - Mail : info@cecltd.biz Fax : 020 8886 4499
COMMERCIAL BANK
HSBC
Bank of Ceylon
Sampath Bank
PEOPLE'S BANK
NSB
SEYLAN BANK

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

## வெண்புறா கலைமாலை

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 20வது ஆண்டு சேவையை நினைவு கூருமுகமாக நாளை சனிக்கிழமை (19ம் திகதி), வெண்புறா அமைப்பினால் கலை நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாலை 2.30 மணிக்கு கண்காட்சியுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். தாயகத்திலிருந்து வருகை தரும் வெண்புறா அமைப்பின் பொறுப்பாளர் மருத்துவர் ஜெயகுலராஜா நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார். இடம்: South Fields Community College, 333 Merton Road, London SW18 5JU

## எழுத்தாளர் சந்திப்பு

*விம்பம் அமைப்பினால் எழுத்தாளர் சந்திப்* பொன்று நாளை சனிக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நவஜோதி யோகரத்தினம் தலைமையில் கிங்ஸ்ரனிலுள்ள தமிழ் தகவல் மையத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பத்மநாப ஐயர், மு.புஸ்பராஜன், யமுனா ராஜேந்திரன், மு.நித்தியானந்தன், நீல பத்மநாபன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். விபரங்களுக்கு 020 8546 1560.

## குறும்பட விழா

விம்பம் அமைப்பு நடாத்தும் குறும்படவிழா வரும் ஞாயிறன்று (20ம் திகதி) மாலை 4மணிக்கு லூசியம் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு, 020 8470 7883.

## 'ஓ போடு'

City University தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'ஓ போடு' எனும் மேற்கத்திய நடன நிகழ்ச்சி இம்மாதம் 22ம் திகதி இரவு 10 மணிக்கு நடைபெறவுள்ளது. அதிகாலை 3 மணிவரை நடைபெறும் இந்நிகழ்வில் RnB, Hip Hop, Garage, Reggae மற்றும் கானா பாடல்களும் இடம்பெறும். கண்டிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலதிக விபரங்கட்கு: 0797 148 9239 அல்லது 0788 674 4166.

## நிவாரண கலைநிகழ்ச்சி

ஆசிய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானிய கிராமமொன்றின் புனரமைப்புக்கு நிதிசேர்க்கும் முகமாக பல்லின கலாச்சார நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. டிசம்பர் மாதம் 10ம் திகதி சனிக்கிழமை கரோ Byron மண்டபத்தில் (Harrow Leisure Centre, *Christ Church Avenue, Harrow. HA3 5BD)* மாலை 6 மணியிலிருந்து இரவு 11 மணிவரை நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு கரோ மாநகரசபை அனுசரணை வழங்குகிறது. நுழைவுச்சீட்டு: தனிநபர் £10, குடும்பம் £30 (இராப்போசனத்துடன்).

## நாடக விழா 2005

லூசியம் தமிழ்ப்பாடசாலையின் ஆதரவில் தமிழ் அவைக்காற்றுக் கழகம் நடாத்தும் - நாடகவிழா 2005- டிசம்பர் மாதம் 3ந் திகதி சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு லூயிசம் சிவன்கோவில் மண்டபத்தில் (4A Clarendon Rise, Lewisham, London SE13) நடைபெற உள்ளது. நுழைவுக்கட்டணம் - £10, £5.

# குடியுரிமை பெறவிரும்புவோருக்கு ஒரு குறிப்பு

சென்ற இதழில் நீண்ட கால வதிவுரிமை சம்பந்தமாக சில குறிப்புக்களை தந்திருந்தோம் அது போன்று இந்த இதழில் ஒருவரது அகதி விண்ணப்பமானது 2.10.2000 க்கு முன், உள்நாட்டுத் திணைக்களத்தால் பரிசிலணைக்கு எடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டாலோ அல்லது அது சம்பந்தமான மேன்முறையீடுகள் நீதிமன்றங்களில் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தாலோ அவருக்கு மனித உரிமைகள் சம்பந்தமான சில தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

மேற்படி மனித உரிமைகள் (Human Rights) சம்பந்தமான விண்ணப்பமானது குடும்பப் பிணைப்பு, மருத்துவ நிலமை, கல்வி, தொழில், உள்நாட்டுத் திணைக்களத்தினாலோ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத புதிய தகவல்கள் விண்ணப்பிக்கும் போது அவரது சொந்த நாட்டில் நிலமை முதலான அம்சங்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்படலாம்.

சில சமயங்கள் 2.10.2000ற்கு பின்னர் நீதிமன்றத்தினால், ஒருவுரது அகதி விண்ணப்பம் சார்பான மேன்முறையீடு விசாரனைக்கு உட்பட்டிருக்காத பட்சத்தில் அவருக்கு மனித உரிமைகள் சம்பந்தமாக விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாம்.

ஒருவர் இந்நாட்டிற்கு வந்து குறிப்பிடத்தக்க அளவிற்கு ஒரு குடும்பப் பிணைப்பை அல்லது குடும்ப வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்தியிருந்தால் அல்லது வளர்த்திருந்தால் அல்லது இங்கு அவருக்கு ஏற்பட்டிருக்கும் சில மருத்துவப் பிரச்சினைகளுக்கு அவரது சொந்த நாட்டில் வசதியின்மை என்பதை நிரூபித்தால்,

அல்லது கல்வி, தொழில் சம்பந்தமாக இந்நாட்டில் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சி அடைந்திருந்தால்,

அல்லது இந்நாட்டிற்கு வந்த பல வருடங்களில் அவர் தமக்கென ஒரு வாழ்கை முறை ஒன்றை ஏற்படுத்தியிருந்தால் அவரை சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பினால் அவரது குடும்பம், தனிப்பட்ட வாழ்க்கைகள் பாதிக்கப்படலாம் என்று நீதிமன்றங்கள் கருதும் பட்சத்தில் அவருடைய மனித உரிமைகள் சம்பந்தமான விண்ணப்பங்கள் அல்லது மேன்முறையீடுகள் வெற்றியளிப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

ஒருவருக்கு மேற்படி அம்சங்கள் பலமாக இருந்தாலும் மனித உரிமைகள் சம்பந்தமாக மேன்முறையீட்டு வழக்கில் சமூகமளித்து அவர் அளிக்கும் சாட்சியங்கள் அல்லது அகதி விண்ணப்பம் சார்பாக ஏற்கனவே உள்நாட்டுத் திணைக்களத்தினால் அல்லது நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகள் இந்த மனிதஉரிமை சம்பந்தமான விண்ணப்பத்தினை பாதிக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன.

மேலதிக விபரங்களுக்கும் சட்ட ஆலோசனைகளுக்கும்.

Markandan & Co Ltd.

# செய்தித் துணுக்குகள்

உலகளாவிய விதத்தில் தமிழர்கள் வாழும் நாடுகள் எல்லாவற்றிலும் மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது நவம்பர் மாதம் 27 ம் திகதி கொண்டாடப்படும். அன்று தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அளிக்கும் செய்தியையும் மக்கள் மிக ஆர்வமாக எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றனர்.

■ ■ ■

ஒரு பிரித்தானிய பிரசையான திரு அகமட் தடைசெய்யப்பட்ட இயக்கம் ஒன்றிற்கு தனது இணையத்தளத்தின் மூலம் பணம் சேர்த்ததாகவும் ஆதரவு அளித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு அமெரிக்காவிற்கு நாடு கடத்தும்படி தீர்ப்பளிக்கப்பட்டது. இவர் கைது செய்யப்பட்டதையும் தீர்ப்பையும் எதிர்த்துபிரித்தானியா வாழ் முஸ்லிம் சமூகத்தினரால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. இவர் சட்டத்திற்குப் புறம்பாக நடப்பதாக குற்றம் சாட்டப்பட்டால் இந்த நாட்டிலேயே வழக்கு நடாத்தப்பட வேண்டும் என்றும் இது இவரைப் பற்றியது மாத்திரம் அன்று வேறு எந்த பிரிட்டிஷ் பிரசையும் இவ்வாறு அமெரிக்காவின் அரசியல் சதுரங்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம் என்றும் பிரித்தானிய முஸ்லிம் கவுன்சிலின் பிரமுகர் கூறியுள்ளார்.

சமீபத்தில் இங்கிலாந்து வீரர்களுக்கும் பாகிஸ்தான் வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து 22றன்களால் தோல்வியுற்றது. இது நடைபெற இருக்கும் 3 போட்டிகளில் முதலாவது போட்டியாகும்.

■ ■ ■

ஐக்கிய இராச்சியத்தில் வயோதிப ஊதியம் (Old age pension) பெறும் வயதை தற்பொழுது இருக்கும் 65வயதிலிருந்து 67வயதாக கூட்டவேண்டும் என்று ஓய்வூதிய கமிஷனர் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவுள்ளார் என பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

■ ■ ■

பிரித்தானியாவிலும் அமெரிக்காவைப் பின்பற்றி, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் முகமாக ஒரு இணையதளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொலிசாரினால் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் குற்றவாளிகளின் படங்கள் இவ்விணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இது ஆரம்பமான முதல் மணித்தியாலத்திலேயே பல்லாயிரக்கணக்கானோர் இதைப் பார்க்க முயற்சித்துள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் இணையத்தளத்தின் குறி www.mostwanted.uk.org

■ ■ ■


# புதிய பிரித்தானியர்களுக்குப் புதிய பரீட்சை

பிரித்தானியக் குடியுரிமை பெற விண்ணப்பித்துள்ள வெளிநாட்டவர்கள் இந் நாட்டைப் பற்றி எவ்வளவு தூரம் அறிந்து வைத்துள்ளார்கள் என்று பரீட்சிக்கப் படுவார்கள். நவம்பர் 1ந் திகதியிலிருந்து இது நடைமுறைக்கு வந்துள்ளது. இப்பரீட்சையில் கேட்கப்படும் 24 கேள்விகளில் குறைந்தது 75வீதமான கேள்விகளுக்கு சரியான பதில் அளிப்பவர்கள் மாத்திரமே 'பிரிட்டிஷ்' குடிமக்களாக வருவதற்குத் தகுதி உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். இப் பரீட்சையில் தேறும்வரை இவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்படும். ஆனால் உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் வயோதிபர், மனநலம் குறைந்தோர் ஆகியோருக்கு இப் பரீட்சையிலிருந்து விதிவிலக்கு அளிக்க முடியும்.

இவர்களை இப் பரீட்சைக்கு ஆயப்படுத்து முகமாக 'ஐக்கிய இராச்சியத்தில் வாழ்க்கை' (Life in the UK) என்னும் ஒரு கைநூலை அரசாங்கம் தயாரித்துள்ளது. ஆனால் இத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் இக் கைநூலிலிருந்து மாத்திரமே எடுக்கப்படும் என எதிர்பார்க்க முடியாது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

முந்தைய உள்நாட்டலுவல்கள் அமைச்சராக விருந்த (Home Secretary) டேவிட் பிளாங்கெற் (David Blunket) டினால் கொண்டுவரப்பட்ட புதிய நிபந்தனைகளுள் இந்தப் பரீட்சையும் ஒன்றாகும். மேலும் ஆங்கிலத்தில் ஓரளவு அறிவு, சத்தியப் பிரமாணச் சடங்குகள் ஆகியவை இவரது மற்றைய நிபந்தனைகள் ஆகும்.

இப் பரீட்சை ஒருவரது 'பிரிட்டிஷ்' தன்மையைப் பரீட்சிக்கும் நோக்கமுடையதல்ல, ஆனால் அவர்கள் பிரித்தானியக் குடிமகனாக வருவதற்கு எவ்வளவு தூரம் தம்மைத் தயார்படுத்தி உள்ளனர் என அளவிடும் கருவியாகும் என குடிவரவு திணைக்கள உதவி அமைச்சர் ரோனி மக்நல்டி (Tony NcNulty) கூறியுள்ளார். ஆனால் இதற்கு குடிபெயர்வோர் நலன் காக்கும் சங்கங்களும், இன சமத்துவ ஆணையாளர்களும் தம் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.




ஸ்ரீ ராக வேந்திரா ஜோதிசாலயா

| | | | |
|---|---|---|---|
| குரு | செவ் | சுக்கி | புதன் |
| சனி |  | | சந்தி |
| சனி | | | சூரியன் |
| குரு | செவ் | சுக்கி | புதன் |

உலகத்தில் பல நாடுகளில் புகழ்பெற்ற **பண்டித் கே. மஞ்சுநாத சாஸ்திரி** இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்.
இவர் கைரேகை, முகநாடி, பிறந்த தேதி நட்சத்திரம், ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.
எல்லா தோசங்களுக்கும் பரிகாரம் செய்யப்படும். வியாபார ஸ்தலங்களுக்கு பரிகாரம் செய்யப்படும்.

* படிப்பு, தொழில், திருமணயோகம்
* குழந்தை பாக்கியம்
* வெளிநாட்டுப்பயணம், வீடு கட்டுதல்
* கணவன்-மனைவி ஒற்றுமை காதல் பிரச்சனை
* கல்யாண யோகம், வாஸ்த்து சாஸ்திரம்
* நாட்டில் விசா மற்றும் பிரச்சனைகள்
* எதிரிகள், கண் திருஷ்டி, கோட் வழக்குகள்,
* வாகனப்பொருத்தம், பணப்பிரச்சனை
* பிள்ளைகள் குடும்பத்துடன் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைநிறுத்தல்

(ரசிகர்கள் பார்த்துச் சொல்லப்படும்)



He is at CHRISTIN, 119 Mitcham Road, London, SW17 9PE
(Opposite Vijay Krishna Restaurant, and near Smith Bros. Tooting.)
www.shriraghavendrajyotishalaya.com

07949 385 858
Opening Time: 9-00a.m to 8-00p.m.

### தேவர்கள் தமிழர்

*ஒரு பேப்பர்* காரன்களுக்கு, நரகாசுரன் திராவிடன் என்று சொல்கிறீர்கள். இது ஆசிரியர்கள் சொல்லும் கதை என்றும் எழுதுகிறீர்கள். இராமயணத்தில் இராமனும் அவனைச் சேர்ந்தோரும் மனிதர்களாகவே சொல்லப்படுகிறார்கள். மகா பாரதத்திலும் பாண்டவர்களும், கொளரவர்களும் மனிதர்களாகவே சித்தரிக்கப்படுகிறார்கள். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் யுத்தம் நடப்பது. தமிழ்க் கடவுளாம் முருகனின் கந்தபுராணத்தில் கந்தபுராணம் ஆசிரியர் தம் படைப்பு என எண்ண இயலவில்லை. ஆறுபடை வீடுகளையும் தமிழ் நாட்டில் கொண்டிருந்த முருகன் தேவர்களுக்காக போராடினான் என்றால் அங்கே சொல்லப்பட்டுள்ள தேவர்கள் தமிழர்களாகவன்றோ இருக்க வேண்டும்.

நாம் எதற்காக எம்மை அசுரர்களாக எண்ண வேண்டும். இராம யணத்திலும் அனுமன் முதலா னோரை வாலுள்ள குரங்குகள் என்று தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இல்லை எம்மைத்தான் சொன் னார்கள் என்று நாம் சொல்வது எமது தாழ்வு மனப்பான்மையின் ஒரு வெளிப்பாடே.

— *ம. சதானந்தன்*

### பேரணியாம்

தமிழ்தேசியத்திற்கு எதிராக சிறீலங்கா அரசின் ஆதரவுடன் தேசவிரோத சக்திகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி புஸ்வாணமாகிய வேடிக்கை புருசெல்சில் நடத்திருக்கிறது. சிங்களவர்கள் சிலர் உட்பட இருபது வரையானோரே இதில் பங்கு கொண்டனர். 20 பேரே இதில் கலந்து கொண்டதால் சந்தியில் நின்றுவிட்டு கலைந்து செல்லுமாறு உள்நாட்டு காவல்துறை அதிகாரிகள் இவர்களிடம் தெரிவித்துள்ளனர். இந்த நிகழ்வைப் படம்பிடிக்க முற்பட்ட புருசெல்ஸ் வாழ் தமிழ் இளைஞர் ஒருவர் இப்பேரணியில் கலந்து கொண்ட குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளார். சனநாயக நாடொன்றின் தலை நகரில் சிறீலங்காவின் துணைப் படை வன்முறை நடாத்தப்பட்டது. சிறீலங்காவில் இயங்கும் துணைப் படையினர் இந்த 20 நபர்களுக்குள் அடங்கி இருந்தமையை இந்தக் காடைத்தனம் நிரூபித்துள்ளது என காயப்பட்ட அந்த தமிழ் இளைஞர் தெரிவித்துள்ளார்.

— *அரவிந்தன்*

### Bright Future

I was very fortunate to read the past two issues. The articles published therein are very descriptive and carry great valuable ideas. Especially the news about the plight of Sri Lankan Tamils could open the eyes of the English speaking people to help us to lead a "PEACEFUL LIFE". I was longing to see our plight published in English Language so that it could reach the English Nation.

I would suggest that the News and Articles in English be published in such a way so that it could be taken out and sent to several Organisations & People who will come to know and speak for us.

Wishing 'ORU PAPER' for a Bright Future.

*- C.Rasaratnam*

### எல்லாளனுக்கு

எல்லாளனுக்கு சரியான பதில் அளித்திருந்தார் நிஸ்தார். தேவை யில்லாமல் அதுவும் ஒசியில் ஒரு பக்கம் கிடைச்ச வாசியில எழுதித் தள்ளினார். நல்ல வேளை நிஸ்தார் சரியான பாடம் கற்பித்துவிட்டார். இனியாவது எல்லாளனை சுருட்டி கட்டிக்கொண்டு இருக்கச் சொல்லுங்கோ. கடவுளைப் பற்றிக் கதைப்பதற்கு என்ன அருகதை இருக்கிறது அவருக்கு.

— *ச.சிதம்பரம்*

### அம்பலம்

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே தனி நாட்டை உருவாக்கி இருக்கிற உண்மையை மறைத்துக் கொண்டு ஒற்றையாட்சிக் கோட்பாட்டைப் பற்றி சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ச பேசிக் கொண்டு இருந்திருக்கிறார் அதனை சர்வதேச ஆங்கிலப் பத்திரிகையான ரைம்ஸ் வெளியிட்டு அம்பலப்படுத்தி இருக்கிறது.

— *வரதன்*

### கோகிலாக்கா

*ஒரு பேப்பர்* காரர்களுக்கு, அதென்ன நீங்கள் எப்படித்தான் சொன்னாலும் அந்த "ஓசி" என்ற சொல்லை எடுக்க மாட்டம் எண்டு அடம்பிடிக்கிறியள் அண்டைக்கு கோகிலாக்கா எண்டு ஒரு அக்கா எவ்வளவு கவலையா தனக்கு நடந்ததை எழுதி இருந்தா. ஆனால் நீங்க இன்னும் மாத்திறது மாதிரித் தெரியேல்லை. என்ன விளையாட்டு இது.

— *சரவணன்*

### சிங்கிள்ஸ்

உங்கட கதையைக் கேட்டு ஓடிப்போய் வாங்கிக் கொண்டு வந்து பாட்டைப் போட்டா எல்லாம் இங்கத்தைய பாணியில கிடக்குது. உண்மையைச் சொன்னா நல்லாத் தான் இருக்குது ஆனால் எனக்கு உப்பிடிப் பாட்டுகள் பெரிசா விருப்பமில்லை. என்ர பெடியன் காருக்க போட்டுக் கொண்டு திரியிறான். உதை ஏன் இப்ப சொல்லுறன் எண்டா, உங்கட பேப்பரில எழுதேக்க எப்பிடியான பாட்ட எண்டு எழுதினீங்க எண்டா சனம் ஏமாறாது. இல்லாட்டி என்ன மாதிரியான ஆக்கள் ஏமாந்து போடுவினம். எனக்கு அந்த மாதிரி பாட்டுக்கள் ஏதோ பிடிக்கிறதில்லை எண்டாலும் அதை வாங்கினதில எனக்குச் சந்தோசம் தான். எப்பிடி இருந்தாலும் எங்கட பிள்ளைகள் எல்லோ. நாங்க தூக்கி விடாம ஆர் தூக்கிறது.

— *திருமதி சந்திரகாசன்*

### அக்கா நீங்க தமிழா

நான் தலையங்கத்தைப் பாத்துப் போட்டு நானும் ஏதோ ஆரோ அக்காவின்ர சுவாரிசயமான கதையாக்கும் என்றுவிட்டு வாசித் தால் நான் நினைத்ததுக்கு எதிர் மாறாக இருந் தாலும் சுப்பர்! கனபேர் இவைகளைக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார் கள். அதில ஒன்றினை விட்டுவிட்டீர்கள். வைத்திருக்கிற வாகனத்திற்குள் முன்னால் ஒரு சின்னப் பொம்மை அல்லது ஒரு சீடி தொங்கியபடி இருக்கும் அதை விட முன் கண்ணாடியோடு உள்பக்கமாக ஒரு சின்ன சிலையினை யூகு போட்டு ஒட்டி வைத்திருப்பார்கள்.

— *சங்கர்*

### கள்ளர் கூட்டம்

இருந்தாலும் இது சரியில்லை. எல்லா நாட்டிலயும் இந்த மாதிரியான கூத்துக்கள் நடந்து கொண்டுதானே இருக்கிறது. அதுவும் அவங்கள் கோடிக் கணக்கில உழைக்கிற படியால் அப்பிடி இப்பிடி எண்டு சுத்தத்தான் பாப்பாங்கள். நீங்கள் அவங்களைப்போய் கள்ளர் கூட்டம் எண்டு எழுதினா எப்பிடி? என்ர நண்பனுக்கு உங்கள் மேல் பயங்கரக் கோபம் சொன்னால் நம்பமாட்டியள் அவங்கள் களவெடுத்ததற்கு உங்களை ஏசிக் கொண்டு இருக்கிறான். என்ன காரணத்துக்காக அந்த கூட்டத்திற்காக நீங்கள் ஏச்சு வாங்க வேண்டும் சொல்லுங்கோ பாப்பம். அதனால இப்படி எல்லாம் தயவு செய்து எழுதாதேங்கோ. மீண்டும் சந்திப்போம்.

— *சுபாஷ்*

### எழுத்தாளர் ஏகாம்பரம்

அண்ணை அந்த ஈழநாதனுக்கு ஒரு கும்பூடு, சுப்பர். எப்படி அண்ணை உங்களால முடியுது. நானும் எது எண்டாலும் எழுதவேணும் எண்டு நினைக்கிறது ஆனால் ஒண்டும் சரி வாறேல. அண்ணை ஈழநாதனிட்டச் சொல்லுங்கோ தொடந்து உப்பிடி எழுதச் சொல்லி. பொண்டில என்ன அண்ண வடிவு எல்லாம் பாக்கிற வன்ர கண்ணிலதான் இருக்கு. சுப்பர் அண்ணை.

— *சதீஸ்கரன்*

## கனடாப் போஸ்டில் வந்த மெயில் . . .

*அன்பின் சிவாவிற்கு*

கடிதம் கிடைச்சதடா நல்ல சந்தோசம். பறுவாயில்ல நீயும் பதில் எல்லாம் எழுதப் பழகிற்றாய். நான் நினைச்சன், தண்ணியில எழுதின எழுத்து மாதிரி பதில் திருப்பி வராது எண்டு.இஞ்சை சரியா கஷ்டப்பட்டாலும், நாங்க நலம் எண்டு சொல்லுறது தானே வழமை.

அது சரி மச்சான் எனக்கு மண்டையில மயிர் போன விசயம் உனக்குத் தெரியாதே? அது டபிள் அடிக்க முதலே போயிற்றுதடாப்பா. அப்ப ஊரில ஒரு பக்கத்தால போகேக்க அறிவாளிகளுக்கு அப்பிடித்தான் எண்டு சொல்லி பெருமப்பட்டுக் கொண்டிருந்தன். இப்ப ஒரு பிரதேசமே காலியாகீற்றடாப்பா. கொஞ்ச நாளைக்கு முன்னம், கொஞ்சம் மிச்சம் கிடந்தது. 'முடி வளரும் வாங்கி வையுங்கோ? எண்ணி இருபத்தைஞ்சு நாளில கொட்டின முடி எல்லாம் திரும்பி வளரும்' எண்டு சொல்லி ஒரு எண்ண வித்தாங்கள் மச்சான். வாங்கி வைச்சுவிட்டன், அவளவுந்தான் உப்ப முத்தவெளி கிளியறா தெரியுதடாப்பா.

என்ன கனடாவில வந்த புதிசில கனபேருக்கு என்ன மாதிரி மொட்டையாத்தான் இருந்தது. இப்ப மயிர் கொஞ்சம் வளந்திருக்கு. அதப்பாத்து நானும் நினைச்சன் எல்லாரும் உந்த எண்ண வச்சுத்தான் வளத்தவையாக்கும் எண்டு. பிறகுதான் விளங்கிச்சிது, அவையள் எல்லாம் மயிர் நட்டிருக்கினம் எண்டு. பறுவாயில்ல கலியாணத்துக்கு முதல் எப்பிடியாவது மயிர் நடவேணும் என்டு முடிவோடதான் இருக்கிறன். சரி என்ர மயிர்க்கதையில உன்ர கதைய மறந்து போனன்.

நீ கார் வாங்கின எண்டு எழுதியிருந்தாய். இன்சூரன்ஸ் கனகாசு எண்டு சொல்லுறாய். இஞ்ச மாமா பிடிக்கேக்க காட்ட ஒரு மட்ட இருந்தா சரி இன்சூரன்ஸ் தேவையில்ல எண்டு கனபேர் சும்மா ஓடித்திரியிறாங்களடா. முந்தி ஒரு காலத்தில கார் அடிபட்ட உடன இங்க சிலபேர் நாரியப் பிடிச்சுக் கொண்டு இருந்தவை. அந்த மாதிரி இன்சூரன்ஸில கிளெய்ம் பண்ணிப் போட்டு, நல்ல சுகமா ஊர் சுத்திக்கொண்டு திரிஞ்சவை. இப்ப எல்லாம் நிப்பாட்டிப் போட்டாங்கள். அந்த காலத்தில, காரால அடிபடுறதையே ஒரு முழுநேர உத்தியோகமா செய்தவையும் இருக்கினம்.

சரி அதவிடு சினிமாக்காரர் பற்றி எழுதியிருந்தாய் மச்சான், உண்மையிலையே கேக்க ஆச்சரியமா இருக்கடாப்பா. லண்டன் தமிழனும் கனடாத் தமிழனும் ஒரே இடத்தில இருந்து வந்தவங்கள் தானே? சந்தேகமா இருக்கடாப்பா... அதவிட அங்கயிருந்து வாறவை, இஞ்ச இருக்கிற ஆக்களிண்ட தலையில மிளகாய் அரைச்சுப் போட்டுப் போடுவாங்கள். இதுகள் பாவம், அடுத்த நேர உலை வைக்கக் கூட காசில்லாம, கடனுக்கு மேல கடன்பட்டு சீரழிஞ்சு போகுதுகள்.

வாற கிழமை மாவீரர் நாளும் வரப் போகுது. எங்கட சனங்கள், இத மிகவும் எதிர்பாத்துக் கொண்டு இருக்குதுகள். இத மாதிரி சில நிகழ்சிகள் தான், மனசுக்கு நிம்மதியையும், எங்கட நினைவுகளை மீட்டெடுக்கவும் உதவுறது. என்ன இருந்தாலும், ஊரில அந்த மண்ணில நிண்டுகொண்டு, கையில ஒரு மெழுகுவர்த்தியையும் பிடிச்சுக் கொண்டு, 'எங்கே... எங்கே... ஒரு தரம் உங்கள் விழிகளைத் திறவுங்கள்' எண்டு மனமுருகிப் பாடுறது போல வராது மச்சான். உங்க எப்படி நினைவு தினக் கொண்டாட்டங்கள் மச்சான்?

உப்பிடி கனடாவில கனக்க நடக்குதடாப்பா. கனடாப் புதினங்கள எழுதினால் கனடாப் போஸ்ரே நிறைஞ்சு போடுமடாப்பா, அதால பிறகு எழுதிறன். சொன்னோப்போல ஒண்டு சொல்ல மறந்து போனன். நானும் நலம். நலம் அறிய ஆவல்.

*அன்பின் நண்பன்*
*பவா*

**Tamsons**
Accountancy & Tax Consultancy Ltd.



65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
**Tel: 020 8313 0800**

* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, NOVEMBER 18, 2005, ISSUE 35

## இன்றைக்கு மட்டுந்தான் வெற்றி!

இந்த இதழ் உங்கள் கைகளை வந்தடையும் போது சிறிலங்காவுக்கான புதிய அதிபர் தெரிவு செய்யப்பட்டிருப்பார். ஈழத்தமிழ் மக்கள் சிறிதும் சிரத்தை எடுக்காத இத்தேர்தலில், தனித்து சிங்கள மக்களின் வாக்குகளே அவரது வெற்றியை தீர்மானித்திருக்கும். தேர்தல் பிரச்சாரங்களின்போது, சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த, இரண்டு முன்னணி வேட்பாளர்களுமே தமது சமாதான முகத்திரையை களைந்து, தாங்கள் எவ்விதம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்த முயன்றோம், பதவிக்கு வந்தால் எப்படியெல்லாம் நடந்து கொள்வோம் என குண்டு துளைக்காத கண்ணாடி கூண்டிலிருந்து இனவாதம் கக்கினார்கள். எந்த விதமான குழப்பத்துக்கும் இடமளிக்காமல், இவ்விதம் தங்களை வெளிப்படையாகவே இனங்காட்டியமைக்காக இவர்களுக்கும், இவர்களோடு கூட்டுச் சேர்ந்துள்ள இடதுசாரிகள், வலதுசாரிகள், இனவாதிகள் எல்லோருக்கும் தமிழ் மக்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இப்போது வெற்றி பெற்றவர் அதிகமாக வாய் வீரம் பேசி, சிங்கள மக்களை திருப்திப்படுத்தியவராக இருக்கலாம். ஆனால் இனி அவர் நடைமுறை யதார்த்தத்துத்துக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும்.

சிறிலங்காவின் ஆட்சியமைப்புக்கு புறம்பாக தங்களின் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளக் கூடிய வல்லமையை தமிழர்கள் பெற்றுவருவதனால்தான், தமிழர்கள் இத் தேர்தலில் அக்கறை செலுத்தவில்லை, எங்கே சிங்களத் தலைவரகள் போருக்குப் புறப்பட்டு விடுவாரகளோ என தமிழர்கள் அஞ்சி நடுங்கிய காலம் மலையேறிவிட்டது. இது பிரபாகரனின் காலம்.

இதனையே வுஐஅந சஞ்சிகையின் சமீபத்திய இதழ், இலங்கை தீவின் தற்போதய நிலவரம் பற்றி குறிப்பிடுகையில் புலிகள் தனிநாட்டை உருவாக்கியிருக்கும் உண்மையை முன்னணி வேட்பாளரகள் மறைத்துவருவதாக குறிப்பிட்டிருந்தது.

சிறிலங்காவின் புதிய தலைவருக்கு பிளவுபடாத இலங்கைத் தீவில் இனமும் நாட்டமிருப்பின், ஒற்றையாட்சி முறைக்கு புறம்பாக தமிழர்களின் அடிப்படை கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வொன்றை காண விடுதலைப் புலிகளுடன் பேச முன்வரவேண்டும்,. இதற்கு முதற்படியாக விடுதலைப்புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபை, ஆழிப்பேரலை புனரமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு ஆகிய இரண்டையும் முழுமையாக அமுல்படுத்த ஆவன செய்யவேண்டும். இல்லாவிடின் அவரது ஆட்சிக் காலத்திலேயே தேசத்தின் எல்லையை மீள வரையறை செய்யும் நிலைமைக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

## ஒரு பேப்பர்

*வாசகர்களுக்கு வணக்கம்!*

*தாயக விடுதலைக்காய்*

*தம் இனிய இளைய உயிர்களை*

*அர்ப்பணித்து விட்ட அனைத்து*

*மாவீரர்களுக்கும் பொதுமக்களுக்கும்*

*எமது வீரவணக்கங்கள்!*

*தமிழர் உலகின் எக்கோடியில் இருந்தாலும்*

*அத்தனை பேரையும் இணைக்கிறது*

*மாவீரர் நினைவுக் காலம்!*

*அப்பேற்பட்ட இக்காலத்தில், அவர்களின்*

*இலட்சிய நோக்கை நெஞ்சில் நிறுத்தி*

*எங்கள் தாயக விடுதலைக்கான*

*உணர்வினை மறுபடி ஒரு தடவை*

*வலுப்படுத்திக் கொள்வோம்.*

*இம் முறையும் கார்த்திகை 27 அன்று*


*ஒரு முறை ஓங்கி உரைப்போம்!*

*தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!!!*

**- ஒரு பேப்பர்**

EDITORIAL

# Presidents may come and go in Sri Lanka, but the politics of the country will never change



One of the perennial lessons that could be learnt from looking at the history of Sri Lanka since the Bandaranaike clan came to have a stranglehold on the political life of the country is that nothing there changes; not even if the Bandaranaikes depart from the political scene as could happen now. Sinhala Buddhist racists will always be there; from the K.M.P.Rajaratnes of the Bandaranaike period, the Cyril Mathews of the Jayawardene era and the JVPs and JHUs of today. Tamil collaborators will be there too, from the Durayappas and Thiagarajas to the Devanandas and Sangarees of today. It will be the same drama, the same script, but with a change in the cast. So why bother whether it is a Ranil or a Mahinda that the Tamil people would have to deal with.

Mahinda Rajapakse's true political nature was apparent from the very start when he signed pacts with the JVP and the JHU. The Tamils knew where they stood with him. Ranil Wickremasinghe may be a colourless personality, but his image among the wider Tamil community was favourable. After all, didn't he sign a peace deal with Tamil leader Pirabhakaran? He was of course taken aback (as he confided privately later) that when he sent the draft of the Memorandum Of Understanding to Kilinochchi he expected the Tamil leader to suggest various changes, and the process likely to get delayed, but to his surprise the document came back *in toto* duly signed by Mr.Pirabhakaran. It was therefore natural that Mr.Wickremasinghe and his party took the Tamil votes in the northeast for granted, unlike in the case of the Muslim Congress and Thondaman's Ceylon Workers' Congress with both of which he had to do some wooing.

What revealed Ranil's and the UNP's true nature was the result of some unsettling news that came from Kilinochchi on November 10, seven days before the election. When the leader of the Tamil National Alliance R.Sambandan said in a statement there, after a meeting with LTTE political leader Thamilselvan that the Tamil people do not have reason to be concerned with the presidential election, there was consternation among UNP circles in Colombo. Mr.Sambandan said:..."*The peace process is going nowhere. We have felt the effects of both a UNP and a UPFA government during the past four years and the Tamil people have no faith in the Sinhala leadership...nothing worthwhile would be achieved by supporting either of the two leading candidates in the Sri Lankan presidential election*"

Having taken the Tamil votes of the northeast for granted, - 900,000 votes in Jaffna and the Vanni plus another 900,000 in the East which could have made all the difference to bring Ranil victory in a close contest - this came as a bitter pill to swallow.

The immediate reaction of even a man like Milinda Moragoda who was a trusted associate of the UNP leader was astonishing, to say the least. In a mood of anger and disappointment, he let the cat out of the bag. He went to the extent of claiming that the UNP was responsible for splitting the LTTE and the emergence of Karuna. It was a shameless attempt to gain some credibility among the anti-LTTE Sinhalese Buddhist vote bank, to compensate for loss of Tamil votes. Gamini Dissanayake's son Navin Dissanayake also made a nonsensical claim that under the UNP's "international safety net" India and the U.S. will come to help them should the LTTE declare war. All these only justified what Mr.Sambandan said in Kilinochchi. An embarrassed UNP leader tried to so some damage limitation exercise, but the UNP's peace mask was exposed anyway.

So, as we have a new President in Sri Lanka, we can be sure of something else that would never change in Sri Lanka. It is the spirit of violence that follows all elections.

***We have felt the effects of both a UNP and a UPFA government during the past four years and the Tamil people have no faith in the Sinhala leadership...***

கருத்து

# கொஞ்சம் யோசிங்க . . .

**எல்லாளன்**
*(ஒரு பேப்பர்)*

விடுதலைக்காய் களமிறங்கி வித்தாய்ப் போனவர்கள் மாவீரர்கள். யார் அவர்கள் விண்ணில் இருந்தா குதித்தவர்கள்? இல்லை எங்களுடன் பள்ளிக்கூட முத்தத்தில் ஓடி விளையாடித் திரிந்தவர்கள். இன்று வளரும் விடுதலைச் செடிக்கு வித்தாய்ப் போயிருக் கிறார்கள். வாழ ஆயிரம் வழி இருக்க இப்படித்தான் வாழவேண்டும் என்று சொல்லி அப்படி வாழ்ந்து விதைக்கப்பட்டு இருக்கிறார்கள். வரும் வாரம் எம் தோழர்களின், எம் சகோதரர்களின் வாரம். அவர்களை, அவர்கள் செய்த தியாகத்தினை நினைவு கூரும் வாரம். அந்தத் தோழர்கள் தந்த குருதி விடுதலை தருவது உறுதி.

ஆனால் எனக்கொரு ஆதங்கம் அது என்ன வெனில் மாவீரர்களை தெய்வங்கள் என்று விழிப்பது சரியா என்பது தான் அது? இது எமக்குள் விடுதலைக்கான உணர்வினை வைத்திருக்க உதவுமா?.

என்னைப் பொறுத்தவரையில் மாவீரரும் மனிதர்கள்தான் ஆனால் அவர்கள் இலக்கும் போக்கும் வித்தியாசமானது. சிறந்தது. எங்களைப் போல் வழமையான வாழ்க்கை முறையினை நடத்தாமல் அந்த வாழ்க்கையினை தொடர்ந்து வரும் சந்ததியும் தங்கு தடையின்றி நடத்து வதற்காக தம் வாழ்க்கையினை அதற்காய் அர்ப்பணித்தவர்கள். அவர்கள் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். என்றும் எம் நெஞ்சினுள் நிறுத்தி வைக்கப்பட வேண்டியவர்கள்.

ஆனால் எந்த வடிவில்? தியாகிகளாய், எங்கள் சகோதரர்களாய், பிள்ளைகளாய், உறவுகளாய் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள். அவர்களை ஏன் தெய்வமாக்க வேண்டும்? தெய்வமே இருக்கா இல்லையா என்று சங்கடத்தில் உள்ள போது மாவீர தெய்வங்கள் என்பது எந்த அளவிற்கு பொருத்தப்பாடானதாக இருக்கும் என்று தெரியவில்லை.

விடுதலை வீரன் சேகுவாரா பற்றி அறிந்திருப் பீர்கள் குறைந்த பட்சம் மேற்கத்தியரின் ரீ-சேட் களில் மீசை தாடியுடன் ஒரு தொப்பி அணிந்த ஒருவரின் முகத்தினைப் பார்த்திருப்பீர்கள் அவர் தான் சேகுவாரா. ஆர்ஜண்டீனாவில் பிறந்து கியூபா வில் வாழ்ந்த சேகுவாரா, ஒரு மருத்துவர், ஒரு காலத்தில் கியூபா தேசிய வங்கியின் தலைவர், தொழில் அமைச்சர், நிதியமைச்சர். இப்படி இருந்தவர் பின்னர் பொலிவிய விவசாயிகளை ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுவிக்க ஆயுதப் புரட்சி செய்தார். சில காலங்களின் பின் பொலிவிய ராணுவத்திடம் அகப்பட்டு சித்திரவதைக்குட்பட்டு இறந்தார்.

சேகுவாரா கொல்லப்பட்ட கிராம மக்கள் அவரை ஒரு புனிதர் என்று வணங்குவதாக மேற்கத்திய தகவல் தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன. அதைவிட சேகுவாராவிற்கு இயேசு கிறீஸ்துவின் சாயல் இருப்பதாகவும் சொல்லுகின்றன. ஏன்? சேகுவாரா உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிப் போராட்டங்களுக்கு ஆதர்சப் போராளியாக இருக்கிறமையே இதற்குக்காரணம்

சேகுவாராவில் இறை மகத்துவம் திணித்து விட்டால் அவர் ஏதோ இதற்காகவே அனுபப்பட்டவர் என்கிற எண்ணம் வரும் அதனால் புரட்சிக்கு ஒவ்வொருவரும் இன்னொரு சேகுவாராவை எதிர்பார்ப்பார்களே அன்றி அவர்கள் உருவாக மாட்டார்கள். இப்படிப் பல திட்டங்களுடன் தான் உலக அரசியலில் மேற்கத்தேயம் இயங்குகிறது.

இப்படி இருக்கிறபோது நாங்களே தெய்வங்கள் என்று ஆரம்பித்து வைத்தோமேயானால் பின்னர் அவர்களுக்கு எங்களின் விடுதலை உணர்வினை சுண்டு விரலினால் தூக்கி எறியும் வழிகள் இலகு வாகக் கிடைக்கும். நான் ஏதோ இன்றைய நிலையினைக் கருத்திற் கொண்டு சொல்ல வில்லை. எதிர்காலத்திலும் இங்கு வாழும் சந்ததி யும் எம் மாவீரர்களை உறவுகளாக புரட்சிகரப் போராளிகளாகத்தான் பார்க்க வேண்டுமே தவிர கடவுள் அவதாரம் எடுத்தவர்களாகவோ அல்லது இதற்காகவே பிறந்தவர்களாகவோ அல்ல.

தலைவரை தெய்வம் என்கிறார்கள், அவரிடமே போய் அண்ண நீங்க தெய்வம் என்றால் நிச்சயமாக கோபப்படுவார். மாலை கட்டிப் போனால் மாமா முறைப்பார் பாட்டுக்கட்டி அடி நிண்டால் பாத்துச் சிரிப்பார் என்ற பாடல்தான் நினைவுக்கு வருகிறது. அவர் ஒரு சாதாரண மனிதராக வாழவேண்டும் என்றே ஆசைப்படுபவர் என்பது அவரை நேரே அறியாவிட்டாலும் அவரது வாழ்வு குறித்ததான வெளியீடுகளைப் பார்ப்பவர்களுக்குத் தெரியும்.

அவர் எனக்கு அண்ணா என் மகனுக்கு மாமா என் தகப்பனுக்கு பிள்ளை பொதுவாக எங்களுக்கு அவர் தலைவர். அப்படிச் செய்ய வேணும் இப்படிச் செய்யவேணும் என்று யாரும் யோசிக்கலாம். ஆனால் இன்றைய நிலைக்கு தமிழினத்தை வந்து நிக்க வைத்த அவர் ஒரு செயல்வீரன். தெய்வம் கிடையாது.

கணவனே கண்கண்ட தெய்வம், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்கிறோம் எத்தனை பேர் இதனை உண்மையில் நூறு வீதமாக ஏற்றுக் கொள்கிறோம். யாராவது அப்பா அம்மா என்று கும்பிடுகிறார்களா (பிரரத்தனை)?. இல்லை! இவை எல்லாம் அடையாளமாக சும்மா சொல்லப் பட்டவைகள். எங்களுக்கு அடையாளம் தேவை இல்லை உண்மை தேவை! அண்ணை, தலைவர், தம்பி, இப்படி அவர் எங்களுடன் இருக்கட்டும் அவரை தூரே தள்ள வேண்டாம்.

தலைவரின் காலில் விழுதல், தலைவருக்கு முதுகு தடவுதல், தலைவருக்கு வால்பிடித்தல், இப்படியான நடவடிக்கைகள் தமிழகத்தில் இருக் கட்டும், தமிழீழத்துக்கு வேண்டாம். மாவீரர் ஆகிலும் தேசியத் தலைவர் ஆகிலும் நாங்கள் எல்லோருமே தமிழீழத்து உறவுகள்.

எங்கள் அன்பு அண்ணைக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள். மாவீரர்களுக்கு சிரம் தாழ்ந்த வணக்கம்!!!

காலம் கரையலாம்
நாலும் மறையலாம்
உங்கள் நினைவுகள்
அழியாது
அழியும் நாளது
வருமே என்றால்
உலகில் தமிழினம்
இருக்காது

ஒரு பேப்பர்
ORU PAPER

# Some facts about Sri Lanka's presidential polls

• Thursday's presidential polls will be the fifth since J.R.Jayewardene promulgated a new constitution in 1978, and assumed office as the country's first executive president. He won a second term as president at the elections held in **1982**.

• The only time a Tamil contested the presidential election was in 1982. The contestant was the late Kumar Ponnambalam, who came fourth among six, beating the redoubtable Sama Samajist Dr.Colvin R.De Silva and Vasudeva Nanayakkara. The results were as follows:-

| | |
|---|---|
| J.R.Jeyawardene | 3,450,811 |
| Hector Kobbekaduwa (SLFP) | 2,548,438 |
| Rohana Wijeweera (JVP) | 2,73428 |
| Kumar Ponnambalam | 1,73,934 |
| Dr.Colvin R.De Silva | 58,531 |
| Vasudeva Nanayakkara | 17,005 |

In a statement sent to the *Saturday Review*, Jaffna, Mr.Ponnambalam said he saw the election not as the election of a person to office, but as an opportunity to use it as a referendum to obtain the verdict of the Tamils in *the entire country* to the proposition that *"The Tamil nation desires to set up an independent state forthwith on the basis of its inalienable right of self-determination"*

Kumar Ponnambalam was the only candidate to win votes even in districts that he did not visit or canvass. In the Amparai district, renamed Digamadulla following State-sponsored Sinhalese colonization, he got 8,070 votes as against the JVP's 7,679, Colvin R.De Silva's 967 and Vasudeva Nanayakkara's 377. In the Polonnaruwa district he got 228 votes, in Kalutara 443, in Matara 474, in Galle 425, in Kurunegala 509, in Ratnapura 422, in Kegalle 376 and in Anuradhapura 22. It has to be noted that except in Digamadulla, all other votes were not only won outside the northeast, but also signalled a vote for the Tamil right of self-determination.

* At the **1988** elections Ranasinghe Premadasa became president defeating Mrs.Srimavo Bandaranaike. He secured 2,569,199 votes as against Mrs. Bandaranaike's 2,289,960. A third candidate Oswin Abeygoonesekera polled a mere 235,719 votes. Following President Premadasa's assassination on May 1, 1993, the Prime Minister Dingiri Banda Wijetunga was elected to the post.

* The **1994** elections saw Mrs. Chandrika Kumaratunga become an easy winner after her UNP opponent Gamini Dissanayake who was assassinated was replaced by his widow Sirima Dissanayake. She won 4,709,205 votes as against Sirima's 2,715,285.

* At the **1999** elections, Mrs. Kumaratunga won a second term defeating Ranil Wickremasinghe. She polled 4,312,157 votes as against Mr.Wickremasinghe's 3,602,748. A *record number of* eleven others, including Vasudeva Nanayakkara (for the second time) were also in the field, but made no impact on the voters. That was the second successive defeat for the UNP.


The registered number of voters at this election was the highest ever, the total being 13,327,160. Out of the 160 electorates, 24 are in the northeast.

**Registered Votes – 2005**

| Districts | Registered Votes |
|---|---|
| Colombo | 1,468,537 |
| Gampaha | 1,364,180 |
| Kalutara | 764,305 |
| Mahanuwara | 907,038 |
| Matale | 321,876 |
| Nuwara Eliya | 447,225 |
| Galle | 732,289 |
| Matara | 562,987 |
| Hambantota | 396,595 |
| Jaffna | 701,938 |
| Vanni | 250,386 |
| Batticaloa | 318,728 |
| Digamadulla | 396,453 |
| Trincomalee | 238,755 |
| Kurunagalle | 1,124,076 |
| Puttalam | 470,604 |
| Anuradhapura | 596,808 |
| Polonnaruwa | 263,609 |
| Badulla | 533,163 |
| Moneragala | 276,109 |
| Ratnapura | 668,217 |
| Kegalle | 583,282 |
| **Total** | **13,327,160** |

# Expulsion of Jaffna Muslims; part 2 – The Context

By: Sachi Sri Kantha
*for Orupaper from Japan*



On 4th June 1937, at the gathering of American Writers' Congress, a veteran (at the age of 37) war reporter delivered a lecture in New York. Here I reproduce some of his thoughts because, decades ahead he had anticipated the musings of analysts like D.B.S.Jeyaraj.

"When men fight for the freedom of their country against a foreign invasion, and when these men are your friends – some new friends and some long standing – and you know how they were attacked and how they fought, at first almost unarmed, you learn, watching them live and fight and die, that there are worse things than war. Cowardice is worse, treachery is worse, and simple selfishness is worse."

This war reporter was none other than Ernest Hemingway. He had seen real battlefields and he had been seriously wounded. And unlike the analysts like Jeyaraj, he knows by first hand there are quite a few things worse than war – and he listed cowardice, treachery and simple selfishness among these. Hemingway earned his fame for both non-fiction writing and fiction writing. He could clearly distinguish between non-fiction and fiction. But, the tragedy with Jeyaraj is that he indulges in fiction writing and passes it as *non-fiction* analysis.

In this part, I provide the contrast in the descriptions provided by Jeyaraj for the expulsion of Jaffna Muslims [*Sunday Leader*, October 30, 2005], and another international source, which also have been critical of LTTE, as per the context that event. The complete exclusion of specific numbers by Jeyaraj in his descriptions when it comes to Tamil victims of Sri Lankan state violence and Muslim homeguard violence, while at the same time inclusion of bloated numbers when it comes to Muslim victims in Jaffna in 1990, clearly reveals the partiality of Jeyaraj for indulging in an LTTE smear campaign.

How Jeyaraj (1) soft pedals the decisions made by one of the then ruling top dogs of the Government of Sri Lanka (Ranjan Wijeratne), and (2) attempts to create mischief and confusion between the Northern Tamils and Eastern Tamils, by provincial name calling should be exposed. Also, his penchant for provoking distrust between Northerners and Easterners among Eelam Tamils need to be scrutinized.

Yes, creating mischief and confusion is a strategy in which slick operators and selfish agents excel. The 'Savadaal Vaithi' character played by C.K.Nagesh in the movie *Thillana Mohanambal*, also portrayed this mischief-confusion strategy of slick operators splendidly. For what? Not for any altruistic purposes to serve the community at large. Rather, for the thrill of selfish aggrandizement, and for the cheers from the anti-LTTE groups and interests.

## Jeyaraj's version of events during the second half of 1990 and 1991

This is how Jeyaraj has provided the context for the Muslim expulsion from Jaffna at the end of October 1990.

"...Tamil - Muslim hostilities were increasing in the east. The desertion of some Muslim cadres in the LTTE and a few of them going over to the enemy incensed the eastern LTTE under Karuna (military) and Karikalan (political). Many other Muslim cadres in the LTTE were executed by the leadership. An anti - Muslim spirit pervaded the LTTE. On the other hand the state also exploited and aggravated these feelings. Many Muslim anti - social elements were inducted as homeguards. These sections collaborated with the security forces in promoting anti - Tamil violence. In some cases Muslim homeguards were responsible for Tamil civilian massacres. Some Tamil hamlets and villages were destroyed by Muslim homeguard led mobs. They were given cover support by sections of the security forces.

The LTTE in turn responded with equally gruesome massacres of Muslim civilians. The Sammanthurai and Kattankudi attacks on mosques and massacre of civilians at the Saddam Hussein model village of Eravur being notorious examples. Though Tamil - Muslim relations were at a low point in the east the situation was quite different in the north. Both communities continued to co - exist there peacefully. One reason being that Muslims were a small minority posing no threat to the Tamil majority.

> ***The tragedy with Jeyaraj is that he indulges in fiction writing and passes it as non-fiction analysis***

This situation of Muslims living peacefully in the north while tensions prevailed in the east was unacceptable to the eastern Tigers. A delegation led by Karikalan came to the north to persuade Pirapaharan that "stern" action should be taken against Muslims. Karikalan apparently wanted a lesson to be taught to the Muslims...."

Then, Jeyaraj offered another cockeyed reason, which exposes his complete ignorance on military affairs and intelligence gathering in times of war. According to him, after LTTE found about 75 swords concealed in a Muslim shop in Chavakachcheri, "The LTTE intelligence known for its excessive paranoia suspected a greater conspiracy. It was suspected that the security-intelligence apparatus could be using Muslim businessmen travelling frequently to Colombo as agents to engage in sabotage or act as spies. Pre-emptive action was required it was felt."

One popular Tamil proverb *Kaluthaiku Theriyuma Karpoora Vaasanai?* [Does the donkey knows anything about camphor scent?] sums up Jeyaraj's ignorance on military science. His ignorance was nakedly exposed last year, when he bloated Karuna's military strength in the Eastern Eelam during March 2004, only to see that his hero making a 'run for life' retreat to Colombo on Easter Sunday. The volatile situation which prevailed in the North and East Eelam during the second half of 1990 was not so simple and not so clear as black and white. Jeyaraj has bloated the number of Muslims expelled from the Northern province as follows:

"Around 55,000 to 60, 000 Muslims were expelled from the northern mainland by the LTTE. Together with those of the peninsula the Muslims driven out from the Northern Province numbered 80,000 to 85, 000 in 1990."

In part-1 of this commentary, I presented evidence from more than one source to show that Jeyaraj's "28,000 Muslims living in Jaffna electorate" then was nothing but baloney. And the real number of Muslims living then in Jaffna electorate was around 12,000. Similarly, according the Amnesty International survey, the number of Muslims who had to flee from the Northern province then was "an estimated 40,000". Just a half of what Jeyaraj had bloated.

To rebut this type of grand deception in Jeyaraj's selected and overtly biased reminiscences of an event which happened 15 years ago, I provide below the relevant excerpts from the report of Amnesty International, covering the critical period from June 1990 to June 1991. To reiterate, Amnesty International has been critical of LTTE's deeds, but at least then, its report could be relied upon for details on anti-Tamil violence perpetrated by Sinhalese and Muslim service personnel and para-military groups embedded with these personnel.

*(to be continued in next issue)*

**Waltham Forest Thamil Sangam**
**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்**

'மண்மீட்புக்காய் தம்முயிரை ஈந்த மாவீரர்களுக்கு கண்ணீர் வணக்கம்'

வோல்தம் பொறஸட் தமிழ்ச் சங்கம் தனது
பணிகளைக் கீழ்கண்ட பிரிவுகளில் விஸ்தரித்துள்ளது


- அகதிகளுக்கான ஆலோசனை
- மகளிர் அமைப்பு
- வோல்தம் பொறஸ்ட் தமிழ்ப் பாடசாலை
- ஆங்கில வகுப்புக்கள்
- விளையாட்டு உடற்பயிற்சி வகுப்புகள்
- இளைஞர் மற்றும் முதியோர் கழகம்

சங்கத்தொடர்புக்கு

221 Forest Road
Walthamstow,
London E17
020 8527 4471
07961 158 453

தமிழ்ப்பாடசாலை
(Saturday Only)
Willowfield High School
Clifton Avenue, London E17
020 8509 2380

# Tamil Eelam remembers National Heroes on the 27th of November



*Maveerar Thuyilum Illam (Koppay)*

Photo: **Ottawa Suresh**

The Heroes Day (Maaveerar Naazh) is held to remember the freedom fighters who sacrificed their lives to liberate the independent homeland of Tamils, Tamil Eelam! Lt.Sankar, the first LTTE fighter sacrificed his life on 27 November 1982 after being fatally wounded in a Sri Lankan army round-up. The people of Tamil Eelam mark the occasion with activities such as prayer, cultural events and community service in memory of all their martyred heroes. The wide spread observance of this occasion denotes Tamil peoples' proud consciousness of their own national identity and dedication to the liberation of their people from Sinhala rule.

So far, over 17,000 LTTE fighters have sacrificed their lives for the advancement of the Tamil Eelam liberation struggle and for drawing world attention to it. The courageous death of each and every one of these fighters is a heroic chapter in the story of the Tamil Eelam liberation struggle.

LTTE fighters have died in different circumstances; on the battlefield, by taking cyanide to avoid capture, killed by the enemy after a traitor's act, killed by a traitor's hand, succumbing to battle injuries when treatment has failed.

In all these ways, more than 17,000 fighters have laid down their lives for the ideal of Tamil Eelam and a dawn for the Tamil people.

In the northern Wanni mainland, there are nearly a dozen cemeteries under the control of the Liberation Tigers of Tamil Eelam. The biggest cemetery is at Kilinochchi, the political headquarters of the LTTE. It is described as the martyrs' memorial with more than 1,900 tombstones spread over several hectares. Some graves contain the remains of LTTE cadres, while others are just stones with the names of martyrs inscribed on them. Their remains were never found, but the Tamil Tigers decided to honour them by erecting tombstones.

## Pilgrimage

A large number of families visit the cemeteries, some looking for the graves of their loved ones. For those who supported the Tigers' struggle for a Tamil homeland, it has become something of a pilgrimage.

## Martyrs' Memorial

Not only Tamils visit the cemetery. While travelling to Jaffna up the A9 highway, a number of people from the majority Sinhala community also make a brief stop over at the martyrs' memorial. Most of them are surprised to see the huge number of graves in the cemetery. Some of them even bring along flowers and wreaths as a mark of respect for the dead.

The day of the 'Maaveerar Thina Vizha' is always a day of mixed feelings. The sight of the grieving mothers, fathers, brothers, sisters and friends is very touching. Our thoughts go beyond those emotional scenes to the youngsters who willingly sacrificed their precious lives in their tender age. Most of them must have been in the late "Teens" or early "Twenties". We too have been through that age but our desires then were, definitely not that noble as those of these heroes. Our aspirations were concentrating on our studies, career and prosperity. All these were to benefit our own selves and may be our close family members. For these heroes the Tamil Nation was their family and the Tamil Homeland was their "Home". What a great deed and what a great sacrifice they have made on OUR behalf.

How can we repay them for their priceless contribution?

For all they, the Maaveerar, have done to us what have we done in return if not to them but at least to the families they have left behind.

There are several ways of extending help.

1. Just to visit them and express our appreciation for what they and their children have done to us.

2. Give some financial support as a token of our gratitude.

3. Self Help - do something concrete that will keep them at least above the poverty line.

The best way to help them is to do something that will enable them to help themselves for the rest of their life at the same time not feel obliged to anyone. Actually it is we who should feel obliged to them. We must find ways and means to generate some sort of steady income for them to meet their daily needs. It may vary from family to family depending on their capacites.

Today, Maveerar Naal serves us as a reminder to end the oppression of Eelam Tamils. This day also notes the sacrifices made by various freedom fighters in an effort to win an independent Tamil nation. These freedom fighters have not only sacrificed their lives, but more importantly their dreams, ambitions, and their youth. On November 27th over a million Tamil Diaspora recognize Maveerar Naal as a pledge to carry out the ambitions of the 17,000 soldiers who have sacrificed their lives for the freedom of Tamil Eelam, and to make sure that future generations will never submit to aggressors.

On this day let us light a lamp or a candle in our homes and pray for the souls of Great Warriors (**Maveerar**) to rest in peace.

Maaveerar to date: Since 1982 November 27 to 2004 November 10: 17, 780

| THAMIL EELAM | TOTAL | | BLACK TIGERS | | | |
|---|---|---|---|---|---|---|
| | Male | Female | Land | | Sea | |
| | | | Male | Female | Male | Female |
| Jaffna . [6533] | 4,802 | 1,731 | 19 | 12 | 68 | 41 |
| Batti.-Amparai [4,582] | 4,142 | 440 | 25 | 2 | 22 | - |
| Vanni - [2,535] | 1,766 | 769 | 6 | 2 | 14 | 3 |
| Trincomalee [1,489] | 1,328 | 161 | 4 | - | 10 | 3 |
| Mullaithivu [1,300] | 910 | 390 | - | 1 | 8 | 2 |
| Mannar [1,042] | 811 | 231 | 4 | 1 | 9 | 1 |
| Others[299] | 235 | 64 | 3 | - | 2 | 1 |
| | **13,994** | **3786** | **61** | **18** | **133** | 51 |

30 வருடங்களாக இலங்கை மக்களுக்கு சேவை
செய்வதில் அனுபவம் வாய்ந்த நிறுவனம்

**TRICO**

**Another unbeatable service from TRICO**

**WE ARE OPEN SEVEN DAYS A WEEK,**

**CALL US NOW AND BRING YOUR GOODS.**

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

**020 8888 8787**

**Fax: 020 8889 5445** **email: tricont@btclick.com**

**WEEKLY SAILING TO COLOMBO , YOUR GOODS ARRIVE IN COLOMBO WITHIN 17DAYS,**

**1ST T/CHEST £20.00 AND SECOND T/CHEST £15.00**

**SPECIAL RATES TO CANADA, AUSTRALIA AND SOUTH INDIA CALL US NOW FOR A PROFFEESIONAL, RELIABLE AND EFFICENT SERVICE.**

குறைந்த செலவில் நிறைந்த சேவை

**Trico International Shipping Ltd.**

**Unit 4, Bittern Place, Coburg Road, Wood Green London N22 6TP**

**ஒரு பேப்பர்**
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா - செல்வி

விளம்பரம்
கௌரி - ஜெனி - சியாமா

அச்சு
அபிஷா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி - நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# சற்று மாறுதலுக்காக

## பன்னீருக்கும் மண்ணெண்ணெய்க்கும் கல்யாணமாம் சாமி.

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

இலண்டனிலிருந்து வெளியாகின்ற இலவச பத்திரிகை ஒன்றில் ஒரு பத்தி வாசித்தேன். நமது மதிப்பிற்குரிய இளவாலை அமுது அவர்கள் அப்பத்தியினை எழுதியிருந்தார். 'இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்' என்று திரைப்பட பாடலாசிரியர் வைரமுத்துவைப் புளுகியிருந்தார். அந்த வேலிக்கு வைரமுத்து எப்படி கதியால் போட்டார் என்று அப்பத்தியில் எதுவும் சொல்லப் படவில்லை. வைரமுத்துவை விண்ணில் ஏற்றி வைத்த புளுகுப் பத்தி அது.

இதனைப் பற்றி இங்கு ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் வைரமுத்துவைப் பற்றிய சில கருத்துக் களைக் கூறவே.

வைரமுத்து ஒரு கவிஞர் அல்லர். இது எனது தாழ்மையான அபிப்பிராயம் அல்ல, உயர்ந்த உறுதியான அபிப்பிராயம். வைரமுத்து ஒரு திரைப்பட பாடலாசிரியர். அவ்வளவுதான். பாடலாசிரியராக இருந்தும் கூட, பாபநாசம் சிவன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி, கண்ணதாசன், வாலி போன்றோரைக் கூட தொட்டு விட முடியாமல் திக்கித் திணறுகின்ற ஒருவர் வைரமுத்து. இப்போதைய பாடலாசிரியர் நா. முத்துக்குமார் கூட வைரமுத்துவை விட எவ்வளவோ உயரத்திற்குப் போய்விட்டார்.

'கொண்டையில் தாழம்பூ
கூடையில் என்ன பூ குஷ்பு'

என்று எழுதத்தான் வைரமுத்து இலாயக்கு.

கண் தெரியாத ஒருவன்
'அந்தி மழை பொழிகிறது
ஒவ்வொரு துளியிலும் உன்முகம் தெரிகிறது'

என்று பாடுகிறார் என்றால், வைரமுத்துவின் 'வளமான கற்பனை' பற்றி மேலும் என்ன சொல்ல?

கண்ணதாசன்
'மீன் செத்தால் கருவாடு
நீ செத்தால் வெறும் கூடு'

என்று பாடியதை வைத்து

'பசு இருந்தாலும் பாலாகும்
இறந்தாலும் தோலாகும்'

என வைரமுத்து எழுதினால் இவரின் வரட்சியை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இதுவரை காலத்திலும் வைரமுத்துவை இரண்டே இரண்டு வரிகளில் மாத்திரம் தான் நான் ரசித்தேன்.

'வசந்தங்கள் வாழ்த்தும் பொழுது
உனது கிளையில் பூவாவேன்
இலையுதிர் காலமுழுதும்
மகிழ்ந்து உனக்கு வேராவேன்'

கவிஞரே அல்லாத ஒருவரை, கவிதை என்றால் என்னவென்று தெரியாதவரை 'கவிப்பேரரசு' என்று அழைத்தால், அழைப்பவர்களின் 'மண்டை'யைத்தான் பழுது பார்க்க வேண்டும்.

அது போக, இளவாலை அமுது அவர்கள் வைரமுத்துவை ஈழம் பற்றிக் காவியம் பாட அழைத்திருக்கிறார். இதை என்னவென்று சொல்வது? எங்கு போய் எமது தலையை முட்டிக் கொள்வது? அய்யா, வைரமுத்துவுக்கு இன்னும் பல திருமண மண்டபங்கள் கட்ட வேண்டிய வேலை இருக்கிறது. கருணாநிதி, அப்துல் கலாம் என்று ஊரில் பெரிய மனிதர்களின் கால்களை எல்லாம் கழுவ வேண்டிய தேவை இருக்கிறது. இவற்றுக்கு இடைப்பட்ட நேரத்தில் 'டெலிபோன் மணி, டிஜிற்றலில் செதுக்கிய குரல், டேக் இற் ஈசி ஊர்வசி என்றெல்லாம் 'தமிங்கிலத்தில்' பாடல் எழுத வேண்டிய பணத் தேவை இருக்கிறது. இதற்கு மிஞ்சி ஈழம் பற்றிக் காவியம் பாடவா அவருக்கு நேரமிருக்கிறது? அதே சூழலில் இருந்து கொண்டுதான் வைகோ, நெடுமாறன், சுப வீரபாண்டியன், அறிவுமதி, போன்ற பலர் எங்களுக்காகக் குரல் கொடுக்கிறார்கள். உணர்வாளர்களும், கலைஞர்களும்தான் குரல் கொடுப்பார்கள் வியாபாரிகள் குரல் கொடுக்க மாட்டார்கள். இதனை விளங்கிக் கொள்ளுங்கள் அய்யா?

இதே வைரமுத்து இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் கனடாவில் 'தமிழீழத்தின் தேசிய கீதத்தை நான்தான் எழுத வேண்டும்' என்று பேசினாராம். அடி செருப்பாலை, தமிழீழம் என்பது, வெறும் மண்ணல்ல. ஈழத் தமிழர்களின் ஆன்மா அது! வெறும் உதிரம் பெருகி ஈன்ற நாடு அல்ல ஈழம்!. இலட்சக்கணக்கில் உயிரிழந்து அடைந்த ஆத்மாதான் எங்கள் ஈழம் அதற்கு தேசிய கீதம் எழுதும் தகுதி, இந்த வியாபாரிக்கு உண்டா? குஷ்புவிற்கும் அஜித்திற்கும், ரஜினிக்கும், கார்த்திக்குக்கும், ஆழ்வார்பேட்டை ஆண்டவா என்று கமலகாசனிற்கும், எழுதுகின்ற கைகள் எங்கள் தேசிய கீதத்தை எழுத, எந்த ஒரு தமிழனும் அனுமதிப்பானா? ஓட ஓட அடித்துக் கலைப்பான்.?

இளவாலை அமுது அய்யா, நீங்கள் நல்ல கவிதைகள் வாசிக்கவில்லை போல் தெரிகிறது. ஈழத்தின் காவியம் பாட நமது தேசத்தில் அற்புதமான கவிஞர்கள் இருக்கிறார்கள். காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை இவர்களை விடுங்கள். அம்புலி என்று பெண்பாற் கவிஞர் இருக்கிறார். கேள்விப்பட்டீர்களா?

கருத்துக்களுடன் உடன்பட முடியாவிடினும் சேரன், ஜெயபாலன், வில்வரத்தினம் போன்ற கவிஞர்களை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? தமிழீழ உணர்வாளர், எங்கள் போரின் நியாயம் மீது நேசம் கொண்ட அறிவுமதியிடம் நீங்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தாலும் அதனை எங்களால் புரிய முடியும். போயும் போயும் இந்த வியாபாரியிடமா வேண்டுகோள் வைக்கிறீர்கள்?

பன்னீருக்கும் மண்ணெண்ணெய்க்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்கு விளங்கவில்லையா?

# ஒற்றுமையாகுங்கள்

**எல்லாளன்**
*(ஒரு பேப்பர்)*

என்னுடைய கடவுள் தொடர்பான நிஸ்தார் அவர்களின் கருத்தினை வாசித்தேன். ஆரம்பத்திலேயே நாத்திகன் என்றால் பிரச்சனைக்கு உரியவர் என்பது போல தொடங்கி இருந்தார்.

கடவுளில் எனக்கு நம்பிக்கை இல்லை ஆனால் கடவுள்த் தன்மையில் நம்பிக்கை இருக்கிறது என்று நான் எழுதியதை கடவுள் இருந்தால்தான் கடவுள் தன்மை இருக்கும். இல்லாத ஒன்றின் தன்மை இருக்குமா என்பது அவர் ஆரம்ப வினா. நான் கடவுள் நம்பிக்கை இல்லை என்று சொல்லியது இங்கு கடவுள் என்று கூறப்படும் சிவன் இயேசு புத்தர் போன்றோரை ஏற்றுக்கொள்ள வில்லை என்பதைத்தான். கடவுள் தன்மை என்றது, எமக்குள்ளும் வெளியிலும் இருக்கும் சக்தியினைத்தானே அன்றி வேறில்லை.

அல்லா என்பது ஒரு பொதுவான சிறப்புப் பெயர் ஆண்பால் பெண்பாலுக்கெல்லாம் உட்படாது என்று விளக்கம் கொடுக்கும் நிஸ்தார் அவர்களுக்கு இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லை என்று சொல்லுவதில்லை..., ஈச்சமரத்து இன்பச்சோலையில் நபி நாதரே இறைவன் தந்தான் இந்த நாளை..., இந்தப் பாடல்கள் எல்லாம் ஏன் ஆண்பாலில் எழுதப்பட்டு இருக்கிறது என்ற கேள்வி ஏன் எழவில்லை. சரி அவரால் இறைவனிடம் கையேந்துங்கள் 'அவள்' இல்லை என்று சொல்லுவதில்லை' என்று ஒரு தடவையாவது பாட முடியுமா. பெண்ணைச் சமயங்கள் ஆணுக்குச் சமனாக கருதுகிறது என்பதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது அதற்கு விளக்கம் வேறு தர வேண்டுமா.

ஆதாம் ஏவாள், பிள்ளையார், என்பது வெறும் கதையாகத்தான் இருக்க வேண்டும் என்று நான் எழுதி இருக்க நான் முதல் படைப்பினை ஏற்றுக் கொண்டதாக ஏன் நிஸ்தார் சொல்கிறார் என்று புரியவில்லை. அதைவிட எனக்கு நாம் எப்படி உருவானோம் என்று தெரியாது. சரி குரங்கில் இருந்து மனிதன் உருவாகினான் என்றால் ஏன் இப்போ ஒரு குரங்கும் மனிதராக வில்லை. ஆகவே விடை தெரியாத கேள்விக் கெல்லாம் குழம்பிக் கொள்வதை விட அதைக் குறித்து அக்கறைப்படாமல் இருப்பது மேல் என்று படுகிறது.

ஆதாம் ஏவாள் சந்ததி உருவாக்கம் என்பது தவறான முறையிலேயே நடந்திருக்கவேண்டும் என்பது என் கருத்து, அதுவும் அவர்கள் உண்மையான முதல்ப் படைப்புக்களாக இருக்கிற பட்சத்தில். கதை என்றால் எப்படியும் போகட்டும். ஆனால் உண்மை என்றால் அதை அப்போ கடவுள் அனுமதித்திருக்கிறார். ஆக நிஸ்தாரின் கருத்துப்படி நாளைய சமூக நாகரீகத்திற்கு ஏற்ப இன்னும் சில சில்லறை விடயங்களுக்கும் கடவுள் அனுமதிப்பார் போலத் தெரிகிறது.

இப்படி அடுக்கிக் கொண்டு போகக் கூடிய அளவிற்குச் சிக்கல்கள் இருக்கிறபோது எதற்கு கடவுளும் சமயமும். நாத்தீகன் என்று ஒருவன் இருந்தால் அவன் நாசகாரன் என்று அர்த்தமா? நல்லது கெட்டவைகளை சுயமாக அறிந்து நடக்கத் தெரியாதவனா அல்லது நடக்கமாட்டானா? எந்த அத்திவாரத்தில் நீங்கள் யாவரும் சொல்லும் கடவுள் கட்டப்பட்டார். அதுவும் நாலைந்து கடவுள்கள். அன்று ஓர் இஸ்லாமிய நண்பரிடம் பேசிக் கொண்டு இருந்த வேளை அவர் எனக்குச் சொன்னார் இந்த மேசை இந்தக் கட்டடம் எல்லாம் தன்னால் எழும்பவில்லை யாரோ தானே கட்டி இருக்கவேண்டும். அதுபோலத் தான் எங்களையும் கடவுள்தான் படைத்தார் என்றார். நான் அவரிடம் உண்மைதான் எல்லாப் படைப்பினையும் படைத்தவன் இருக்கத்தான் வேண்டும் அப்படி என்றால் படைத்தவனைப் படைத்தவன் யார் என்று பாரதிதாசனை எடுத்து விட்டேன். அவ்வளவுதான் அவர் உங்களை மாதிரி ஆக்களோடு கதைக்கவே கூடாது என்றார். நாத்திகரோடு கடவுள் பற்றிக் கதைக்கக் கூடாது என்று மதம் சொல்கிறதாம். எனக்கு உண்மை பொய் தெரியாது. அது குறித்து அக்கறையும் இல்லை. மதம் தொடர்பாக சிலர் தவறான நடைமுறைகளைக் கொண்டுள்ளதாகவும் அதனால்தான் நான் தடுமாற்றம் அடைந்திருப்பதாகவும் நிஸ்தார் எழுதி இருந்தார்.

இதில் ஒரு சின்ன சிக்கல் இருக்கிறது நிஸ்தார் மூடத்தனங்கள் என்று உதாரணம் காட்டுகிறபோது இந்து, கிறீஸ்தவம் அத்துடன் சியா முஸ்லிம்கள் போன்றோரை சாடி இருக்கிறார். இங்கே நான் சரி தவறு பற்றி ஆராயாமல் நிஸ்தாரின் நிலை பற்றி யோசிக்கிறேன். அதாவது அவர் இவ்வளவு எழுதி இருந்தும் தன் சுனி முஸ்லிமில் தவறில்லை என்று மறைமுகமாகச் சொல்கிறார். இங்கும் சரி தவறு பற்றி அக்கறைப் படவில்லை. நான் சொல்ல வருவது என்னவெனில் நிஸ்தார் போலத்தான் எல்லாரும் தங்கள் மதங்களினையும் அவை கடைப்பிடிக்கும் விடயங்களும் சரி என்கிறார்கள். மற்றையவைகளைப் பிழை என்கிறார்கள்.

நிஸ்தாருக்கு அவருடைய இறைவனைத் தவிர மற்ற தெய்வங்கள் மேல் நம்பிக்கை இல்லை. இந்துவுக்கு சிவன் தவிர மற்றைய கடவுள்களில் நம்பிக்கை இல்லை கிறீஸ்தவனுக்கு இயேசு தவிர்ந்த மற்றயவர்களில் நம்பிக்கை இல்லை. எல்லாளனுக்கும் எல்லாளன் போன்றோருக்கும் எல்லாக் கடவுள்களிலும் நம்பிக்கை இல்லை. இதில் என்ன தவறு இருக்கிறது. முதலில் உங்களுக்குள் ஒற்றுமையாகுங்கள் பின் என்னிடம் வாருங்கள்.

# நிஸ்தாரின் 'கடவுள்' தொடர்பான என் கருத்து

பாலா
*(மெல்பேர்ணிலிருந்து)*

Which is it, is man one of God's blunders or is God one of man's?

*(Friedrich Nietzsche: ஜெர்மன் தத்துவஞானி, 1844-1900)*

கடவுள் இருக்கிறாரா இல்லையா என உங்களுக்கும் தெரியாது எனக்கும் தெரியாது. இதே போல் தான் நத்தார் தாத்தா, பறக்கும் குதிரை, பேய், பிசாசு இவை எதுவும் இருக்கிறதா இல்லையா எனபதுவும் யாருக்கும் தெரியாது. எமக்கு தற்போதுள்ள ஆதாரங்களை வைத்து இவற்றை ஒரு ஊகத்தில்தான் தான் கூற முடியும். அப்படியான ஆதாரங்களை, உலக நடப்புகளை மிகத் திறந்த மனதுடன் சோதனை செய்து பார்ப்பீர்களானால் உங்களுக்கும் கடவுளின் இருப்பை கேள்வி கேட்கத் தோன்றும் என நம்புகிறேன்.

*கடவுள் என்ற ஒன்று இருந்தால்தானே அந்த கடவுளின் தன்மை எமக்குப் புரிய இடமிருக்கிறது*

நிஸ்தார் கூறிய கருத்து,

'கடவுள் என்ற ஒன்று இருந்தால்தானே அந்த கடவுளின் தன்மை எமக்கு புரிய இடமிருக்கிறது. இல்லாத ஒன்றின் தன்மை எமக்கு எப்படித் தெரியும்?'

என்பதை என்னால் எற்றுக் கொள்ள முடியவில்லை.

மக்களிடம் கடவுள் எப்படி இருக்க வேண்டும் என்ற எண்ணங்கள், எதிர்பார்ப்புக்கள் பண்டைய காலந் தொட்டு இருந்து தான் வருகிறது. மனிதர்களிடம் உள்ள நல்ல பண்புகள் எல்லாம் மனிதர்களை விட கடவுளிடம் எவ்வளவோ மடங்கு அதிகமாக இருப்பதாக மக்கள் எப்போதும் எண்ணி வந்துள்ளனர். இப்பண்புகளில் அன்பு, உண்மை, மன்னிக்கும் தன்மை என்பவையும் அடங்கும். இவை கடவுளின் பண்புகள் என நாம் எண்ணுவதால் மட்டும் கடவுளை உண்மைப் படுத்தி விட முடியாது.

இன்னொரு கருத்து,

'கிறிஸ்தவமும் இஸ்லாமும் கூறுவதாக எல்லாளன் கூறும் 'ஆதாம்-ஏவாள்' சம்பவம் ஒன்றே போதும் இந்த இருவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்களே ஒழிய தாமாக பிற க்காதவர்கள் என்பதை நிருபிக்க.'

மேலும், 'இதனாலேயே எல்லாளன் கடவுளை ஏற்றுக் கொள்கிறார் போலத் தெரிகிறது' என்கிறார். எப்படி நிஸ்தார் அந்த முடிவுக்கு வந்தார் எனப் புரியவில்லை. எப்படி முதல் வசனம் மட்டுமே கடவுளை நிரூபிக்கிறது என எனக்கு விளங்கவில்லை.

Darwin இன் theoryயை எல்லாளன் நம்பினால் அதற்கு அனுதாபப் படத்தான் முடியும் என நிஸ்தார் எழுதியதைப் வாசிக்கும் போது, எனக்கு, 16ம், 17ம் நூற்றாண்டுகளில் பூமி, சூரியன், மற்றய கிரகங்கள் தொடர்பான விஞ்ஞானிகளின் ஆய்வுகள், சிந்தனைகள் பைபிளினதும் கிறிஸ்தவ மத போதகர்களினதும் போதனைகளிற்கு எதிரான கருத்துகளைக் கூறத் தொடங்கியதும், விஞ்ஞானிகள் பலர் சித்ரவதைக்குள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் ஞாபகத்திற்கு வந்தன. அக்காலகட்டத்தில் இருந்து வந்த கடுமையான மதக்கொள்கைகளுக்கு எதிராக சிந்திக்கத் துணிந்து, பல வானவியல் உண்மைகளைக் கண்டறிந்த Copernicus, Galileo போன்ற வர்களின் புத்திசாலித்தனத்தை சரியாக உணரத் தெரியாமல் போன அக்கால மக்கள் மற்றும் மத போதகர்கள் மீது எனக்கு அனுதாபம் வருகிறது.

இவ்வாறுதான் கிணற்றுத் தவளையாக இருந்த முன்னோர்களில் ஓிரண்டு பேர் அதற்கு வெளியே யோசிக்கத் தொடங்கிய போது, அறிவு கொஞ்சம் கொஞ்சமாய் வளர, தெய்வீகமாகத் தோன்றிய பல இயற்கையின் இயல்புகளுக்கு அறிவியல் விளக்கங்கள் கிடைத்தன. இதைத்தான் எல்லாளன் தனது கட்டுரையின் கடைசி மூன்று பகுதிகளில் விளக்குகின்றார்.

Darwin இன் பரிணாம வளர்ச்சியை பற்றி விளக்க இக்கட்டுரை போதாது. ஆனால் நிஸ்தாரின் கருத்திற்கு ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஆதாம்-ஏவாள் பற்றிய கருத்துக்கு இரண்டு, (கடவுளிடமிருந்து நேரடியாக மக்களுக்குக் கொடுக்கப்பட்டதென நூறு வீத நிச்சயத்துடன் சொல்ல முடியாத) மத நூல்களைத் தவிர வேறு ஆதாரங்கள் கிடையாது. அந்த கருத்துக்கள் பிழை என நிரூபிக்க பல ஆதாரங்கள் உள்ளன. ஆனால் Darwinஆல் கூர்ப்பு சம்பந்தமான விளக்கங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதன் பிறகு வந்த 146 ஆண்டுகளில் அதற்கு சார்பான ஆதாரங்கள் பல அறிவியல் பகுதிகளிலிருந்தும் (சில உதாரணங்கள்: மரபியல், விலங்கியல், molecular biology, paleontology, பௌதீகவியல்) கிடைத்துள்ளன, இன்னும் கிடைத்துக் கொண்டுள்ளன. அதனால் கூர்ப்பு சந்தேகங்களுக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

அடுத்து நிஸ்தார் சொல்லும் கருத்து.

'பெண் சிறுமையானவள் என்றோ ஆண் அடக்கி ஆளும் அதிகாரம் கொண்டவர் என்றோ சமயம் சொல்லவில்லை' என்கிறார்.

இதை வாசித்த போது, உண்மையாக நிஸ்தார் சமய நூல்களைப் படித்திருக்கிறாரா எனும் சந்தேகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. பெரும்பாலான சமயப் புத்தகங்களில் எல்லாம் பெண்களைக் கீழ்மைப்படுத்தும் கருத்துகள் மிக வெளிப்படையாக இருக்கின்றன. கஸ்டப்பட்டுத் தேடத்தேவையில்லை.

தமிழ் மக்கள் பின்பற்றும் மூன்று மதங்களின் நூல்களிலிருக்கும் பெண்களைக் கீழ்மைப்படுத்தும் கருத்துகள் (misogynistic views) கொண்ட பல வாக்கியங்களில் சிலவற்றை கீழே தந்துள்ளேன். படித்து விட்டு, நான் பிழையாக விளங்கிக் கொண்டேனா என தயவு செய்து யாராவது சொல்லுங்கள்.

## HINDUISM

"Almighty God, you have created this womb. Women may be born somewhere else but sons should be born from this womb" *(Atharva Veda)*

"O Husband protect the son to be born. Do not make him a woman." *(Atharva Veda)*

"Lord Indra himself has said that women have very little intelligence. She cannot be taught." *(Rig Veda)*

"There cannot be any friendship with a woman. Her heart is more cruel than hyena." *(Rig Veda)*

"In childhood a female must be subject to her father, in youth to her husband, when her lord is dead to her sons; a women must never be independent. *(Manu Smrti)*

"Though destitute of virtue, or seeking pleasure (elsewhere); or devoid of good qualities, (yet) a husband must be constantly worshipped as a god by a dutiful wife." *(Manu Smrti)*

"Falsehood, sin and gloom remain integrated in women, 'shudras' (untouchables), dogs and crows. *(Satpath Puran)*

## CHRISTIANITY

"But I would have you know, that the head of every man is Christ; and the head of the woman is the man; and the head of Christ is God." *(I Corinthians 11:3)*

"For the man is not of the woman; but the woman of the man. Neither was the man created for the woman; but the woman for the man." *(I Corinthians 11:8-9)*

"Let the women learn in silence with all subjection. But I suffer not a woman to teach, nor to usurp authority over the man, but to be in silence. For Adam was first formed, then Eve. And Adam was not deceived, but the woman being deceived was in the transgression." *(I Timothy 2:11-14)*

"Wives, submit yourselves unto your own husbands, as unto the Lord. For the husband is the head of the wife, even as Christ is the head of the church: and he is the saviour of the body. Therefore as the church is subject unto Christ, so let wives be to their own husbands in everything." *(Ephesians 5:22-24)*

"Unto the woman he said, I will greatly multiply thy sorrow and thy conception; in sorrow thou shall bring forth children; and thy desire shall be to thy husband, and he shall rule over thee." *(Genesis 3:16)*

"Of the woman came the beginning of sin, and through her we all die." *(Eccles 25:22)*

*பெண் சிறுமையானவள் என்றோ ஆண் அடக்கி ஆளும் அதிகாரம் கொண்டவர் என்றோ சமயம் சொல்லவில்லை*

## ISLAM

"Men have authority over women because Allah has made the one superior to the other."*(Q. 4:34)*

"I have seen that the majority of the dwellers of Hell-Fire were women....[because] they are ungrateful to their husbands and they are deficient in intelligence. " (The Prophet Muhammad) *(Sahih Bukhari Vol. 2)*

"Those of you who are afraid of their disobedience which symptoms become evident to you, threaten them with the fear of God and banish them to beds apart and scourge them." *(Q. 4:34)*

"Muhammad said: 'I have seen that you, in spite of being deficient in mind and religion, rob even a wise man of his senses.' They said: 'Allah's messenger, where lies our deficiency of reason and faith?' He said: 'Is not the evidence (testimony) of a woman equal to half the evidence of a man?' They said: 'Yes.' He said: 'This is because of the deficiency of your minds (mental status). Is it not a fact that when you enter the period of menses, you neither observe prayer nor observe fast?' They said, 'Yes.' Then he said: 'This is the deficiency in your faith."' [Sahih of al-Bukhari *(Vol. I, p. 83)]*

தொடர்ச்சி 28ம் பக்கம் . . .

*உங்கள் இழப்பால்*
*எங்கள் இதயம்*
*தவியாய்த் தவித்தே*
*துடிக்கிறது*
*இருந்தும்*
*உங்கள் தியாகம்*
*எண்ணி நெஞ்சம்*
*பெருமை கொள்கிறது*

LL COLLEGE

LEAD TO SUCCESS

# LEAD LONDON COLLEGE

at

## LEAD LONDON COLLEGE

(Accredited by BAC)

Wide Range of Professional – Academic and Vocational Courses with flexible payment terms:-

Law Degree-LLB-University of London (external program)

Diploma/Degree in Health & Social Care/Nursing

Health & Social Care Registered Managers Award ( Level 4)

CIMA Qualifications

HND in Computing (General)

HND in Business (Management)

Hospitality Management (Leisure & Tourism)

Professional Diploma in Management Studies (DMS)

BSc Banking and Finance

BSc Management

Degree Foundation Programme ( DFP)

**also, English Language (all levels)**

**For further information CONTACT:**

**LLC**

**YOUR FUTURE !**

Few Hottest Carriers where the Jobs will be!!

This is the Right College for you!

It meets your all..., rather MOST of your Needs and Hopes.

**New Courses:**

**ICSA International Certificate in Business Practice**

**ILEX Diploma in Law**

**ILEX Vocational Legal Studies**

[ Law and Paralegals ]

**IFS – CIMAP Level 1,2&3** Certificate in Mortgage Advice Practice [ With possible Job Placement for Training]

**CLC Council for Licensed Conveyancers**

[ Become a Specialist Property Lawyer]

இதோ உங்களுக்கோர் அரிய வாய்ப்பு !!

LLC இன் உதவியுடன் நீங்களும்

இலகுவாகப் படிப்பில் சாதனை செய்யலாம்!



**Lead London College**
Manson House, 4 Lyon Road, London, SW19 2RU

Tel: **020 8417 1468** / Fax: **020 8417 1467**
E-Mail: info@leadlondoncollege.com

# முகத்தார் வீடு

## பாகம் – 3

**முகத்தார்**
*(யாழில்)*

*(சாத்திரியை 1 கிழமையாக் காணவில்லை எண்டு முகத்தாரும் சின்னப்புவும் அவரைத் தேடி வருகிறார்கள் அங்கை பாத்தால் சாத்திரி வீட்டுக்கு முன்னால் ஒரு புதுக்கார் நிக்குது. உள்ளே சாத்திரி வலு பிசியா வந்தவர்களுடன் பேசிக் கொண்டிருக்கிறார் பொறுமையுடன் வெளியில் காத்து நிக்கிறார்கள் முகம்ஸ்ம்ம் சின்னப்புவும்)*

சாத்திரி: சின்னப்பு கோவியாதைங்கோ கொஞ்சம் பிசி..

சின்னப்பு: யாரடாப்பா இது புது ஆட்களாக் கிடக்கு. .

சாத்திரி: இவை எங்கடை ஆட்கள்தான் லண்டனிலை இருந்து வந்திருக்கினம்

முகத்தார்: என்னவிசயம் அதுவும் உன்னட்டை வந்திருக்கினம்

சாத்திரி: இவை புலம் பெயர்ந்து போய் கைநிறைய நல்லா சம்பாதிச்சிருக்கினம் இப்ப இதை வைச்சு தமிழை .கலையை வளர்க்க இங்கை வந்திருக்கினம்

சின்னப்பு: அதுக்கு நீ என்ன ஐடியா குடுத்தனி?

சாத்திரி: அதுதான் தமிழை வளர்க்கிதெண்டால் சினிமாப்படம் எடுங்கோவன் எண்டன் கலையையும் வளர்த்த மாதிரி போகும் எண்டு இப்ப என்னையே பிடிச்சுக் கொண்டினம் படத்தை எடுத்துத் தரச் சொல்லி .

முகத்தார்: முறையான இடத்துக்குத்தான் வந்திருக்கினம் இவைக்கு படமெடுத்த முன் அனுபவம் ஏதெனும் இருக்கோ?

சின்னப்பு: முன்னனுபவமிருந்தால் என்னதுக்கு சாத்திரியிட்டை வருகினம்

சாத்திரி: இஞ்சை வாங்கோவன் உங்களுக்கும் அவையை அறிமுகப்படுத்தி வைக்கிறன் இந்தா இவர்தான் தயாரிப்பாளர் தல. .மற்ற தெல்லாம் இவற்றை நண்பர்கள்

முகத்தார்: தம்பி வணக்கம் என்ன படம் எடுக்கப் போறீயளாம்?

தல: அதுதான் வந்திருக்கிறம் படம் எடுக்க ஐடியா குடுத்திட்டு சாத்திரியார் இன்னும் கதையையே சொல்லேலை?.

சாத்திரி: கதையா அது என்னத்துக்கு தமிழ் படத்துக்கு தேவையில்லையே அதை நான் பாத்துக் கொள்ளுறன். .

தல: அப்ப ஹீரோ ஹீரோயின் வில்லன் இவர்களையாவது தெரிவுசெய்யலாமே. .

சாத்திரி: (முகத்தாரைக் காட்டி) இந்தா ஹீரோக்கு இவரைப் போடுவம்

தல: என்ன ஐயா விளையாடுறியள் நான் இவ்வளவு காசைப் போட்டு என்ன பக்திப்படமா எடுக்கப் போறன்

சாத்திரி: ஏன் அப்பிடிச் சொல்லுறீயள் இவருக்கு என்ன 52வயசுதான் ஆகுது அப்பிடியே ஆளை மாத்திப் போட்டிட மாட்டன்

தல: என்ன 25 எண்டு எழுதிக் காட்டப் போறீயளா இது படம் ஐயா. .

> *கதையா? அது என்னத்துக்கு தமிழ் படத்துக்கு தேவையில்லையே*

சாத்திரி: 58 வயசிலை நடிக்கிற ஆட்களின் படத்தை 200 நாளுக்கு மேலை ஓட வைக்கிற சனங்கள் இவரை ஏற்றுக் கொள்ள மாட்டினமோ?

தல: அப்ப வில்லன் நடிகனுக்கெண்டாலும் பழைய ஆளைப் போடுவம். .

சாத்திரி: போட்டாப் போச்சு இந்தா (சின்னப்பு வைக் காட்டி) சும்மாதான் இருக்கிறார்

தல: ஐயா நான் படம் எடுக்கிறது சனம் பாக்கிறதுக்கு. . .

சாத்திரி: நீங்க பழைய ஆளைப் போடச் சொன்னதிலை நான் இவரைச் சொன்னனான்

*(ரகசியமாக தலையிடம் இந்த 2பேரையும் புக் பண்ணினால் எங்களுக்கு சிலவே இருக்காது யூஸ் குடுக்கிற நேரத்திலை 1 போத்தல் கள்ளுக் குடுத்தா காணும் கள்ளு வலு மலிவு இஞ்சை)*

தல: சரி டைரக்டர் நீங்க சொல்லுறீயள் அப்ப ஹீரோயின் ஆரைப் போடப் போறீயள்

சாத்திரி: அதுதான் யோசிக்கிறன் கவர்ச்சிப் புயல்கள் 2பேர் இருக்கினம் போய் கேக்கத்தான் பயமாக்கிடக்கு. .

தல: பரவாயில்லை யார் எண்டு சொல்லுங்கோ நான் போய் கேட்டுப் பாக்கிறன்

சாத்திரி: பேர் வந்து பொண்ணம்மா . சின்னாச்சி ஆனா நாங்க எடுக்கிற கதைக்கு அவர்கள் பொருந்த மாட்டார்கள் போலத் தெரியுது ஒரு விஜயசாந்தி மாதிரியான சப்ஜெட் எண்டாப் பரவாயில்லை இது வந்து கணவனின் கட்டுப்பாட்டில் இருக்கிறமாதிரியான கரேக்டர்

தல: இப்ப என்ன சார் பண்ணுறது?

சாத்திரி: சரி போணாப் போகுது நாங்க ஜோதிகாவை போடுவம்

தல: என்ன ஜோதிகாவா? அவங்க எங்கடை படத்திலை நடிக்க வருவாங்களா?

சாத்திரி: நீங்க என்ன நினைச்சு என்னட்டை வந்திருக்கிறீயள் மை போட்டு வித்தை காட்டி ஆளை இழுத்தெடுத்திட மாட்டன் ஆனா என்ன ! கொஞ்சம் செலவாகும்

தல: காசுக்கு நோ. . பிரோப்பிளம் எனக்கு ஜோதிகா சம்மதிச்சா சரி. .

சாத்திரி: தம்பி தல ஜோதிகா படத்திலை நடிக்கிற துக்குத்தான் சம்மதிப்பா உங்களுக்கில்லை (சா. . .சரியான ஜொள்ளுப் பார்ட்டியா கிடக்கு இதையே சாட்டா வைச்சு நல்லாக் கறந்திட வேண்டியதுதான்)

*(தல அங்கிருந்து புறப்பட்டதும் முகத்தார் சின்னப்பு பக்கம் திரும்புகிறார் சாத்திரி)*

சாத்திரி: முகத்தான் இந்தப் படத்துக்கு நீ தான் ஹீரோ சின்னப்புதான் வில்லன் ஜோதிகா தான் ஹீரோயின் நான் முடிவு செய்திட்டன்

முகத்தார்: பாவமடா தயாரிப்பாளர்

சாத்திரி: இந்தா உனக்கு 5டுயட் 5பைட் சீன் இருக்கு வாயை மூடிட்டு இரு

சின்னப்பு: சாத்திரி அப்பிடியே 5ரேப் சீனையும் சேர்த்து விடன் புண்ணியமா போகும்

சாத்திரி: சின்னப்பு பிறகு கொம்பனி கணக்கிலை ஆஸ்பத்திரி சிலவெல்லாம் செய்யேலாது

> *உனக்கு கோயில் கட்டித் தான் கும்பிட வேணும் என்ரை ஆசையெல்லாம் நிறைவேறப் போகுது*

முகத்தார்: சாத்திரி உனக்கு கோயில் கட்டித் தான் கும்பிட வேணும் என்ரை ஆசையெல்லாம் நிறைவேறப் போகுது

சாத்திரி: ஹீரோ எண்டா பின்னை சும்மாவா..

முகத்தார்:அதோடை மச்சான் ஓசிலை லண்டன் கனடா எல்லாம் போகலாமே. .

சாத்திரி: ஆர் சொன்னது கூட்டிட்டு போற தெண்டு

முகத்தார்: 5 டுயட் எண்டா அங்கையெல்லாம் கொண்டு போய் தானே எடுப்பாங்கள்

சாத்திரி: அது ஒறிச்சினல் டைரக்டர் நான் யாரு. . . உலகப் படத்திலை லண்டன் கனடாவை காட்டிப் போட்டு அதிலை ஏறி நிண்டு ஆடச் சொல்லிட மாட்டன்.

முகத்தார்: அப்ப சூட்டிங் தொடங்கினவுடனை இங்கையே தங்கிடலாம் என்ன சாப்பாடு தண்ணி எல்லாம் தருவினம் தானே. .

சாத்திரி: ஏன் பொண்ணம்மா சொந்தங்கள் எல்லாத்தையும் கூட்டி வாவன் அதெல்லாம் சரி வராது வீட்டிலை சாப்பிட்டுட்டு வரேக்கை எனக்கும் ஒரு பார்சல் கட்டிக் கொண்டு வரவேணும் விளங்கிச்சே. ..

முகத்தார்: சரி சாத்திரி கதையிலை கொஞ்சத்தை சொல்லன்

சாத்திரி: ஹீரோ அதாவது நீ என்றி ஆகிற சீனைச் சொல்லுறன் கேள்

நம்மடை ஹீரோயின் அதுதான் ஜோதிகா றோட்டாலை நடந்து வாற அவவின்ரை காலை மாத்திரம் காட்டுறம் அப்ப றோட்டிலை இருந்த கல்லொண்டு அவவின் காலிலை தட்டுப்பட்டு அங்கை படுத்திருந்த ஒரு சொறிநாய் மீது பட்டு விடுகிது நாய் மெல்ல தலையை தூக்கிப் பாத்து உறுமுது இந்த இடத்திலை பயங்கர சவுண்ட் ஈபைக்ட் ஒண்டைப் போடுறன் நாய் உறுமுறது தத்துரூபமா இருக்கும் பாரன்?

முகத்தார்: என்ன நாயின் வொயிசை றெக்கோட் பண்ணிப் போடப் போறீயே

சாத்திரி: சா. . .முனியம்மாவை டப்பிங் குடுக்க வைக்கலாம் எண்டு இருக்கிறன்

முகத்தார்: சரி இதுக்கை நான் எங்கை வாறன்

சாத்திரி: பொறன். . அப்பதான் நீ நித்திரையாலை எழும்பி கேட்டை திறந்து கொண்டு றோட்டுக்கு வாறாய் ஜோதிகாவை துரத்த நினைத்த நாய் சடின் பிரேக் போட்டு உன்னைப் பாக்குது அதுக்கு பழைய நினைவுகள் ஏதோ ஞாபகம் வர அப்பிடியே உன்மேலை பாய்ஞ்சு கொத்தோடை கவ்வுது. .

முகத்தார்: சாத்திரி உனக்கே இது நல்லா இருக்கா ஜோதிகாவை காப்பாத்தப் போய் கடைசிலை என்னையே காப்பாத்தேலாம போகப் போகுது. .

சாத்திரி: ஆ.. இஞ்சைதான் நீ சாத்திரியின் விளையாட்டை பாக்கனும் அப்பிடியே உனக்கும் நாய்க்கும் ஒரு பயங்கரச் சண்டையை சேக்கிறன் திடீரென நீ நாயின் காதுக்கை ஏதோ சொல்லுறாய் அதைக் கேட்டதும் நாய் சும்மா பிச்சுக்கிட்டு திரும்பி பாக்காம ஓடுது நீ என்ன சொன்னாய் எண்டதை படத்திலை கடைசி மட்டும் சொல்லவே மாட்டம் இதையெல்லாம் ஓரமா பாத்துக் கொண்டிருந்த ஜோதிகா உனக்குக் கிட்ட வந்து அப்பிடியே உன்ரை கையை பிடித்து தாங்ஸ் எண்டு சொல்லறா அப்பிடியே கட் பண்ணி போடுறம் ஒரு குத்து சோங் சும்மா மன்மதராசா தோத்துப் போகும் பாரன்

முகத்தார்: எனக்கெல்லாம் அப்பிடி ஆட ஏலாதடா. .

சாத்திரி: உன்னை ஆர் ஆடச் சொன்னது நீ சும்மா நில்லு நான் கமராவை ஆட்டுறன்

*(முகத்தார் மெதுவாக கண்ணை மூடி ஜோதிகாவுடன் டுயட் பாடுற சீனுக்குள் போகிறார் திடீரென 'பொதக்' எண்டு ஒரு சத்தம்)*

பொண்ணம்மா: என்னப்பா ஒழுங்கா கட்டிலை படுக்கத்தெரியாதோ விழுந்திட்டியள் வயசுபோண நேரத்திலை கை கால் முறிஞ்சா எனக்குத்தான் கரைச்சல்

முகத்தார்: (மனசுக்குள் ஆட்க் கடவுளே கனவிலை ஜோதிகாவோடை கட்டிப் பிடிச்சு உருளேக்கைதான் விழுந்ததெண்டு பொண்ணம்மாக்குத் தெரிஞ்சால்??????? )

*(யாவும் கற்பனை)*




STS HIRIS LTD

அனுபவமிக்க ஒப்பந்ததாரரின் புதுப்பொலிவுடன் புதிய ஸ்தாபனம் இதோ வருகின்றது......

கடையை மறுசிராக்குதல் மற்றும் அனைத்து கட்டிடவேலைகள்

Electrical
Heating
Plumbing
Double Glazing Windows
Civil Engineering

Shop Fittings and Sales
Shelf, Display Remote Units
Cameras
Display Refrigerators
Also we Trade

Unit 1
175 a Brick Stock Road
Thornton Heath
Croydon CR7 7JP

உங்கள் பொன்னான நேரத்தையும் பணத்தினையும் மிச்சப்படுத்த எங்களை நாடுங்கள்

We arrange all council permits IEE CERTICATES and all necessary documents

Contact:
0208 665 0505
0787 620 1382

# வரலாற்று நாயகனுக்கு வாழ்த்தும் மாவீரர் தமக்கு ஒரு வணக்கமும்.

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*



தமிழர் நாம் தலையுயர்த்தி நிமிர்ந்தது யாரினால்?

நெஞ்சு நிமிர்த்தி எழுந்தது எவரினால்? இப்பொழுதெல்லாம் நமக்கு கோணல் நடை இல்லை. கூனல் முதுகு இல்லை. நெஞ்சு நிமிர்த்தி நாம் நேராய் நடந்தோம்.

இது யாரினால் ஆனது?

கண்கள் ஒளிர நடையில் ஒரு வேகம் வந்ததுவே! கைகள் வீசி இந்தக் காற்று நமது, இந்தக் கடல் நமது, இந்த வயல் நமது, இந்த வானம் நமது, இந்த வாழ்வு நமது, என்று உயிர்ப்புடன் ஓர் அடி எடுத்து வைத்தோமே? இவையெல்லாம் யாரினால் நிகழ்ந்தன? எவரினால்?

நாம் தமிழர் என்று சொல்லிப் பெருமைப்பட எவர் காரணம்? இப்பொழுதெல்லாம் தமிழர் தலைகள் குனிவதில்லையே! தலைநிமிர்ந்து நடக்கின்றனரே! நேர்ப்பார்வையுடன் பீடு நடை போடுகின்றனரே! தமிழர் நாம் தலை நிமிர்ந்து நடக்க எவர் காரணம்?

'மறவர் படைதான் தமிழ்ப்படை–குல

மானம் ஒன்றுதான் அடிப்படை'

என்று சொல்ல வைத்தவர் யார்?

'வெறிகொள்தமிழர் புலிப்படை– அவர்

வெல்வர் என்பது வெளிப்படை'

என்று உணர வைத்தவர் எவர்?

அதிகம் பேசமாட்டாய் ஆழ்ந்து சிந்திப்பாய். ஆரும் ஏதும் கேட்டால் உன் புன்னகை பேசும்.

அது போதும் என்று விடுவாய் புரிகின்றது.

பேசிப் பேசியே அழிந்த வரலாறல்லவா நமது வரலாறு. எழுதி எழுதியே கிழிந்த வாழ்வல்லவா நமது வாழ்வு. பேசியும் எழுதியும் யோசித்தும் யாசித்தும் எங்கள் வரலாறு எழுதப்பட்டது.

எங்கள் வாழ்வு கருக்கப்பட்டது.

பேசவில்லை நீ. எழுதவில்லை நீ. யாசிக்கவில்லை நீ. 'இயற்கை எனது நண்பன். வாழ்க்கை எனது தத்துவாசிரியன். வரலாறு எனது வழிகாட்டி'

இது ஒன்றையே இயம்பினாய். இதற்கும் அப்பால் செயல் ஒன்றையே நீ நம்பினாய். செய்தாய். செயற்கரிய செய்தாய். ஈரம் படர்ந்த எமது நாளில் வீரம் விளைந்த வாழ்வை நமதாக்கினாய்!

நமது தேசத்தில் நமது மண்ணில் நமது வரலாற்றை நீ திருத்தி எழுதவில்லை. திருப்பி எழுதினாய். மாற்றி எழுதினாய் மகத்தான எழுத்து அது. மகத்தான வாழ்வு அது.

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் போட்டோர் ஒரு சிலர். லெனின், மாசேதுங், ஹொசிமின், சேகுவேரா என்பது புரட்டிப் போட்டோர் பெயர்கள். அந்த ஒரு சிலரில் ஒருவனாய், உயர்ந்தவனாய் நீ ஆனாய். எங்கள் நெஞ்சில் நிறைந்து போனாய்.

அனுபவமே ஆசானாய், ஆற்றலே வழிகாட்டியாய் உன் வாழ்வை அமைத்தாய். அதனூடு தமிழர் வாழ்வைச் சமைத்தாய். செதுக்கினாய் செப்பனிட்டாய்.

நமது மண்ணிலா இந்த உன்னதம் விளைந்தது? நமது மண்ணா இந்த மகத்துவம் படைத்தது? அட என்று ஆச்சரியமாக வியந்து போக எத்தனை கேள்விகள்.! நமக்கு மானம் இருக்கிறதா, ரோசம் இருக்கிறதா, உணர்வு இருக்கின்றதா, உரிமை வேண்டுமா?

மானம், ரோசம், உணர்வு, உரிமைஎன்றால் என்னவென்று எமக்குக் காட்டியவர் யார்?

உறுதிஎன்றால் எப்படி? வலிமை என்றால் என்ன?வீரம் என்றால் எத்தகையது?இறுதிவரை போராடுவது எங்ஙனம்? இலட்சியம் ஈடேறும் வரை நின்று பிடிப்பது எப்படி?

விட்டுக்கொடுக்கா வீரம், கொள்கையிலிருந்து விலகிப்போகா ஓர்மம் இவற்றையெல்லாம் எமக்கு உணர்த்தியவர் யார்? உரமுடன், ஓர்மத்துடன், உத்வேகத்துடன் போரை முன்னெடுப்பது எவ்வாறு என்று எமக்கு சொல்லித் தந்தவர் யார்?

ஒரு முறை நரம்புகளைச் சுண்டிப் பாருங்கள். மானம், ரோசம், உணர்வு இருக்கிறது என்று சொல்லி நரம்புகள் அதிரும். அந்த அதிரும் நரம்புகளை நமக்குள் ஆக்கியவர் யார்? கொட்டும் வெற்றி முரசை எங்களுக்குள் தட்டியவர் யார்? திக்கெட்டும் பட்டொளி வீசிப் பறக்கும் தமிழர் கொடியை உலகத் தமிழர் நெஞ்சில் ஏற்றியவர் யார்? யார் அவர்?

புறநானூற்றுக்கு புதிய அத்தியாயம் வரைந்தவர். போர் வரலாற்றுக்கு புதிய பக்கம் திறந்தவர்.

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழின் வழிகாட்டியாக வாழ்பவர். எங்கள் விழியாகி வீரம் விளை நிலமாகி நிற்பவர். சொல்லிற்கு அப்பாற்பட்டவர்.

சோதிப்பிழம்பானவர்.

தம்மைக் கொடையாய் கொடுத்தவரின் தலைவன். தம்மை விறகாய் எரித்தவரின் வீரன்.

வீரா, எம் தேசத் தலைவா, முத்தமிழ்க்குமரா,

நீ வாழ்க, நின்படை வாழ்க கொடி வாழ்க குலம் வாழ்க, இனம் வாழ்க, நலமும் பல்லாண்டு வாழ்க, அண்ணா நீ வாழ்ந்தால் நாங்கள் வாழ்வோம், தலைவா தாங்கள் வாழ்ந்தால் தமிழ் வாழும், வாழ்த்துகிறேன் தோழா!

வரலாற்றின் பக்கங்கள் கண்ணீர் துளிகளாலும் காவிய சோகங்களாலும் நிரம்பப் பெற்றன.

ஆயினும் வரலாற்றின் பக்கங்களில் வீரகாவியங்கள் இவர்களால் பொறிக்கப்பட்டன.

வரலாற்றை விடுதலை செய்தவர்கள் இவர்கள். எம் உயிர், எம்மொழி, எம் பண்பாடு, எம்தேசம், இவற்றுக்காய் விதையாகி வீழ்ந்து முளையாகி எழுந்தவர்கள் இவர்கள். வியர்வையும், குருதியும், உயிரும் சிந்தி மானுடத்தை விழவிடாது காத்தவர்கள் இவர்கள். மகத்தான மாமனிதர்.

தம்மை அவர்கள் இழந்து எம்மை தலை நிமிர வைத்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்காக எம் தலை குனியும். ஒரு தரம் அல்ல, ஓர் ஆயிரம் தரமும் அல்ல. எத்தனை கோடி கோடி முறையும் அவர்களுக்காக எம் தலை குனியும். மனிதகுல வரலாற்றில் சுதந்திர வரலாறு இவர்களால் எழுதப்படுகின்றது. அதற்காக எம் வீரவணக்கம் உங்களுக்கு.

சொல்வதற்கு தகுதி இல்லை, என்றாலும் சொல்கிறேன்.

'உங்கள் நினைவுக்குச் சாசனத்தை எங்கள் நிலதில் நாமே பொறிப்போம்.'

NC Ness & Co
Solicitors

S.Thavanesan LL.B
Solicitor
38 C London Road,
Tooting SW17 9HP

**Immigration**

உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு appeals and representation on all Tribunal Hearing சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்

**Conveyancing:**

உங்களது வியாபார ஸ்தாபனங்கள் வாங்க விற்க தொடர்புகொள்ளவும் வீடு விற்றல், வாங்குதல் சம்பந்தமான சட்ட சேவைக்கு எங்களை நாடவும்!

**Licencing matters**

Personal licence application
Premises licences
Transefer of licence

**General litigation matters**

Call us
02086405050
07956 913 164

ABBEY SERVICES

ABBEY TRAINING.NET

Did You Know?

"All Off-License Shops & Restaurant owners and the Counter-Staff or/and Till-Assistants must hold valid 'Personal Licenses'.

'இப்ப ஒரு Off License கடை எடுப்பம் என்றால் ஒரே கரைச்சல்
ஏதோ Personal License வேணுமாம்! பட்டடையில் நிற்பவருக்கும் அது வேணுமாம்'!
கவலை வேண்டாம்!!!!!

Hence, to get what is known as 'Personal Licence', one needs a Proper Certificate, known as NCPLH, and Certificate of Police Clearance.

There you are!

We provide the following courses!



National Certificate for Personal License Holders course and that is the NCPLH.

Food Hygiene Certificate.

Health and Safety Certificate.

( All the courses would be conducted in Tamil)

We, also help our clients to get the necessary skills to qualify for the above.


Call us on 020 8640 9900

Abbey House, 38 London Road, Tooting, London. SW17 9HP

Abbey Estate

Business Loans 100% arranged, Business Bank Account,
Business Over-Drafts & Credit Card ATM Machine
Credit/Debit Card Machine Terminal.

Call us on 020 8640 9900




**பொன். காந்தன்**
*(வன்னியிலிருந்து ஒரு பேப்பருக்காக)*

*மகாராணி!
மயக்க மருந்தோடு
மக்கள் முன் வந்த மாதே!
வியக்க மொழி சொரிந்த
வித்தகியே
பண்டா பரம்பரையின்
சூட்சுமத்தோடு வந்த சுந்தரியே!
சுருட்டிக் கட்டிக் கொண்டு
புறப்பட்டீரே!
இன்னும் ஆசைதான்
அந்தக் கதிரையில் அமர்வதற்கு
என்ன செய்வது
இது தான் உன் முடிவாச்சே
பாவம் துரத்த
உபசாரம்
ஒன்றொன்றாய் குறைந்து
ஒட்டி உலர்ந்து
பதவி விட்டு
பாவி நீ போறாயோ!*

*சீப்புக்கும், சோப்புக்கும்
கத்தரிக்காய் பையுக்கும்
உன் பேர் வைத்து
அமைதிக் கென உதித்த
அந்த மாதிரி தேவதையே என்று
உள்ளார நினைத்து
ஒரு காலம்
தமிழர் நாம் உன்னை
வரவேற்ற கதை
ஞாபகம் இருக்கிறதா*

*கள்ளுண்ட வண்டாய்
உன் உதடு வழி வந்த
வார்த்தை தேன்குடித்த
ஒட்டு மொத்த
இலங்கையரும்
பின்
உன்னால்
இழிச்சவாயர் ஆன கதை
உனக்கு ஞாபகமுண்டா*

*பண்டா பரம்பரையில்
அதிஷ்ட வசமாய்
பாலூற்றும், தேனூற்றொன்று
பிறந்ததோ என்று உன்னை
நினைக்க
கொண்டா இரத்தம் என்றாய்
கொடு வாள் தூக்கினாய்
விகாரமா தேவியாகி
வேதனை
அத்தனைக்கும்
அடி நாதமானாய்
ஞாபகம் இருக்கிறதா*

*இழப்புக்கள்
அறிந்தவள் நான்
என்று நீ
சிணுங்கிய போது
நாம் இரங்கினோம்
நீயோ
தொடங்கினாய்
நரபலி வேட்டை*

*கதிர்காமன் வலது கரம்
முப்படைக்கும்
நான் தலைவி
எப்பதவியும் உருவும்
அதிகாரம் எனக்குண்டு
என்ற அதிகார வெறியில்
சந்திரிகா நீர்
ஆடிய ஆட்டமென்ன*

*எம்மீது கொலை வெறியாட்டம்
அதிகம் நிகழ்த்தியது
உனது அகங்கார ஆட்சி தானே
அதற்கு பரிகாரமாய்
படு தோல்விகள்
தமிழரிடம் கண்டதும்
உடல் வேர்த்து
நீ நின்றதும்
அடுத்தானிடம் காப்பாற்று
என்றதும்
அம்மணி உனக்கு
எப்போதும்
நெஞ்சைவிட்டகலுமோ*

*எங்கள் வீட்டு விளக்கு
மாத்துக்கட்டுத் தான்
உன் பிரிவு உபசாரத்திற்கு
பதில் சொல்லும்
என்ன தான் சாதித்தாய்
திருமதி சந்திரிகா*

*தமிழர் நிலத்தை சுடுகாடாக்க
சூத்திரம் வகுத்தேன்
என்று சொல்வாயா?
அது தானே
ஸ்ரீலங்கா இன்று வறுமைக்
கோட்டின் கீழ் வதங்கிக் கிடக்கிறது
நீ செய்த பாவங்கள் உன்னை
எங்கு போனாலும் துரத்தும்
ஓடு ஓடு உன்னை திட்டித் தீர்க்காத
உலகத் தமிழருண்டோ
நக்கிப் பிழைக்கின்ற ஒரு சிலரைத்
தவிர அதி கௌரவ எல்லாம்
மறைந்து வெறும் சந்திரிக்காவாய்
வீதிக்கு வருகிறாய் இனி
உன்னை விட நாயும் மேல்
அது வீட்டையாவது காக்கும்
நீ நாட்டையே நன்றே
காக்கவில்லையே
ஒன்றுக்கு இரண்டு தடவை
உன் பேராசைதனத்தால்
ஆட்சிப்பீடங்களை
அசிங்கப்படுத்தினாய்
மாட்சிமைத் தமிழருக்கு துயர்
கொடுத்தாய்
போட்டு வா
என்ன புண்ணியம் செய்தாய்
உனைக்காக்க இனி
பூச்சி பூரானும் உன்னை
பழிவாங்கலாம்
உனக்கான
பிரதி உபகாரம் பலதை
ஆட்சியில் நீ இருக்கையிலே
தமிழர் நாம் தந்தோம்
உன்னால் புண்பட்டவர்கள்
கண் வைத்துள்ளார்கள்
உன்னால்
ஆகக்கூடியது
உலகத்தின் எல்லைவரை
நீ ஓடக்கூடும் அங்கும்
உனக்கென ஒரு
அரிவாளை தீட்டியபடி
ஒரு ஆள் காத்திருக்கக்கூடும்
இன்னொரு
சர்வாதிகாரியின் முடிவை
அறிய
ஆவலாய் இருக்கிறோம்
இப்போதாவது
புத்தனின்
சிந்தனைகள் உனக்கு
புலப்படக்கூடும்
எனினும்
கண்கெட்டபின்......*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## சாப்பிடும் நோய்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வளர்முக நாடுகளில் மிகவேகமாக பரவி வரும் இப்பழக்கத்தை சாப்பிடும் நோய் என கூறுவார். இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அளவுக்கு அதிகமாக உணவு உண்டு அதனால் உடல் பருமன் கூடி சிரமப்படுவர். அல்லது மிகக் குறைவாகச் சாப்பிட்டு அதனால் உடல் எடை மிகக் குறைந்து நோய்வாய்ப்படுவர்.

பொதுவாக இதனால் பாதிக்கப்படுபவர்கள் 15 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களாகும். ஆண்களை விட பெண்களே அதிகமாகப் பாதிக்கப் படுகின்றனர். சிலசமயம் வயதானவர்களும் இதனால் பாதிக்கப்படுவார்கள். வளர்முக நாடுகளில் வாழும் பெற்றோர்கள் தங்கள் இளம் வயது பிள்ளைகளைப் பாதுகாப்பாக வளர்க்க முயலும் போது, சமூகத்தில் காணும் பல தீய பழக்கங்களையே முக்கியமாக மனதில் கொள்வர், ஆனால் இந்த சாப்பிடும் நோய் மற்றைய தீயபழக்கத்திற்கு நிகராக சம்பந்தப்பட்டவரை அதிகம் பாதிக்கும்.

இந்நோயைப் பற்றி சற்று விரிவாக நோக்குவோமானால் இது மூன்று வகையாக காணப்படும்.

இதில் ஒரு வகை, குறைவாக சாப்பிடுவது Anorexia Nervosa எனப்படும். இப்பாதிப்பு உள்ளவர்கள் திடீரென உண்ணும் அளவைக் குறைப்பார்கள். குறுகிய காலத்தில் இந்த உண்ணும் அளவு மிகக் குறைந்து அதனால் உடல் எடையும் குறைய ஆரம்பிக்கும். சம்பந்தப்பட்டவரின் உடல் எடை, அவரது வயது, உயரம், பால், இவற்றிற்கு ஏற்ப இருக்க வேண்டிய சராசரி எடையிலும் 15 வீதம் குறைந்து விட்டால், அவர் அனோரெக்சியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என உணரலாம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர் உணவு உண்ண மறுப்பார்கள். பெற்றோர் வற்புறுத்தினால் மிகச் சிறிய அளவு மட்டும் உண்பர். அல்லது தரப்பட்ட உணவை மறைத்து விட்டு உணவு உண்பது போல பாவனை செய்வார். பாதிக்கப்பட்டவர் பெண்ணாக இருப்பின் உடல் எடை குறைய மாதவிலக்கு வருவது நின்றுவிடலாம். இவ்வாறு தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் மாதவிலக்கு நின்றுவிட்டால், பாதிப்பு மிக அதிகம் என அறியலாம்.

அடுத்ததாக காணப்படுவது மிக அதிகமாக உணவு உண்ணும் நோய். இதனால் பாதிக்கப்படுபவர் ஒருநாளில் குறைந்தது இரண்டு வேளை மிக அதிகளவு உணவை உண்பார்கள். இதனால் திடீரென அவர்களின் உடல் எடை அதிகரிக்க ஆரம்பிக்கும். மிகக் குறுகிய காலத்தில் வெளிப்படையாகவே உடல் கனம் கூடியவராகக் காணப்படுவார். வெளிப்படையாக மாற்றங்கள் உண்டான பின் சிலர் சில அதிரடி நடவடிக்கைகளை எடுப்பார்கள். சாப்பிட்ட பின் குளியல் அறைக்குச் சென்று வாயுள் விரலை விட்டு வாந்தி எடுப்பது, அதிகளவு பேதி மாத்திரைகளை அடிக்கடி பயன்படுத்துவது, சிரமப்பட்டு பசி இருப்பது போன்றனவாகும். மேலும் இவர்கள் மனதில் தான் குண்டாக இருப்பதாக உணர்ந்து, தாழ்வு மனப்பான்மையினால் பாதிக்கப்படுவர். இதனால் நண்பர் உறவினருடன் சேராது தனித்து இருப்பர். இதனால் ஏற்படும் வெறுப்பு, கோபம், சோகம் ஆகிய உணர்வுகளை மறக்க மேலும் அதிகம் சாப்பிடுவார்கள்.

மூன்றாவது வகையினர் முன் கூறிய இரண்டு வகை பழக்கங்களும் கலந்து காணப்படுவர்.

எதிர்காலத்தில் இளம் சமுதாயத்தை இந்நோய் தொடர்ந்து பெருமளவில் பாதிக்கும்.

அதீத கவலை, ஏமாற்றம், காரணமாகவும் சூழல் ஏற்படுத்தும் அழுத்தம் காரணமாகவும் இந்நோய்வாய்ப்படலாம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையாக முதல் கட்டமாக இந்நோயின் பாதிப்பினைப் பற்றி மருத்துவ ரீதியாக விளக்கப்படும்.

இரண்டாம் கட்டமாக கவுன்சிலிங் சிகிச்சை வழங்கப்படும்

இறுதியாக எடை கூடியவர்களுக்கு பசியை குறைக்கும் மருந்தும், எடை குறைந்தவர்களுக்கு Ensure Drink எனப்படும், சிறிய அளவில் ஆனால் சத்து அதிகம் உள்ள பானம் தினமும் வழங்கப்படும்.

CAPITAL AUTOS LTD




- Fully equiped MOT & Accident Repair Centre
- Insurance Repairs Welcome
- Recovery Service
- Approved Insurance Repairs
- Courtesy Vehicle available for most repairs
- Professional, Friendly
- Service and Advice
- Collection & Delivery within the local area


AUDI
BMW
MERCEDES
VAUXHALL
HONDA
இன்று ஆர்ப்பரித்து எழுந்து நிற்கின்றது எமது தேசம். ஆண்கள், பெண்கள, முதியோர் என ஆயுதம் தரித்து சிங்கள இராணுவத்தை எதிர்கொள்ளுகின்றது. எமது தேசத்தின் சுதந்திரப்போர் பல்லாயிரம் சிங்கள இராணுவத் துப்பாக்கிகளாலும் நவீன கடற்படை விமானப் படைத் தளங்களாலும் தாக்கப்படும் போதெல்லாம் எமது சின்னஞ் சிறு தேசம் தனித்து நின்று போராடி வெற்றிகளைக் குவிக்கின்றது. இதற்கு குறைந்த ஆட்தொகையும் குறைந்த ஆயுத வளங்களையும் வைத்திருந்தபடி அவற்றின் உச்சப் பயனை பெறும் வகையில் தலைவர் பிரபாகரன் செயற்படுத்தும் போர்த்திட்டங்களே இத்தகைய வெற்றிகளுக்குக் காரணமாக அமைகின்றன். இதற்கு எடுத்துக் காட்டாக மிகக் குறைந்த போராளிகளோடு உலகின் நாலாவது பலம் பொருந்திய வல்லரசு ஒன்றின் நோக்கத்தை முறியடித்து உலகின் இணையற்ற தலைவர்களில் ஒருவரானார். இதனாலேயே விடுதலைப் புலிகளின் பரமவைரியும் தமிழீழத்தில் அமைதிப்படை என்ற பெயரில் நடத்திய கொடூரங்களுக்கு தலைமை வகித்த ஜே.என். டிக்சித் பின்வருமாறு கூறுகின்றார்.

*உலகில் உள்ள கெரில்லாத் தலைவர்களுள் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் ஆற்றலும் செயற்பாடும் மிக்க தலைவர்*

பல குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் அந்த மனிதரிடம் ஒரு உள்ளீடான இலட்சிய நெருப்பு கொள்கை உறுதியும் உண்டு என்பதை அறிமுகம் செய்வதிலும் அவரிடம் இயற்கையாகவே இராணுவத் திறனாய்வு அதற்கேற்ப காய்நகர்த்தும் மதிநுட்பமும் உடையவர் என்றார்.


எனவேதான் அவரின் மதிநுட்பமான போர்த்திறனையும் இராஜதந்திரங்களையும் கவனித்தே தமிழீழ விடுதலைப்போரை ஆதரிப்போரும் சரி, எதிர்ப்போரும் சரி இன்று உலகில் உள்ள கெரில்லாத் தலைவர்களுள் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் ஆற்றலும் செயற்பாடும் மிக்க தலைவர் என ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பசி, தாகம், நீண்ட பயணம், மரணம் என்பவற்றையே தன்னால் வழங்க முடியும் என்றும் சுகமான நல்வாழ்வுக்கு உறுதியில்லை என்றும், தாய்நாட்டின் மீது உண்மையான பற்றுடையோர் தன்னோடு சேரலாம் எனக் கூறி அவ்வாறு தன்னுடன் இணைந்த போராளிகளைக் கொண்டு போர் நிகழ்த்தி இத்தாலியை ஒற்றுமை பூண வைத்தார் கரிபால்டி. இன்று கழுத்தில் சயனற்றைக் கட்டிக்கொண்டு தம் தலைவர் ஆணையிட்டால் அதனை விழுங்கி மரணத்தை தழுவிக் கொள்ளவும் ஆயிரமாயிரம் மாவீரர்கள் அவர் பின் அணிவகுத்து நிற்பதும் அவர்களை மதிநுட்பமாக நடத்தி இன்று மாபெரும் வெற்றிகளைச் சுமந்து நிற்கும் எம் தலைவர் கரிபால்டியை விட அதிர்ஸ்ட சாலி என்றே கூறவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக சமாதானம், பேச்சுவார்த்தை என்ற பெரும் அரசியல் இராஜதந்திர முறையை ஏற்படுத்தி இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் பிரச்சனைக்குள் உள்வாங்கச் செய்து உலக சமூகத்தின் மத்தியில் பிரச்சனையை கையளித்துள்ளார். இந்த பெரும் நுட்பமான அணுகுமுறையை கண்ட மேற்குலக இராஜதந்திர அதிகாரிகள் வன்னியை வட்டமிட்டபடியே உள்ளனர். இதுவரை காலமும் உள்நாட்டுப்போர் என்று கூறிவந்த சிங்கள அரசின் கூக்குரல் இன்று நசுக்கப்பட்டு இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது எமது தலைவரின் மிக நுட்பமான இராஜதந்திர அணுகுமுறை. இன்றைய உலகின் போக்கிற்கு தம்மை மாற்றிக் கொண்ட ஓர் நிகழ்வு. அல்லது காய்நகர்த்தல் எனக் கூறிக் கொள்ளலாம். எனவே இன்று சர்வதேச மத்தியஸ்தம் என்ற பெயரில் எமது தேசத்தின் விடுதலை இயக்கத்தின் கோரிக்கை உலக சமூகத்திடம் ஆதரவு பெறத் தொடங்கியுள்ளது.

இந்த வெற்றிகளின் பின்னால் எம் தேசத்து மாவீரர்களின் கடும் உழைப்பும் தியாகமும் தலைவர் பிரபாகரனின் மதிநுட்ப வழிநடத்தலும் உள்ளது என்பது வெள்ளிடைமலை. அதுவே அவரை இந்நூற்றாண்டின் இணையற்ற தலைவர்களில் ஒருவராக்கியது.

*- நன்றி யாழ்*

வேலை இல்லாததுகள் - ★★★★
(தமிழ்ப் பார்வை)

Top Dog in da house - ★★★★★
*(Noise of da World)*

போட்டா ஸ்பீக்கர் பிஞ்சு போகும் - ★★
(பாதுகாப்பு இயக்கம்)

தேவையில்லாத சோலி - ★★★
(ஒண்டரைப் பேப்பர்)

Hip hop, RnB, Reggae music - ★★★★
*(H&V Music)*

# சிங்கிள்ஸ்




Lyrics
**Sujeeth.G**

Music
**Santhors**

Mixed & Mastered
**Jae London**

Recorded at
**.7th Birth studio**

Produced by
**seven zero**

www.sujeethg.com
www.7zero.com

# தேசப்பற்று







மாவீரர்களே!
பாசத்தை மறந்து தேசத்தின் விடுதலைக்காய்
பாடையில் போனவரே!
நீசத்தனங்களை நிலை குலைய வைத்திட
நேசங்கள் துறந்தவரே!
மாசற்ற உங்கள் சந்தன மேனிகள்
மண்ணுள் புதைந்தனவோ!
பேசத் திறனற்று பேதைகளாய் நாம்
பாசத்தில் அல்லலுற்றோம்!
நாசத்தனங்களை மண்ணிலே போக்கிட
வேஷங்கள் கிழித்தவரே!
மூசிடும் புலிகளாய் மூர்க்கமாய் எழுந்து
முகாம்கள் தகர்த்தவரே!

ஆசையுடன் உமை அள்ளி அணைத்த
அன்னையைப் பிரிந்தவரே!
தேசமே பற்றென நெஞ்சில் வரித்து
களம் புகுந்தவரே!
காசநோய் உற்ற களமாய் ஈழம்
வருந்திட்ட வேளையிலே
மோசமுணர்ந்து மாசு களைந்திட
மாண்டிட்ட வீரர்களே!
வேஷமிட்ட நரிகளாய்ச் சிலர்
எதிரிகளின் கால் வருட
கோஷமெதுவும் இல்லாமலே
கொள்கைக்காய் உயிரெறிந்தீர்!
நாம் கண்களில் நீர் கோர்த்து
உம் கல்லறைகளில் நிற்கின்றோம்!

எத்துணை காலமாய் எல்லைகள் காத்து
எம் தொல்லை தடுத்தீர்கள்!
பத்தரை மாற்றுத் தங்க உயிர்களின்
பாதம் பணிந்து நிற்போம்!
நித்திரையின்றி நீர் கண்களைத் தீட்டி
நின்றிட்ட வேளையில்தான்
நாம் பக்குவமாகப் பாயில் படுத்து
பம்பல் கதையளந்தோம்!
சத்தியமாக ஒப்பிடலென்பது
உங்களுக்(கு) ஒவ்வாது

சித்தர்கள் போன்று பக்தியுடனே
சாகசம் செய்தவரே!
பக்தர்களாக என்றும் உமை நாம்
பாடிப் பணிந்து நிற்போம்!

வித்தாக நீங்கள் குழிகளில் புதைந்தீர்
வையம் அறியாததா?
சொத்தாக எம் மண்ணினைக் காத்தீர்
தேசம் புரியாததா?
பத்தாது அதுவென்று வித்தைகள் செய்தீர்
எதிரி முகாம்களுக்குள்ளே!
வற்றாத வேக வீரத்துடனே
கொற்றவன் சொல் நடந்தீர்!
மத்தாகி நின்று ஈழம் பிறந்திட
சுற்றிச் சுழன்றடித்தீர்!

செத்தோம் இனியென நாம் சத்தமிடுகையில்
எதிரியைச் சுத்தமாகத் துடைத்தெறிவீரே!
கற்றவர் பலரும் கருத்தொருமிக்காவிடத்தும்
உற்றவழி புகுந்தவரே
மாற்றான் புறமுதுகிட்டிட தேசப் பற்றுடன்
எழுந்து விரைந்தவரே
காற்றாகத் தமிழனை மேலுக்கனுப்புவோம் எனக்
கூறிட்ட சிங்களவரை
கூற்றுவன் காலடிக்குள் தொப்புத் தொப்பெனத்
தூக்கி யெறிந்தவரே
வற்றாத வளம்மிகு ஈழத்து மண்ணை
மீட்டிடத் துடித்தவரே
மொட்டாகி நீவிர் மலர்ந்திடுவீரெனப்
பெற்றவர் மனம் நினைக்க
தேசச் சொத்தாக ஆனீர் – அதன் மீது கொண்ட
முத்தான பற்றினாலே

தரையினில் நடந்தீர் கடலினில் நகர்ந்தீர்
இப்போ வானமும் எம் கையிலே
இத் தேனான செய்தியை உம் காதினிற் போட்டிட
காதலுடன் நிற்கின்றோம்.
எண்ணாத வளர்ச்சி!
எட்டுவோமென எண்ணாத உயர்ச்சி!
வானிலே காண்கின்றோம்.

பாணுக்கும் பருப்புக்கும் மக்களை ஏய்த்தோர்
பல்லக்கில் பவனி வந்தோர் – இப்போ
சொல்லற்றுச் செயலற்று விழிகள் பிதுங்கிடும்
விந்தையைக் கூற வந்தோம்.
எம் செல்வங்களே உம் சீரடி மலரிட்டு
விந்தையைக் கூற வந்தோம்.
எம் வெற்றிகளுக்கெல்லாம் அடித்தளமாகிய
அத்திவாரத்து நாயகர் நீர்!

எமக்குப் பலம் சேர்த்தீர், எதிரிக்கு எமனானீர்!
உலக மக்கள் அனைவருக்குமே
ஒப்பிட முடியா உவமையானீர்!
தேசப்பற்றின் தீவிரம் தன்னை
எம் தேசம் முழுதும் விதைத்து விட்டீர்!
புகைப்படமாகவும் புத்தகமாகவும் சித்திரமாகவும்
எம் கை தவழ்ந்தீர்!
தத்துவ நாயக தீபங்களாக
மக்கள் நெஞ்சினில் இடம் பிடித்தீர்
வித்துவக் காய்ச்சற் போர்வழிக்கெல்லாம்
மொத்தமாய் முகம் அறைந்தீர் – நீவிர்
வித்துடலாகவோ வேறு வடிவிலோ
தேசப் பற்றென உயிர் துறந்தீர்

தேசத்தின் நாயகன் காட்டிடும் பாதையில்
கூசாமலே நடந்தீர்
பாசத்தின் சங்கிலிப் பிணைப்புகளெல்லாம்
துச்சமென மதித்தீர்
நேஷன்கள் இழந்திட்ட அகதிகள் கூட
உம் பாதம் தொழ வைத்தீர்
பாசத்திற்கும் – ஏன் பற்றினுக்குமோர்
புதிய கதை படித்தீர் – இந்த
யாகத்திலே நீர் எத்தனை விதமாய்
அர்ப்பணிப்புகள் செய்தீர்
சோகத்திலே இதைக் கூறவில்லை நான்
உம் வேகத்தைக் கண்டதாற்தான்
வாசமலர்களே! வையம் உமையென்றும்
வரலாற்றினிலே பொறிக்கும்.

– *தீட்சண்யன்*

**MARKANDAN & CO SOLICITORS**
*Thamil House, 720 Romford Road, London, E12 6BT*
*Tel : 0208 514 8188 , 078 30 28 56 34*
*Fax : 0208 514 8303*
*Web www.markandan-solicitors.com*
*e-mail : mm @ Markandan-solicitors.com*

- குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையினாலான விண்ணப்பங்கள்
- விவாக விண்ணப்பங்கள்
- அகதி விண்ணப்பங்கள்
- 14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணங்கள்
- பிரித்தானிய பிரஜாவுரிமை
- வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்
- விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் No Win -- No Fee அடிப்படையில்.
- பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்கு ஆங்கில மொழித் தேர்ச்சி தகுதிச் சான்றிதழ்.

*We also Specialise in . . .*

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சனைகள்
- உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கேளிக்கை களியாட்ட அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்

01-02-2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும். ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை. வீடு தேடி வந்து ஆலோசனைகள் வழங்கவும் தயாராக உள்ளோம். வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்கு படுத்தி தரபடும்.

# நிஸ்தாரின் 'கடவுள்' தொடர்பான என் கருத்து

*11ம் பக்கத் தொடர்ச்சி . . .*

"Allah's Apostle said: 'The woman is like a rib: if you try to straighten her, she will break; so if you want to get benefit from her, do so while she still has some crookedness."' *[Sahih of al-Bukhari (part 7, p. 8*

"The prophet said: 'I have not left any affliction more harmful to men than women."' *[Sahih al-Bukhari, part 7, p.22]*

"The prophet of Allah said: When a man calls his wife to satisfy his desire, let her come to him though she is occupied at the oven." *(Mishkat al-Masabih, English translation, Book I, Section 'Duties of husband and wife', Hadith No. 61)*

இவை சில உதாரணங்களே. இவற்றைப் போல என்னும் பற்பல 'பொன்மொழிகள்' சமயங்களாலும் சமயப் பெரியார்களினாலும் சொல்லப்பட்டுள்ளன. மேலே உள்ள வசனங்களை வாசிக்கும் போது பெண்களையும் ஆண்களையும் சமயங்கள் சமமான முக்கியத்துவத்துடன் பார்ப்பதாக உங்களுக்குத் தோன்றுகின்றதா?

அடுத்து, சகோதரன் - சகோதரி உறவு ஒழுக்கக் கேடானது என நாம் இயற்கையாக உணர்ந்து கொண்டோமா அல்லது ஒழுக்கம் தொடர்பாக நமது சமுதாயத்தின் கற்பித்தல்கள், காலத்தின் தேவைக்கேற்ற சீர் திருத்தங்கள், மனித வளர்ச்சிக்கேற்ற சிந்தனை மாற்றங்களால் நாம் அப்படி எண்ணுகின்றோமா எனும் கேள்விக்கு நிஸ்தாரின் பதில் பிழையானது. ஏனெனில் சகோதரற்கிடையே காதலுறவு கொள்ளாதிருத்தல் மனித இனத்திற்கு மட்டும் தனித்துவமான பண்பல்ல. எத்தனையோ காட்டு மிருகங்களில் கூட (பல குரங்கினங்கள், ஏன் எறும்புகளிற்கிடையில் கூட) சகோதரற்கிடையே மிக மிக அரிதாகவே உறவு நடைபெறுகிறதென கண்டு பிடித்துள்ளனர். அதனால் சகோதரர்கள் பிறந்ததில் இருந்து ஒன்றாய் வளரும் போது இயற்கையாகவே (நாங்கள் உணராமலே) சகோதரற்கிடையே அந்த உணர்வு அற்றுப் போய் விடுகிறது. இந்த இயல்பு மனித சிந்தனை மாற்றத்தால் வந்ததாயின், எப்படி அதை மனித சந்ததியற்ற இடங்களில் வாழும் மிருகங்கள் கூடக் கடைப்பிடிக்கின்றன?

சகோதர உணர்வு வளர்வதற்கு பிறந்ததில் இருந்து ஒன்றாய் வளர்க்கப்படுதல் முக்கியம். ஒன்றாய் வளர்க்கப்படுவதால் தான் அந்த உணர்வு இயற்கையாக அற்றுப் போகிறதாம். அதனால் நிஸ்தார் கூறிய மாதிரி ஒரு சகோதரனும் சகோதரியும் பிறந்தவுடன் பிரிக்கப்பட்டு, பின் வளர்ந்தவுடன் ஏதேச்சையாக சந்திப்பார்களேயானால் அவர்களிற்கிடையே காதல் வளர இடமுண்டு. ஆனால் நிஸ்தார் நினைக்கும் மாதிரிஅவர்கள் தாங்கள் சகோதரர்கள் என அறியும் போது தீடீரென அவர்களிற்கிடையே சகோதர உணர்வு மிளிர்வதற்கு வாய்ப்பே இல்லை. அந்த நேரத்தில் மனக் குழப்பத்தால் அவர்கள் அனேகமாக தம் உறவை முறிக்கலாம். ஆனால் மன உணர்வு அவ்வளவு சீக்கிரம் மாறாது. அதோடு அவர்கள் அதன் பின் சகோதரராய் பழகுவதற்கு வாய்ப்பு மிகக் குறைவு என நினைக்கின்றேன். அவர்கள் மனம் தான் மிகவும் குழப்பமாக இருக்கும்.

இதை எல்லாம் ஒன்றாய் சேர்த்து சிந்திக்கும் போது, கடவுள் இருக்கிறாரா இல்லையா, மதங்கள் எல்லாம் மனிதனால் உருவாக்கப் பட்டவையாகவே தோன்றுகின்றன. மனித சமுதாயத்தின் அரை வாசி சனத்தொகையை ஒடுக்க முற்படும் மதங்கள் சொல்லும் ஒரு கடவுளையோ, ஒரு சமய மக்கள் இன்னோரு சமயத்தவரை வெறுக்க தூண்டும் ஒரு கடவுளையோ, கடவுளாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. எத்தனையோ என் சக மனிதர்கள் உலகெங்கும் ஒவ்வொரு விநாடியும் செத்துப் பிழைக்கும் போது நான் சுகமான வாழ்க்கை வாழுவதற்காக கடவுள் ஒருவருக்கு நன்றி சொல்ல முடியவில்லை. How can I (or you) be more deserving than other people? இதை எழுதும் போது 2300 ஆண்டுகளிற்கு முன்பு வாழ்ந்த தத்துவஞானி Epicurus இன் பின்வரும் வசனங்கள் நினைவிற்கு வந்தன:

"Is God willing to prevent evil, but not able? Then he is not omnipotent.

Is he able, but not willing? Then he is malevolent.

Is he both able and willing? Then whence cometh evil?

Is he neither able nor willing? Then why call him God?"

இதெல்லாம் ஏன் சொல்கிறாய், கடவுள் இருக்கிறாரோ இல்லையோ நாங்கள் நிம்மதிக்காக, மன அமைதிக்காக சாமியைக் கும்பிடுகின்றோம், அதனால் யாருக்கு என்ன துன்பம் என நீங்கள் கேட்கலாம். மதத்தின் பெயரில் பல மனிதர் எத்தனையோ தீயவற்றை செய்து கொண்டிருக்கிறார்கள். சாதிப் பிரச்சனை, பெண் அடிமைத்தனம், இந்து தீவிரவாதம், முஸ்லிம் தீவிரவாதம் என்பவற்றால் ஒவ்வொரு நாளும் எத்தனையோ மக்கள் சித்திரவதைப் படுத்தப்படுகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள். இவற்றைத் தடுப்பதற்கு, மக்கள் முதலில் சமயப் புத்தகங்களை அடிப்படை உண்மையாக எந்த வித சிந்தனையும் இல்லாமல் பின்பற்றுவதை நிறுத்த வேண்டும். தீவிர மத போதகர்கள் சொல்வது தமது மனச்சாட்சிக்கு எதிராக இருப்பின் ஏன், எதற்கு என விளக்கம் கேட்க வேண்டும். மக்களுக்கு சுய சிந்தனை முக்கியமாக வேண்டும். அப்போது தான் மக்கள் கடவுளை மதிப்பதற்கு முன்பு தமது சக மனிதரை மதிக்கத் தொடங்குவார்கள் என்பது எனது தாழ்மையான கருத்து.

# போர்

தெய்வ மாவீரர் தமிழ் வீரர்
திரண்டு களத்தின் கண்ணே

செய்யும் அறப்போரை என்னென்று
தமிழில் செப்புவேனோ ?

பெய்யும் மழைத் துளிகளென்னப்
பெருகிக் கொட்டும் மாற்றார்

கையின் குண்டுகளிடையிலே
தமிழர் களித்தாரம்மா!

குண்டின் அடிபட்டார் சில தோழர்
கூட்டஞ் சிறையாடிற்று!

தொண்டர் பலரங்கே தடியாலும்
தூள் தூளானார்! தமிழன்

மண்டையுடைந்ததே கதையெங்கும்!
எனினும் மாற்றார் தானை

கண்ட காட்சியோ சிறிதேனும்
கலங்காத் தமிழர் படையே!

கொள்கை உயிரென நினைக்கின்ற
கூட்டம் உரிமைக் கோயில்

உள்ளே விடுதலை இறையோனை
அடைய ஓடுங் கூட்டம்

வெள்ளை நெஞ்சமும் அறநோக்கும்
அன்பும் கருவிகளாக்கித்

துள்ளுமொரு கூட்டம் பகைவர்க்கு
நடுங்கித் தூங்குமோடா ?

*- காசி ஆனந்தன்*


# Kerala Ayurvedic Health Clinic



Free Consultation
Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians
Affordable Prices


**Call 020 8902 1104 or 020 8902 1707**


உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுர்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்

- Massage therapies by experienced and highly skilled therapists
- Treatment is designed around your individual health needs
- Only natural herbal medicines are used
- No side effects at all
- Wide range of therapies

✓ Frozen Shoulder
✓ Digestive Disorders
✓ High Blood Pressure
✓ Pulled Muscles
✓ High Cholesterol
✓ Trapped Nerve
✓ Paralytic Conditons

✓ Stress and Strain
✓ Back Pain
✓ Joint Pain
✓ Diabetes
✓ Migraine
✓ Stiffness
✓ Arthritis






Male & Female therapists availble
We Can also speak in Hindi, Tamil and Malayalam

**Open 7 days a week**

1 Odeon Parade, Sudbury Heights Avenue,
Greenford, Middlesex UB6 0NA
www.kahc.co.uk

# ஜொள்ளித் திரிந்ததொரு காலம்...

## — ஜொள்ள ஜொள்ள இனிக்குதைய்யா —

தமிழ் டுபுக்கு
*( இங்கிலாந்திலிருந்து )*

கல்யாணத்திற்கு இரண்டு நாட்கள் இருந்தது. அடுத்த நாள் தான் மண்டபத்துக்குப் போவதாக ஏற்பாடு. தெருவில் இரண்டு வீடுகளை வாடைக்கு எடுத்திருந்தார்கள். நான், மெட்ராஸ், மற்றும் இன்னும் ரெண்டு பேரும் செட் சேர்ந்தோம். மெட்ராஸ் நல்ல கலகலப்பாகப் பழகினான். ராத்திரிக்கு தண்ணியடிக்க அழைத்துப் போவதாய் அன்பாகச் சொன்னான். பழக்கமில்லை என்றவுடன் கலாய்க்காமல் பண்பாக விட்டுவிட்டான். நல்ல பையனாகத் தான் தெரிந்தான்.

பம்பாயும் அவளை விட கொஞ்சம் வயது குறைந்த இன்னும் இரண்டு குட்டிகளும் செட்டு சேர்ந்திருந் தார்கள். என்னமோ பேசி 'க்ளுக்' கென்று அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்தனர். அன்று மதியம் நான் இந்தப் பக்கம் போய் மோர் குடித்துவிட்டு வருவதற்குள் மெட்ராஸ் நைஸாக நூல்விட்டு கடலை வறுக்க ஆரம்பித் திருந்தான். நெல்லுக்குப் பாயறது புல்லுக்கும் பாயட்டுமே என்று நானும் சேர்ந்து கொண்டேன். என்ன இருந்தாலும் மெட்ராஸ் மெட்ராஸ் தான்! ஹிந்தி யெல்லாம் பொளந்து கட்டினான். என்னோட ஹிந்தி மாமி அவ்வளவு தூரம் சொல்லிக் குடுக்கவில்லையாதலால் நானும் கச்சேரிக்குப் போனேன்ங்கிற ரீதியில் சும்மா அச்சா குச்சா என்று ப்ரவேஷிகா ஹிந்தியில் ஜால்ரா போட்டுக்கொண்டிருந்தேன். நல்லவேளை ரொம்ப நேரம் ஜால்ரா போடவேண்டிய அவசியமில்லாமல் பம்பாய் கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிட்டது. சும்மா அறிமுகம் தான் படுத்திக்கொண்டார்கள் என்பது புரிந்தது.

மெட்ராஸ் இருக்கும் போது பம்பாய் முன்னால் என்னால் ஷோபிக்க முடியாதென்று நன்றாகப் புரிந்தது. பம்பாய் ஐம்பதாயிரம் கலர் பட்டுப்புடவை ஜோதிகா மாதிரி அடிக்கடி ட்ரெஸ் மாற்றிக்கொண்டிருந்தாள். மெட்ராஸ் இதெல்லாம் அவனுக்காகத் தானென்றும், நான் எனக்காத் தான் என்றும் நினைத்துக் கொண்டோம். பம்பாய் நல்ல பதவிசாகப் பழகினாள். மெட்ராஸ் அடிக்கடி எதாவது சொல்லிக்குடுத்துக் கொண்டிருப்பான். பம்பாய் ஜன்னல் வைத்த சட்டை போட்டுக் கொண்டுவந்தால் வாஸ்து சொல்லுவான், பஜ்ஜியும் சொஜ்ஜியும் தின்று விட்டு ஜோக் அடிப்பான், பாட்டு பாடுவான். எனக்கு வெறும் காத்து தான் வரும். கூடவே காதிலிருந்து புகையும் வரும். 'சுகப் பிரசவம் பார்பது எப்பிடி' என்பது தவிர கிட்டத் தட்ட எல்லா விஷயங்களையும் மெட்ராஸ் தெரிந்து வைத்திருந்தான். பம்பாய்க்கு என்மேல் ஒரு 'இது' என்ற நம்பிக்கை வெகு சீக்கிரத்தில் புஸ்ஸாகிப் போனது.

கல்யாணங்களில் களை கட்டுவதே இரவு நேர அரட்டைக் கச்சேரிகள் தான். வெத்தலை போட்டுக்கொண்டு சில மாமாக்கள் அடுத்தாத்து மாமிகள் முன்னால் பிரதாபங்களை அளந்து விட்டுக் கொண்டிருப்பார்கள். ஒருபக்கம் பட்டுப் புடவை மாமிகள் தங்களுக்குள் ஏதோ பேசி சிரித்துக் கொண்டிருப்பார்கள். அதுவும் இந்த முப்பதிலிருந்து நாற்பது வரை உள்ள அக்கா மாமிகளின் அரட்டையிருக்கிறதே...எஸ்.ஜே. சூர்யா ரகம். ஒரு தடவை காது குடுத்துக் கேட்டேன்... அடேயப்பா....ஆம்பளைகளையும் மிஞ்சி விட்டார்கள். காதைப் பொத்திகறதுக்கு பத்து கைவேண்டியிருந்தது.

சை என்று ஆகிவிட்டது. அதிலிருந்து இப்பொதெல்லாம் கல்யாணத்திற்கு போனால் இவர்கள் அரட்டையை மிஸ் பண்ணுவதே கிடையாது.

'அந்தாக்க்ஷரி' இல்லாத கல்யாணமும் கல்யாணமா? பம்பாய் அண்ட் கோ 'அந்தாக்க்ஷரி' என்ற பாட்டுக்குப் பாட்டு விளையாட்டு ஆட ஆரம்பித்திருந்தார்கள். இத இத இதைத் தானே எதிர்பார்த்தோம். உடனே கூட்டத்தோடு கோவிந்தாக்களாய் நாங்களும் ஐக்கியமானோம். இந்த மாதிரி விளையாட்டுக்களில் வடகத்திய கூட்ட தொல்லை தாங்கமுடியாது. 'சிந்தகி', 'சப்னே', 'மொஹபத்', 'இஷ்க்' - இப்பிடி எதாவது வரும் ஹிந்தி பாட்டைப் பாட ஆரம்பித்துவிடுவார்கள். ஹிந்தி ப்ரவேஷிகா பரீட்சையில் எனக்கு இந்த மாதிரி சினிமா பாட்டெல்லாம் சொல்லிக்குடுக்கவில்லை. என்னுடைய சுய ஆர்வத்தால் 'சாரே ஜகான்சி அச்சா' மட்டும் ரெண்டு வரி தெரியும். கூட இருந்த ரெண்டு தீவட்டிகளுக்கு அதுவும் தெரியாது. இருந்தாலும் மெட்ராஸோடு சேர்ந்து கொண்டு கோவிந்தா பாட்டு பாடி ரொம்ப நாறாமல் சமாளித்தோம். முந்தின பாட்டிலிருந்து சில கீ வேர்ட்ஸ் நியாபகம் வைத்துக் கொண்டு அடுத்த அடுத்த கோவிந்தா பாட்டில் பாடுவோம். மிச்சத்தை மெட்ராஸ் பார்த்துக் கொள்வான்.

பம்பாய்க்கும் மெட்ராஸ்க்கும் இடைவெளி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டேவந்தது. மண்டபத்துக்கு வந்த பிறகு ரெண்டுபேரும் திடீர் திடீரென்று காணமல் போய்விடுவார்கள். எங்கேயாவது ஒரு மூலையில் கடலை போட்டுக்கொண்டிருப்பார்கள். ஹிந்தி படித்துக் கொள்ளவேண்டும் என்று எனக்கு ஆர்வம் பிறந்ததே இப்பிடித் தான். காசியாத்திரை, ஊஞ்சல் என்று எல்லா இடங்களிலும் மெட்ராஸ் பம்பாய் பின்னாடியே மோப்பம் பிடித்துக்கொண்டு போனான்.

கல்யாண வீடுகளில் அரட்டை அடித்து அடித்து களைத்துப் போய் மதியம் இரண்டு மணிக்கு ஒரு தூக்கம் வரும் பாருங்கள்...ஒன்னு ரெண்டு டயாப்டீஸ் மாமாக்களைத் தவிர மண்டபமே தூங்கிப் போகும். நான் மட்டும் என்ன விதிவிலக்கா? கனவில் பம்பாயில் ஹிந்தி மாமியோடு 'ருக் ருக் ருக்' பாட்டுக்கு கெட்ட ஆட்டம் போட்டு பிரவேஷிகா பரீட்சையில்... இந்தியாவிலேயே முதல் மாணவனாய்த் தேறி ராஷ்டிரபதி என் நெஞ்சில் பதக்கமும் குத்தி ஹிந்தி மாமியையும் கல்யாணம் பண்ணி வைத்த அந்த வேளையில்...மெட்ராஸும் பம்பாயும் எங்கேயோ கடலை சாகுபடி செய்துகொண்டிருந்தார்கள். ஹிந்திமாமி யோடு குடித்தனம் நடத்த பிடிக்காமல் நான் முழித்துப் பார்த்தபோது...ஒரு மூலையில் மெட்ராஸும் பம்பாய் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். அதற்கப்புறம் கொஞ்சம் நேரத்தில் இருவரும் சிரித்துக் கொண்டே வந்தார்கள்.

அன்று சாயங்காலம் நாங்கள் புறப்பட வேண்டியிருந்ததலால் மெட்ராஸ் பம்பாய் எல்லாரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பி விட்டேன். மெட்ராஸ் கண்ணைச் சிமிட்டி அவனுக்கு பம்பாய் தான் இனிமே எல்லாம் என்றான். வாழ்க்கைக்கு ஹிந்தி எவ்வளவு பிரயோஜனப்படும் என்று தெரிந்துகொண்டேன். ஆனால் அதற்கப்புறம் அவர்களை நான் பார்க்கவே இல்லை. இரண்டு வருடங்கள் முன்னாடி விசாரித்ததில் இருவரும் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன் - அவா அவா கணவன் மனைவியோட!

# விருந்தினர் வந்தால் . . .

ராதா
*(ஒரு பேப்பருக்காக)*

## உப்பு மா

### தேவையான பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| ரவை | - 1 கப் | பெருஞ்சீரகம் | - ½ தே .க |
| தேங்காய்ப்பால் | - ½ கப் | லீக்ஸ் [பொரித்து வைக்கவும்] | - 50g |
| தண்ணீர் | - 1 கப் | உருளைக்கிழங்கு | - 50g |
| வெங்காயம் பெரியது [சின்னதாக வெட்டியது] | - 1 | கரட் [பொரித்து வைக்கவும்] | - 50g |
| பச்சை மிளகாய் [சின்னதாக வெட்டியது] | - 2 | உப்பு | - சுவைக்கேற்ப |
| இஞ்சி 12 அங்குலம் | - 1 துண்டு | எண்ணெய் | - 2 மே.க. |
| கடுகு | - ½ தே .க | கறிவேப்பிலை | - 10 |

### செய்முறை:

றவையை ஓரளவு வறுத்துக் கொள்ளவும். பின் அகண்ட பாத்திரமொன்றில் எண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, வெங்காயம், இஞ்சி, ப.மிளகாய், பெருஞ்சீரகம், கறிவேப்பிலை என்ற வரிசையில் போட்டு நன்றாக வதக்கி கொள்ளவும், பின் பால் தண்ணீர் உப்பு சேர்த்து கொதிக்கவிடவும். கொதித்ததும் றவையை போட்டுக் கொண்டே கிளறி விட்டுக் கொள்ளவும். (குறிப்பு இந்த சமயத்தில் மேலும் கொஞ்ச நீர் தேவைப்பட்டால் கொதிநீர் பாவிக்கவும்) அதன் பின் ஏற்கனவே பொரித்து வைத்திருக்கும் உருளைக்கிழங்கு, லீக்ஸ், கரட், என்பவற்றையும் சேர்த்து மூடி மிகக்குறைந்த நெருப்பில் சிறிது நேரம் வைத்துவிட்டுப் பின் பரிமாறலாம்.

# Grace அக்கா வீட்டு Kitchen . . .

**கிரேஸ் அக்கா**
***(ஒரு பேப்பருக்காக)***

## பேரிச்சம் பழ கேக்

### தேவையானவை:

8 முட்டை [medium]
500g மாஜரீன்
500g சீனி
500g மா [Self-raising]
500 g பேரிச்சம்பழம் [விதை நீக்கியது]
2 தே.க அப்பச் சோடா [sodium-hi-cashonate]
2 தே.க வனிலா
1 தே.க பேக்கிங்பவுடர்
2 மே.க பால்
பிளம்ஸ். கஜு சிறிதளவு

### செய்முறை:

முதலில் அப்பச் சோடா ½ cup வெதுவெதுப்பான நீரில் கரைத்து பேரிச்சம்பழத்தின் மேல் பரவலாக ஊற்றி இரவு முழுவதும் ஊறவிடவும். கேக் செய்ய ஆரம்பிக்கும் போது அப்பேரிச்சம்பழத்தை நன்கு மசித்து கூழ் போலாக்கி ஒருபக்கத்தில் வைக்கவும். வாயகலமான பாத்திரத்தில் சீனியையும், மாஜரீன்னையும் போட்டு சீனி கரையும் வரை அடிக்கவும். சீனி கரைந்து வரும் போது முட்டைகளை ஒவ்வென்றாச் சேர்த்து நன்கு அடித்து வனிலா, பால், பேக்கிங் பவுடர் சேர்த்து கீறிம் (cream) ஆகும்வரை அடித்து எடுக்கவும். அத்துடன் பழக்கூழையும் சேர்க்கவும். இறுதியில் மாவை சிறிது சிறிதாக நன்கு கலந்து கஜு, பிளம்ஸ்யும் கலக்கவும். கேக் கலவை தயாரானதும் ஏற்கனவே தயார்படுத்திய தட்டிலுற்றி(tray) அவனில் 45-60 நிமிடங்கள் வேகவிடவும். நன்கு வெந்ததும் இறக்கி ஆறியதும் பரிமாறவும்.

**Tamil Information Centre**

**Information Worker (3days per week)**
**12 months fixed term contract**

**Salary £17,000 pa pro-rata**

Applications are invited for a fixed-term (12 months) post as an information worker in the Tsunami Information Project, beginning from 15th December 2005

For futher information about the job please contact the Executive Secretary

Closing date for applications: **30th November 2005**

The Tamil Information Centre is a non-profit non-government organization dedicated to human rights, peace and development in Sri Lanka. We are seeking an enthusiatic person to work with a senior researcher investigating some of the key issues related to tsunami relief and reconstruction in Sri Lanka. Working knowledge of English and Tamil is essential (reading, writing and speaking) Knowledge of Sinhala in additon will be an advantage.

*Please send your CV to the*
Executive Secretary, Tamil Information Centre,
**THULASI (Formerly Studio 2, Sutherland House),**
Bridge End Close (Formerly Clifton Road),
Kingston Upon Thames KT2 6PZ
Tel: 020 8546 1560 / Fax: 020 8546 5701
Email: admin.tic@sangu.org

# லண்டன் இந்திய ஹைகமிஷன் ஒரு வெட்கக் கேடு!

இன்று பாஸ்போர்ட் விஷயமாக இந்திய ஹைகமிஷனுக்குப் போக வேண்டி இருந்தது. இதற்கு முன்னமே இரண்டு தடவை போயிருக்கிறேன். சந்தையில் நுழைந்தது மாதிரி தான் இருந்தது. நிலமை இன்னும் மோசமாகியிருக்கிறது. தீபாவளிக்கு சென்னை ரங்கநாதன் தெருவிற்கு போன மாதிரி இருந்தது. முதலில் வெளியில் டோக்கன் வாங்க வேண்டும். ஒரு நாளைக்கு நூறு டோக்கன் தான் தருவார்கள். அங்கே பொறுமையாக க்யூவில் நின்று கொண்டிருக்கும் போதே.. ஏஜண்ட் என்று சொல்லிக் கொண்டு நாலு சிங் மாமாக்கள் க்யூவையெல்லாம் மதிக்கவே இல்லை. அங்கேயே எனக்கு சாமி ஏறிவிட்டது. ஒரு ஆட்டம் ஆடி டோக்கனை வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தால் எள் போட்டால் கீழே விழாத அளவு நெருக்கியடித்துக் கொண்டு கூட்டம்.

ஒருத்தருக்காவது எதற்கு எங்கே நிற்க வேண்டும் என்று தெரியவில்லை. டோக்கன் நம்பர் எல்லாம் விசாவிற்கு வந்திருப்பவர்களுக்குத் தானாம். பாஸ்போர்ட்டுக்கு உம்மாச்சியை வேண்டிக் கொண்டு குலுக்கல் முறையில் ஒரு க்யூவைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு நிற்க வேண்டும். கிளம்பும் போது நல்ல வேளையில் கிளம்பி இருந்தால் கரெக்டாக போய்விடலாம். இல்லாவிட்டால் பாதியிலேயே உள்ளே கவுண்டரில் இருப்பவர் தண்ணி குடிக்கவோ, மூச்சா போகவோ எழுந்து போய்விடுவார். அப்புறம் தேவுடா தேவுடா தான். விசா குத்தி பாஸ்போர்ட் வாங்குவதற்கும் ஒரு கவுண்டரில் சுரத்தே இல்லாமல் சின்னதாக ஏலம் போடுவார்கள். நீங்கள் சித்த நேரம் பராக்க பார்த்துக் கொண்டிருந்தீர்களானால் போச்சு திரும்ப கேட்டு அவர் குடுப்பதற்குள் விசா காலாவதியாகிவிடும்.

எங்கேயும் தெரிகிற மாதிரி ஒரு அறிவிப்புப் பலகை இல்லை. கிட்டப் போனால் நெஞ்சில் குத்திக் கொண்டிருப்பது மாதிரி குட்டியா ஒரு நேம் போர்டு. இருக்கிற கூட்டதில் யானைக்கு எலிக் கோமணத்தை கட்டிய மாதிரி இருக்கு. போர்டு இருக்கிறது என்று சொன்னால் தான் தெரியும்.

வேறு நாட்டு தூதரகத்திற்கெல்லாம் போனால் செக்யூரிட்டி கார்டிடம் கூட அதிர்ந்து பேச முடியாது. இங்கே ஷேர் மார்க்கெட் மாதிரி எல்லாருமே கூவி கூவித் தான் பேசவேண்டும். பாஸ்போர்ட்க்கு வெளியிலே டோக்கன் வாங்கிவிட்டோம் என்று தெனாவெட்டில் இருந்தால் ரப்பரால் அழித்துவிடுங்கள். இங்கே ஒரு க்யூ நிற்கும் அதில் நின்று தான் போக வேண்டும். அப்போ எதற்கு டோக்கன்? என்று தொலைத்து விட்டீர்களானால் க்யூவில் உங்கள் முறை வரும் போது அதை கண்டிப்பாக கேட்பார்கள். இல்லையென்றால் 'ர்ர்ர்ர்ரிப்பீட்டு'.

வெட்கக் கேடு ஒரு வழிமுறையே இல்லை. ஹை கமிஷனர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று தெரியவில்லை. ஒருவேளை ரூமில் உட்கார்ந்து கொண்டு என்னை மாதிரி ப்ளாக் அடித்துக் கொண்டிருக்கிறாரோ என்னமோ. இதை விட முருகன் இட்லி கடையில் அழகாக டோக்கன் குடுத்து நடத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். வயிறு பற்றிக் கொண்டு எரிகிறது வெளிநாட்டில் வெளிநாட்டினர்களுக்கு மத்தியிலா இப்பிடி மானம் போகவேண்டும்? இந்தியாவைப் பற்றி தெரியாமல் முதன் முறையாக இங்கு வருபவர்களுக்கு இப்பிடியா அறிமுகம் கிடைக்க வேண்டும்? திரு.அப்துல் கலாமிற்கு தான் எழுத வேண்டும். எந்த முகவரிக்கு எழுத என்று உங்களுக்குத் தெரியுமா? லண்டனில் மட்டும் தான் இப்பிடியா இல்லை மற்ற இடங்களிலும் இப்பிடியா என்று தெரியவில்லை.

- டுபுக்கு

# வீரத்தாலாட்டுப் பாட

அந்த வயதில் இவ்வளவும்
விளங்குமா ?. சாத்தியமா ?..
வினவுகிறார் சிலர்
அவருக்கு சாட்சியாயும் நீயே!
நிச்சயம்!
தலைவன் பாசறையில்
பறவைக்கும் புரியும்
தாய் மண்ணின்
விடுதலையின் பெறுமதி!
பார்!
நீ பயிற்சிக்காய் ஏகையில்
கத்தித் திரிந்த கூடித்திரிந்த
வரப்போரக் கரிக்குருவி
இத்தனை கொடூரங்கள் கண்டும்
அண்டை நாட்டிலா தங்சமடைந்தது ?
அழிந்த கூடுகள் செம்மையாக்கி
சீராக வாழவில்லை.!
அதுக்கு ஆசை
நீ மிதித்த மண்ணோடு உறவாட!
ஐந்தறிவென்றாலும்
நன்றி இருக்கு
தனக்காய் வாழ்ந்தவனுக்காய்
தான் வாழ!
மண்ணிற்காய் மக்களுக்காய்
எத்தனை மருத்துவர்கள்
எத்தனை இஞ்சினியர்கள்
எத்தனை எக்கவுண்டன்கள்
கையில் பட்டமில்லை
மனதோடு கனவுகள் சுமந்து ?
தாய் மண் மானம் காக்க
களத்தோடு கருவி எடுத்து
ஆக்கிரமிப்பின் விளைவறிந்து
வினை அறிந்து
எதிரி தம் பாசறை கலங்கடித்து
பருவ வயதில்
மீசை அரும்பும் காலத்தில்
குளப்படி மறந்தாய்
குறும்புகள் துறந்தாய்
கூடிக் குலாவும் கொள்கை மறந்தாய்
தாய்மண் விட்டோடி
அடைக்கலம் தேட மறந்தாய்
அகதியாய் பீ ஆர் வாங்கி
அழகான பெண்ணெடுக்க மறந்தாய்
காரும் வீடும்
வேண்டாத சகவாசமும்
களிம்பும் கழுத்தோடு சைக்கிள் செயினும்
பியரும் கானும்
பப்பும் பீசாவும்
இவையனைத்தும் மறந்தாய்
நீ அறந்ததெல்லாம்
தலைவன் மொழியும்
தாயக விடுதலையும்
விடுதலையின் தேவையும் தர்மமும.!

கரும் புலியாய் கடற்புலியாய்
வீறுகொண்டு பாய்ந்திருப்பார்..!
அவர்கள் மண்ணின் மைந்தர்கள்
மாவீரரான வீரத்தாயப்புதல்வர்கள்.!
வீரவசனம் பேசி
எட்ட நின்று கூத்தடிக்கும் கூட்டமல்ல
களத்தோடு கூடி நின்று
உங்கள் இலட்சியம் சுமக்க
தாய்மண் சுமப்பாள்
இன்னும் ஆயிரம் ஆயிரம் வீரர்கள்
உங்களைப் போலவே தீரத்துடன்!
உங்கள்
வீர இலட்சியம் நிறைவேறும்
உறங்குங்கள் கண்மணிகளே
நான் ?..
வீரத்தாலாட்டுப் பாட வேண்டும்
இன்றேல் நாவெடித்து
வீழ்திடுவேன்!
மரணத்தால் கதை எழுதிய
காவியங்கள்!

- றஞ்சன்




# அத்துளிகள் கண்ணீர் அல்ல......

ஆண்டு தோறும்
எழுதியாயிற்று
நீக்கமற நிறைந்தெழும்
உங்கள் ஈகத்தின்
இமய அளவு குறித்து...

இன்றும்,
கைவிரல் ஐந்தினையும்
மீறித்
திமிர்கின்றது ஆறாம் விரல்
உங்களை எழுத.....

புதிதென எச்சொல்லும்
இல்லாதிருந்தன
என்னிடம்.

உங்களை எழுதித் தீர்ந்து
போயிற்று
என் மொழி

எங்கள் முகவரிகளின்
மேற்பார்வை முகவரிகளே...

உங்களைச் சொல்லுக்குள்
சுருக்க முயல்கின்றேன்
முடியாதென
அறிந்திருந்தும்?..

வரி வடிவத்தின் எந்த
ஆழங்களாலும்
அளக்க முடியாத ஈகப்
புதையல்கள்

ஈழ வயல்களில் விளைந்த
பூக்களில்
சுதந்திர சுகந்தங்கள்
பரப்பிய
ஈக மகரந்தங்கள்

மிதிக்க வந்த பகைச்
சுவடுகளை
முள் முகம் கொண்டுறுத்திய
இளந்தளிர் முனைகள்

ஈகத்தை ஈவதற்கென்றே
ஈழத்தில் பிறப்பெடுத்த
இறைவர்கள்

தாய்மேனி எங்கனும்
பட்டுப் படர்ந்த
உங்கள் பாத முனைகளைக்
கொஞ்சமாயேனும்
தரிசிக்கத் தாருங்கள்

தொட்டுத் துடைத்து
எங்கள் தூசகற்றிக்
கொள்கின்றோம்....

நம்மைச் சுற்றிச் சூழ்ந்த
கறுப்புத் திசைகளின்
விளிம்புகள் தேடி
முட்டி முட்டி மோதிச்
சிதைத்து
நீங்கள் கொட்டிய சிவப்பில்
தோய்ந்த பின்புதானே
நிறத்திருக்கின்றது
நம் கிழக்கு

பூமிக்கூரையின் கீழ்
ஒடுக்கப்பட்ட
உயிர்களுக்காய்
அதிகாரம் எனப்பட்டது
அதிகபட்சமாய்ச் சில
செயற்கைக் கிழக்குகளை
மட்டுமே
செய்து கொடுக்க
முனைந்திருக்கின்றது

எமக்கெனவும் சில
கிழக்குகள்
எம் நிலத்திற்கு வெளியே
செய்யப்பட்டன.

சுற்றிக் கட்டப்பட்ட
பொட்டலங்களுக்கும்
பொதிகளுக்குமாய்
நீளும் நாக்குகள்
நம்முடையவை அல்ல
என்பதை,

அகிலச் சுவர் எங்கும்
அதிர்ந்து போக
உலக மொழிகளின்
உதவிகள் இன்றி

உரத்துச் சொன்னவர்கள்
நீங்கள்

தேசியத் தலைமையின்
தோழமை தேடி
ஆசியத் திசையைத்
தொட்டறியா
அன்னியப் பாதங்கள்
பலவும்
வன்னியை நாடி வர
வகிடு பிளந்து வழி
சமைத்தவர்கள்

மரணத்தைக்
கொன்றொழித்த
மாதவச் சுடர்களே!
நீங்கள் இறந்தகால
வீரவரலாறுகளின்
நிகழ்கால ஆச்சரியக்
குறிகள்

புல் என்று கால் வைத்த
வல்லரக்கர் சிலருக்கு
முள் தைத்த செய்தி
சொல் கோர்த்த கதையல்ல
என்பதைப் பள்ளிகள்
ஏதுமின்றிப்
பாடமாய்ச் சொன்னவர்கள்

நாட்காட்டியின்
தாள் கிழிக்கும்
நாள் ஒவ்வொன்றையும்
மீறி எழுகின்றது உங்கள்
முகங்கள்

தாய்த்தமிழ் மண்ணும்
மாதவத் தலைவன்
சொல்லும்
தவிர
வேறெதற்கும் மண்டியிடத்
தெரியா
மறக்குலக் கீற்றுகளே!

தொழுகின்றோம்

விழி கசிந்து விழும்
நம் துளிகளில் நனைகின்ற
மண் சொல்லும்

என் மடி உறங்கும் மாவீரர்
சிந்திய துளிகளிலும்
நனைந்தவர் நாம்

அத் துளிகள் கண்ணீர்
அல்ல....


- பொன்னையா விவேகானந்தன்

# தேக ஆரோக்கியம்...

.................................................... - சுரேஸ்

[PART-4]

## சீரான உணவு - you are what you eat



நான் முன்பே சொன்ன படி இதில் நமக்கு தெரியாத விஷயங்கள் எதுவும் இல்லை. சில விஷயங்களை திரும்ப திரும்ப படிப்பது மனதில் ஆழமாக பதியும்.

முதலில் இதயத்தைப் பற்றி, இதயம் நமது உடம்புக்குள் டிக்கிகொண்டு இருக்கும் ஒரு பம்ப். அது வாரத்தில் ஏழு நாட்களும், ஒரு நாளில் 24 மணி நேரமும் தொடர்ந்து ரத்தத்தை உடம்புக்குள் ஓடச்செய்து கொண்டு இருக்கிறது. அதற்குப் பதிலாக அது எதிர்பார்ப்பதெல்லாம் குறைந்த அளவிலான தொடர்ந்த பராமரிப்பு தான்.

இதயத்தை சரியாக பராமரிக்க,

1) புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுபடுதல்,
2) நல்ல ஆரோக்கியமான உணவுப் பழக்கம்
3) சீரான தேகப்பயிற்சி
4) உடம்பின் எடையை கட்டுக்குள் வைத்துக் கொள்ளல்.
5) குடிப்பழக்கத்திலிருந்து விடுபடுதல். முடியாவிட்டால், கட்டுப்பாடுள்ள குடிப்பழக்கம்.

நமது இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள இவற்றைவிட்டால் வேறு மேஜிக் எதுவும் இல்லை. இன்னும் சொல்லப் போனால், இப்போது ஆரோக்கியமாக வைத்துக்கொண்டால் எதிர்காலத்தில் பிரச்சினைகளை தவிர்க்கலாம்.எனக்கு இதயத்தில் எந்த வலிக்கான அறிகுறியும் இல்லை அதனால் நான் ஆரோக்கியமாக இருக்கிறேன் என்று நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். வலிதான் பிரச்சினைகளுக்கான ஒரே அறிகுறி என்பது அறியாமை.

முதலில் சீரான உணவுப் பழக்கத்தைப் பற்றி,

ஆரோக்கியமான உணவுப் பழக்கம் என்பது உங்களுக்கு பிடித்த உணவு வகைகளை விட்டு விடச் சொல்வதல்ல. ஆனால் எவ்வளவு தின்னலாம் என்பதைப் பற்றியது. பெரும்பாலோர் டயட் என்றால் வெறும் பழங்களையும், காய்கறிகளையும் தின்பது தான் என்று தவறாக எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். நமது உடம்பு எதிர்பார்ப்பதெல்லாம் வித்தியாசமுள்ள சீரான உணவுகள் தான்.

சீரான உணவு என்றால் என்ன?

எளிதாக புரிந்து கொள்ள நமது உணவுகளை ஐந்து வகைகளாக பிரித்துக் கொள்ளலாம். அதற்கு அருகில் அது எவ்வளவு தேவைப் படுகிறது என்பது சதவீதத்தில்,

1) பழங்கள் மற்றும் காய்கறிகள் - 35%
2) அரிசி,கோதுமை,ப்ரட் மற்றும் கிழங்கு வகைகள் -30%
3) பால் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்கள் -15%
4) கொழுப்புசத்து மிகுந்த பொருள்கள் - 5%
5) மீன், இறைச்சி அல்லது பயறு வகைகள் - 15%

நீங்கள் உங்கள் உணவுப் பழக்கத்தை முற்றிலும் இன்றே. இப்போதே மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது இல்லை. ஆனால் இன்றிலிருந்து எளிதான சிறிய மாற்றங்களை ஏற்படுத்திப் பாருங்கள். உங்களுக்கே வித்தியாசம் தெரியும்.

கீழ்க்கண்டவற்றை முயற்சித்துப் பாருங்களேன்.

- ஒருநாளைக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு நீர் அருந்துதல்.

- அதிக நார்ச்சத்து உள்ள உணவுகள் மிகவும் ஆரோக்கியமானவை.

- வசதிக்கு தகுந்தது போல் எவ்வளவு பழங்கள் அல்லது பழரசங்கள் முடியுமோ அவ்வளவு.

- உணவை எண்ணையில் வறுத்து உண்பதற்கு பதிலாக அவித்து உண்ணுதல்.

- மீன் உடம்புக்கு நல்லது. இறைச்சிக்கு பதிலாக மீன் அதிகமாக பயன்படுத்தலாம்.

- சக்கரையை குறைத்துக் கொள்ளல் (சக்கரையை சிறிதாக குறைத்துக் கொண்டால் நமக்கு முதல் sip-ல் மட்டும் தான் வித்தியாசத்தை உணர்வோம் அப்புறம் தெரியாது)

- உப்பை குறைத்துக் கொள்ளுதல்.

சீரான உணவை எவ்வளவு உண்கிறோம் என்பது மிகவும் முக்கியம். அதை எப்படி கண்டு பிடிப்பது? அடுத்த பாகத்தில் பார்ப்போம்.

LINGA & CO
Legal Advisors and Commissioners for Oaths
தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்ட திட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?
உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா? -
WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW
10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர்.
Linga & Co வணிக ஆலோசனைகளையும், book Keeping சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது.
46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BY
GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)
EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530
உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்
ESTABLISHED IN 1994

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: *info@orupaper.com*



## மணமகள் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது, 6' உயரமுள்ள தற்போது கனடாவில் நிரந்தர பிரஜா உரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். Ref:593

2. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட 28 வயது, 5'10" உயரமுள்ள தற்போது இந்தியாவில் Computer Science படித்துக்கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் இருக்கும் சகோதரி UK அல்லது EU நாடுகளில் தேடுகிறார்கள். Ref: 594

3. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது, 6' உயரமுள்ள ஆசிரியராகத் தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் உள்ள சகோதரி லண்டனில் அல்லது இலங்கை போன்ற நாடுகளில் தேடுகிறார். Ref: 595

4. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 40 வயது, 5'6" உயரமுள்ள லண்டன் பிரஜாயுரிமையுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள்.Ref: 596

5. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'6" உயரமுள்ள, பிரித்தானியக் குடியுரிமையுள்ள பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். Ref:589.

6. வடமராச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 32வயது 5'8" உயரமுள்ள, 5 வருடங்களாக பிரித்தானியாவில் வசிக்கும் GAQ படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது சகோதரர்கள் தேடுகிறார்கள். Visa உள்ளவர்கள் விரும்பத்தக்கது. Ref:590

7. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'11" உயரமுள்ள, MBA படித்து தற்போது லண்டனில் வேலை பார்க்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது மாமனார் தேடுகிறார். UK or Canada Visa உள்ளவர்கள் விரும்பத்தக்கது. Ref:591

8. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 45 வயது 5'8" உயரமுள்ள, கனடா பிரஜா உரிமையுள்ள தாரமிழந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது பெற்றோர் தேடுகிறார்கள். Ref:592

9. வடமராச்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'9" உயரமுள்ள, ஜேர்மனி பிரஜா உரிமையுள்ள தற்போது லண்டனில் தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை அவரது பெற்றோர் தேடுகிறார்கள். Ref:593

10. Jaffna parents living in the UK looking for their son, 30 years, 5' 10" tall, MSC qualified, born and grew up in UK, a suitable bride, well educated and a UK permanent citizen, only. Ref: 582

11. Jaffna Tamil, presently living in USA, 42 years, BSc qualified, well employed divorcee, looking for a suitable bride. Ref: 583

12. Jaffna Tamil sister, living in Australia looking for her brother living in the UK, 34 years, 5' 9" tall, an UK qualified Commercial Pilot, working for British Airways, a UK citizen, a suitable bride Ref: 584

13. வடமராச்சியை பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5' 9" உயரமுள்ள BSc பட்டதாரியும் Newzealand பிரஜா உரிமையும் உள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றனர்.Ref: 585

14. Jaffna parents seek for their son 26, 5'8", German graduate, ACCA partly qualified, German nationality and working in the UK, a sutable educated bride. Ref: 580

15. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு 28 வயதுடைய 5'8" உயரமுள்ள IT- Graduate 8 வருடமாக U.Kயில் தற்காலிக வதிவிட உரிமையுடன் இருக்கும் மணமகனுக்கு U.K அல்லது EU நாட்டில் பிரஜா உரிமையுள்ள மணப்பெண்ணைத் தேடுகின்றனர். Ref - 578

16. சாவகச்சேரியை சொந்த இடமாகக் கொண்ட 31 வயது 5' 9" உயரமுள்ள A/L படித்த, தற்போது லண்டனில் வசிக்கும் ஜேர்மனி பிரஜாவுரிமையுள்ள மணமனுக்கு தகுந்த மணமகளை சகோதரன் தேடுகிறார். Ref- 579

17. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 29வயது, 5'7"உயரமுள்ள 7வருடங்களாக லண்டனில் சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் வசிக்கும் குடும்பத்தினர் U.K இல் அல்லது மற்றைய EU நாடுகளில் தகுந்த மணமகளை தேடுகின்றனர்.Ref:- 569

18. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது லண்டனில் வசிக்கும் 28 வயது, 5'11"உயரமுள்ள B.Eng in computing படித்து வேலை பார்க்கும் மணமகனுக்கு U.K இல் அல்லது மற்றைய EU நாடுகளில் வதிவிட உரிமையுள்ள மணமகளை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். Ref:- 570

19. திருக்கோணமலையை பிறப்பிடமாக கொண்ட, 20 வருடங்களாக லண்டனில் வசிக்கும் 39 வயது 5'3"உயரமுடைய Electronic Engineering படித்து Broadcasting Technician ஆக வேலை புரியும் மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:- 571

20. UKல் பிரஜா உரிமையுள்ள 32 வயது 5' 7½" உயரமுள்ள மகனுக்கு பெற்றோர், படித்த UKல் வசிக்கும் ஆங்கிலம் தெரிந்த மணமகளை தேடுகிறார். Ref:- 564

21. Jaffna partent looking for a suitable bride, preferably from Sri Lanka, for her son, 31 years old, 5' 10" tall, a permanent resident of UK, an accountant student. Ref: 566

22. Jaffna parents seeking for their son, born in the UK, in 1974, 5'6" tall, M.Sc qualified, and employed as a Senior Analyst, a permanent civil servant, a suitable bride. REF 551

23. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது அவுஸ்ரேலிய பிரஜா உரிமையுடன் வேலை புரியும் பட்டதாரி 5'5" உயரமுள்ள 32 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் இருக்கும் சகோதரி தேடுகின்றார். REF: 541

24. Jaffna born, 31 years 5'5" tall. 10 years in UK completed BEng (Hons) working for BT bridegroom, looking for suitable bride. *REF 531*

25. யாழ்ப்பாணத்தை சேர்ந்த தற்போது லண்டனில் பிரிட்டிஷ் பிரஜா வுரிமையுடன் வாழும் 37 வயதான மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். *REF 526*

26. இலங்கையை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா நாட்டுரிமை பெற்ற கணக்கியல் பட்டதாரியும், தற்போது UKயில் கணக்காளராக பணிபுரியும் 28 வயது மகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகிறார்கள். *REF 516*

## மணமகன் தேவை

1. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'3" உயரமுள்ள, Nursing student ஆக தற்போது UKயில் 5 வருடங்களாக இருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை அவரது உறவினர்கள் தேடுகிறார்கள். Ref :817

2. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிக்கும் குடும்பத்தினர் தம் 29 வயது 5'3" உயரமுள்ள பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:818

3. Jaffna Tamil, parents living in Canada, looking for their son, a Canadian citizen, 40 years old, 5' tall, BSc qualified and well employed divorcee, a suitable groom.Ref: 819

4. சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட 23 வயது 5'3" உயரமுள்ள A/L படித்து தற்போது UK இருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 814

5. Jaffna parants, UK citizen, looking for their daughter, 26 years old, 5'2" tall, BA (Hons) born and brought up in the UK and according to the Tamil culture balanced with western standers, a suitable groom. She work in a Government Department. Ref: 815

6. வடமராச்சியை பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'4" உயரமுள்ள A/L படித்து இருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref: 816

7. வடமராச்சியை சேர்ந்த 26வயது, 5'2" உயரமுள்ள UKயில் பிரஜா உரிமையுள்ள, BSc (Hons) படித்து உயர்பதவி வகிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் பெற்றோர்கள் தேடுகிறார்கள். Ref: 806

8. யாழ்ப்பாணத்தை சேர்ந்த 35 வயது, 5'4" உயரமுள்ள A/L படித்து தற்போது லண்டனில் வசித்துவரும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரர்கள் தேடுகிறார்கள். Ref: 807

9. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 வயது, 5" உயரமுள்ள A/L படித்த 10 வருடங்களாக லண்டனில் வேலை பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் தந்தை தேடுகிறார் Ref: 808

10. யாழ்ப்பாணத்தை சேர்ந்த 30 வயது, 5'4" உயரமுள்ள கொழும்பில் அரசாங்க வேலை பார்க்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரர் தேடுகிறார். Ref: 809

11. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 24 வயது, 5'2" உயரமுள்ள IT படித்து வேலை கொழும்பில் வேலை பார்க்கும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் உறவினர்கள் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 810

12. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது 5'2" உயரமுள்ள A/L படித்து, யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref- 701

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5' 4" உயரமுள்ள Account student, அவுஸ்திரேலிய பிரஜா உரிமையுள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref-702

14. கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள தற்போது UK யில் வசித்து வரும் மணப்பெண்ணுக்கு 39 வயதுக் குட்பட்ட தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். தாரமிழந்தவர்களும், விண்ணப்பிக்கலாம். Ref- 703

15. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'3" உயரமுள்ள தற்போது UKயில் student visa வில், BSc Computer Science படித்துக் கொண்டிருக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை கொழும்பில் வசிக்கும் பெற்றோர்கள் தேடுகின்றனர். Ref- 704

16. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'4" உயரமுள்ள A/L படித்து, தற்போது கொழும்பில் CIMA செய்து கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகிறார். Ref- 705

17. சாவகச்சேரியை சொந்த இடமாக கொண்ட, A/L படித்த 24வயது, 5'4" உயரமுடைய மணமகளுக்கு கனடாவில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார்.Ref:- 694

18. Sister living in England looking for her younger sister, 30 years old, 5'2" tall, CIMA qualified accountant, working on work permit visa until 2009 , a sutable groom of age 33-36. Ref:697

19. Jaffna Tamil father looking for his only daughter born in 1978, 5'4" in the UK, a graduate presently a teacher a suitable groom who will be comfortable with both cultures: Ref: 698

20. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது, 5'1" உயரமுள்ள, யாழ் மருத்துவமனையில் Nurse ஆகத் தொழில் புரியும் மணமகளுக்குத் தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref:820

21. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 30 வயது, 5'6" உயரமுள்ள கனடா பிரஜா உரிமையுள்ள Diploma படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள். Ref: 821

22. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது, 5'1" உயரமுள்ள தற்போது கொழும்பில் படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref: 822

23. Jaffna parents, Canadian citizens looking for their daughter, 35 years old, 5'1"tall, graduate from Candian University Canadian citizen and employed. Ref: 823

24. வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது, 5'3" உயரமுள்ள தற்போது பட்டதாரி ஆசிரியராகத் தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை சுவிஸில் உள்ள சகோதரி இலங்கையில் தேடுகிறார். Ref:824

25. வவுனியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது, 5'5" உயரமுள்ள கனடா பிரஜா உரிமையுள்ள விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு தகுந்த மணமகனை சுவிஸ்ஸில் உள்ள சகோதரி தேடுகிறார். Ref:825

26. Jaffna parents looking for a suitable groom for their daughter, 24 years old, 5'3" tall, CIMA part qualified. Prospective groom must be a professional and UK citizen or permanent resident. Ref:826

27. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது, 5'4" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref:827

28. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது, 5'4" உயரமுள்ள தற்போது கனடாவில் M.Sc. படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகிறார். Ref:828

29. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது, 5'2" உயரமுள்ள, டியு பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகிறார். Ref:829

30. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 41 வயது, 5'2" உயரமுள்ள, ஆசிரியராகத் தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைக் கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகிறார்கள். சுநக:830

31. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது, 5'3" உயரமுள்ள, தற்போது கொழும்பில் CIMA படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு தகுந்த மணமகனை கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகிறார். Ref:831

32. Mother seeks suitable groom for her daughter born in 1976, 5'4"tall, LLB Qualified. Prospective groom to have minimum graduate level education, modern, kind and caring. REF 664

# கவிதை

## தாகமது தமிழீழம்

கண்ணீரில் நீந்துமெங்கள் தேசம் கழுவி
செந்நீராய் ஓடுமினி பகைவர் குருதி.

அந்நாளில் கொடிநாட்டி அடித்த கொட்டம்
இந்நாளில் வந்ததவர் தலைக்கே நட்டம்.

மலைமுகட்டு நீர்வெள்ளம் பள்ளம் நோக்கி
குமுகுமுக்கப் பாய்ந்ததுபோல்– புலிகள் சேனை

செந்தணலாய் செருக்களத்தில் வந்தே பாய்ந்தார்
செல்கிறது பகைவெள்ளம் கடலில் பாய.

ஐந்தாண்டு முன்னாலே படை நடத்தி
இழிபகைவர் யாழ்மண்ணில் காலை வைத்தார்.

அன்னவர்கள் அந்தன்று இரண்டுவழி சொன்னார்
தமிழ்மாந்தர்க் கினியுய்வு இல்லை யென்றே.

சயனைட்டை உள்ளெடுத்தால் மரணம், இல்லை
கடலில்தான் பாயவேண்டும் புலிகள் என்றார்.

இன்றவர்கள் படைகளுக்கே அந்தச் சோகம்.
ஐயோஅப் பகைகழுத்தில் சயனைட் இல்லை.

முக்காலில் உலவுகின்றான், விலங்கைப் போலும்
மூர்க்கனவன் மந்திரியாய் ஆனான். மேலும்

மூவுலகும் பொய்ச்செய்தி திரிக்க வெண்ணும்
மூடரவர் சிந்தனையை என்ன சொல்ல.?

உயிர்பிழைக்க நாம்கொடுத்த காலம் தன்னில்
ஓடாத பகைவனவன் சிரங்கள் கொய்தே

பூந்தொட்டி யாய்ஆக்கி நாளை நல்ல
மலர்ச்செடிகள் இட்டுஅதில் நாம் வளர்ப்போம்.

செம்மணியில் சிறுக்கர்களின் செயலுக் கெல்லாம்
செருக்களத்தில் கணக்கெடுத்து சிர மறுப்போம்.

போரென்று சொல்லியினி பகைவர் வந்தால்
அவர்காலை யுடைத்தெங்கள் அடுப் பெரிப்போம்.

அப்போரில் எம்வீரர் மண்ணில் வீழ்ந்தால்
மாவீரர் என்றெங்கள் மண்ணில் விதைப்போம்.

பாதகர்கள் என்றெம்மை உலகம் பேசின்
பேசட்டும் நாமெங்கள் வேலை முடிப்போம்.

மாவீரர் கனவையெங்கள் நெஞ்சில் வைப்போம்
அவர்பாதை தனிலெங்கள் காலை வைப்போம்.

புத்தாயிரக் கார்த்திகைத் திங்கள் ஒன்றில்
புகுந்திடுவார் புலிவீரர் எங்கள் மண்ணில்.

மேகத்தில் மலர்ச்செடிகள் இல்லை ஆனால்
மழைபொழிந்து, அவர்வீரம் வாழ்த்தும் மேகம்.

தாகமது தமிழீழம் ஒன்றே என்னும்
தாரகத்து மந்திரமே மூச்சாய் ஆகும்.

*- தயா ஜிப்ரான்*

## கார்த்திகை இருபத்தியேழு

வீரம் செறிந்த மண்ணிலே
வீழ்ந்த நல்ல விதைகளே
வீழ்ந்து விருட்சம் ஆகியே
வீசும் காற்றில் கலந்தீரே

சாவை சவாலிற்கழைத்து
சாவிற்கே மணியடித்து
சாதனை சமைத்த சோதியே
சாந்தமான சண்ட மாருதியே

நட்ட நடு நிசியிலும்
நடுக்காட்டின் பிடியிலும்
நதியோடைகளின் கரையிலும்
நம்நாடு முழுவதும்

எங்களைக்காக்கவென்று
எதிரிபடைகளைவென்று
எமக்காக உனைக்கொன்ற
எம்காவல்தெய்வங்களே

மாவீரா நீ மரணம் வென்றாய்
மாவீரா நீ மறுசனனம் கண்டாய்
சாகாத வரம் பெற்ற சாதகனே
சரணடைகின்றோம் உன் பாதத்திலே.

*- ஜெயா*

## மாவீரராய் நம் முன்னே...

மறவர்கள் இவர்கள்..
மனிதர்களாய் வாழ்ந்து காட்டிய..
மரணத்தால் மரணிக்க முடியாத
மானிடங்கள் இவர்கள்... !

தமிழனாய் வாழ்ந்து..
தமிழிற்காய் வாழ்ந்து..
தமிழிற்காய் தங்களை அர்ப்பணித்த..
தன்னலமற்ற மனிதர்கள்...!

மானமிழந்து மற்றவர்க்கு
மண்டியிட மாட்டோம் என்று..
நஞ்சினை நெஞ்சினில் சுமந்து..
சாவினில் வரலாறு படைக்கும்..
சாதனையாளர்கள் இவர்கள்... !

புதிதாய் தமிழன்
வரலாறு எழுதிட..
உதிரத்தை மையாய் வழங்கியவர்
சுதந்திரத்திற்காய் தம்
உயிரை வழங்கியவர்
நம் மனக்கண் முன்னே
மாவீரர் என்ற நாமம் கொண்டு
வாழ்ந்திடும் காவலர்கள் இவர்கள்...!

*- தமிழன்*

## விடியலின் தொட்டில்

பூக்களே
அமைதியிலுமமைதியாய் மலருங்கள்
நீங்கள் அச்சமின்றி மலர்ந்திட
போராடியவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்

குயில்களே
மெல்ல மெல்லக் கூவுங்கள்
நீங்கள் மிரட்சியின்றி கூடுதிரும்ப
போராடியவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்

மயில்களே
ஓசையின்றி நடனமிடுங்கள்
நீங்கள் இயல்பாக உலாவர
போராடியவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்

மான்களே
அதிர்வின்றி ஓடியாடுங்கள்
நீங்கள் சுதந்திரமாக சுற்றித்திரிய
போராடியவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்

காடுகளே
காற்றுடன் விளையாட்டை
கவனமாய் நடத்துங்கள்
நீங்கள் பசுமையாய் பரந்து வளர
போராடியவர்கள் ஓய்வெடுக்கிறார்கள்

எம்
மாவீர கல்லறையே
விடியலுக்கான தொட்டில்

தேசமென்பது
மனிதர்களுக்கு மட்டுமன்று
மண் விடுதலை
மானுட விடியல் மட்டுமன்று!

*- இ. இசாக்*

## old is gold

**பாரதியார்.**

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்து என்னை அழித்திட்டாலும்
சுதந்திரதேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே

*(கி.பி. 20ஆம் நூற்றாண்டு)*

**இ. முருகையன்– (ஈழம்)**

கொட்டுண்டு கருகி வீழ்ந்த
கொழுந்துகளே இளம்தளிர்களே
மொட்டாகி மலர்ந்து குலுங்கிய
மோகனங்களே வாலிபங்களே
சட்டென்று வீசிய சூறையில்
சாய்ந்து கிடக்கும் பழக்குலைகளே
வெட்டுண்டு துண்டுகளாகி
வீழ்ந்து சிதறிய சீவியங்களே
உங்களை நாங்கள் நினைவு கூருகின்றோம்
உயிர்கலந்து உணர்வு சேருகின்றோம்.

*(1991)*

## நேரில் உன் முகம் பார்த்ததில்லை

நேரில்
உன் முகம் பார்த்ததில்லை
நினைவில்
உன் முகம் மறந்ததில்லை

வயதில் எனைவிட
சிறியவன் நீ
வாழ்வில்
எவரினும் பெரியவன் நீ

அறமும் அகிம்சையும்
தோற்ற பின்னர்
அறுவை
முறையே ஏற்றதென
ஆயுதம்
கைகளில் ஏந்தி வைத்தாய்
அக்கினி
ஆற்றில் நீந்தி வந்தாய்..

எந்தரின்
தலைகளை வாங்கியவாள்
எத்தனை
துயரம் தாங்கியதோள்
அத்தனை
துயரிலும் உடன்நின்றார்
மொத்த
ஈழத் தமிழ்மக்கள்
இடிந்தது
எதிரிகள் ஈனத்தனம்
விடிந்தால்
வெல்லும்உன் ஈழத்தவம்
விரைவில்
இறுதிப் புயல்வீசும்
வேங்கைகள்
ஆள்வார் தமிழ்த்தேசம்

*- பேராசிரியர் சுப.வீரபாண்டியன் (தமிழ்நாடு)*


# தமிழ்த்தாய் படிப்பகம்

| பாடம் | ஆசிரியர் |
| --- | --- |
| சங்கீதம் | திருமதி மனோரஞ்சனி |
| மிருதங்கம் | திரு.ம. விஜயராஜா |
| நடனம் | திருமதி. பாலநந்தன் பாமினி |
| Keyboard | பிறின்சன்.கணேசரட்ணம் |
| வயலின் | திரு துரை பாலசுப்பிரமணியம் |
| Flute | (வேணுகானமணி) – பிச்சையப்பா. ஞானவரதன் |
| Drum | பிறின்சன்.கணேசரட்ணம் |
| Karate | திரு.செ.கணேசலிங்கம் |

19.11.05 இல் இருந்து ஆரம்பம்

தையல் நடத்தப்படும்

எமது படிப்பகத்தில் ஆரம்பமாக உள்ள துணைப்பாடங்கள்

| பாடம் | ஆசிரியர் |
| --- | --- |
| Key Stage 1-2 | திருமதி தேவராசா |
| Key Stage 3 | திரு சி.சிவலீலன் |
| GCSE | திரு சி.சிவலீலன் |
| English | திரு குமார் |
| Law | திரு.பொன் தேவராசா |

அத்துடன் பிரித்தானியாவில் பிரஜா உரிமை பெற ENGLISH, ஐக்கிய இராட்சியத்தின் வாழ்க்கை முறை பற்றிய வகுப்புகளும் ஆரம்பம்


05.12.05

Exam Preparation for (11+, SATS, GCSE and A/L)
1081 Garratt Lane, Tooting, London SW17 0LN
Diksons Estate Agents ற்கு பின்னால்
Tooting Broadway Tube Station ற்கு மிக அருகாமையில்
Email: tamilthai@hotmail.co.uk

Tel/Fax: 020 8696 1394
Satha: 078 5907 5236
Guna: 079 6085 8065
079 0820 7312

படிப்பகம்
திறந்திருக்கும் நேரம்:
காலை10.00-1.00
மாலை5.00-8.00

# ரொமி



மழை பெய்து ஓய்ந்தாப்பிறகு வருகிற காற்றுப்போல சுகமான காலம் அது. பனிக் குளிர்போன்ற கடுமையானதல்ல அந்தக் காலம். நிலாப்பொழுதில்சோழகம் வீசும் நேரத்தில் மணலில் சுகமாகத் தூங்கும் வேளை அது. நாமும் அழுததில்லை யாரையும் அழவைத்துப் பார்த்ததுமில்லை. ஆடு அழுகிற தேயென்று அள்ளிக் குழை போட்டோம். வாழை வாடுகிறதேயென்று வாய்க்கால் வெட்டி நீர் விட்டோம். நாய்க்குக் கல்லெறிந்து கதறியழப் பார்த்ததில்லை.

பனையோலை வெட்டி இரவிரவாய் ஈர்க்கு நீக்கி, ஓலை கிழித்து மாட்டுக்கு வைத்தோம். தவிடு புண்ணாக்கு என்று தேடித் தேடிக் கொடுத்தோம். (விசாலாட்சி வாத்தியார் பிண்ணாக்கு என்று பிழை திருத்தத்தில் சொல்லித் தந்தார். புண்ணாக்கு என்று அதற்குப் பொருத்தமான வேறொரு சொல் வருமா? ஆட்களை ஏசும் அழகான சொல் அது.) சின்னையன் கொக்கத்தடியும் கொண்டு இரவிரவாக களவாக, குழைவெட்டி ஆட்டுக்குக் கொடுத்தான். (பேய் உலாவுகிற நேரத்தில் எப்படி அதனைச் செய்தான்?) அரிசி கழுவிய தண்ணியும், அதனுள் மரக்கறிகளின் தோலும், முனையும், அடியும் போட்டு கழுநீர்த் தண்ணி என்று அம்மா ஆட்டுக்கு வைப்பா.

மீன் கழுவுகிறபோது பூனையும், நாயும் பக்கத்தில் நின்று-மீதியைத் தின்னும். பூனை தன் பங்கை கிறுகிறுவெண்டு திண்டு முடித்து நாயின்வாயில் உள்ளதையும் பறித்துக்கொண்டு ஓடும். அதற்காக எங்கள் ரொமிக்கு வீரம் இல்லை என்றல்ல. கொஞ்சம் தள்ளி சிங்கம் அண்ணையின் ரெக்ஸ் எனும் அல்சேஷன் நாய் ஒளிந்திருந்து கடிப்பதற்காகத் தருணம் பார்த்திருந்தது.

றெக்ஸின் கழுத்தாங்குத்தியில் கவ்விப் பிடித்திருக்கிறது. றெக்ஸ் தன்னால் ஏலுமான வரைக்கும்தலையைஉதறிஉதறிப்பார்த்திருக் கிறது. விடுபட முடியவில்லை. நாங்கள்தான் ரொமியை அடித்து, உதைத்து றெக்சைக் காப்பாற்றினோம். ரொமி பாவம், நல்ல நாய். எல்லாத்திலயும் அன்பு. ரொமிக்கு சில வரையறை உண்டு. இவ்வளவையும் இவ்வளவு பேரையும் தன்னுடையது என்று உறுதியாக நம்பியது.

பூனையும், எங்கள் வீட்டுக் கோழிகளும் எங்களது ஆடும் அதனுள் அடங்கும். எங்கள் வீட்டுப் பூனை மகா குழப்படி. அற்றும் பயந்தாங் கொள்ளி, புஸ் புஸ் என்றால் ஓடிவரும். ரொமி வாடா . . . . என்றால் ரொமி விரைவாக ஓடிவருவது போல், புஸ் ஓடி வராது. ஆனால் வரும். அது வீரம் காட்டுவது எங்களுடனும் ரொமியுடனும் மாத்திரம்தான். சேவல் கொத்த வருகிறதென்றால் ஓடுகிற சுறுக்கைப் பார்க்கவேணும். சரசரவென வேப்ப மரத்தில் ஏறிமுழுசுகிற முழுசலைப் பார்க்கவேணும். ஆரும் வந்தார்கள் என்று ரொமி வாலை ஆட்டமுடியாது. ரொமி வால் ஆட்டினால் புஸ் பாய்ந்து ரொமியின் வாலைக் கவ்வி தன் கால்களின் இடையில் வைத்து விற ாண்டி விளையாட்டுக் காட்டும். இதே பாம்பைக் கண்டால், சாரைப்பாம்பு அல்லது கோடாரிப் பாம்பாகத்தான் இருக்கட்டுமன் - பாம்பைக் கண்டால் துள்ளித் துள்ளி ஓடிப்போய் வேப்ப மரத்தில் ஏறும். வேப்பமரம் எங்களது பூனைக்காகத்தான் முளைத்து, இந்த மாதிரி விரிந்திருக்கிறதோ தெரியாது.

ரொமி எவ்வளவு உதவிகள் புஸ்சுக்கு செய்து விட்டது. புஸ்சுக்கு அது ஒன்றும் விளங்குவதில்லை. எங்கள் வீட்டில் கண்ணாடி அறைக்குள் அம்மா கிடாரங்கள், குடங்கள், சருவச்சட்டிகள் என்று வைத்திருப்பா. ஒவ்வொன்றும் அரிசியாலும், மாவாலும், உழுந்தாலும்,பயறாலும், குரக்கனாலும், உப்பாலும், புளியாலும், ஊறுகாயாலும், வடகத்தாலும், செத்தல் மிளகாயாலும், அவித்த மிளகாயாலும், புழுக் கொடியலாலும் நிறைந்திருக்கும். எனக்குப் பொடியங்கள் பிறந்த பிறகும் அம்மா அப்படித்தான் வைத்திருந்தா.

பொடியங்களுக்கு இரண்டு மூன்று வயதானபோது எங்கிருந்துதான் அவங்களுக்கு இந்த வம்புக் குணம் முளைத்ததோ? அவங்கள் கிடாரத்துக்குள்ளோ, குடத்துக்குள்ளோ, சருவச் சட்டிக்குள்ளொ மூத்திரம் பெய்து விட்டு வருவார்கள். அரிசியும் மாவும் அடியில் காய்ந்து திரணையாக இருக்கும். அட அம்மா தோசை சுட உளுத்தம்மா குழைத்து வைத்த ஏதனத்துக்குள்ளும் கூட மூத்திரம் பெய்திருக் கிறாங்கள்.

இந்த மாதிரிக் குழப்படி அல்ல புஸ் அப்பொ செய்தது. கூரையில் சாரைப் பாம்பு துரத்த ஓடுகிற எலிகள் தவறிப் போய் கண்ணாடி அறைக்குள் விழுந்தால் அந்தப் பெரிய பாத்திரங்களுக்கிடையே சடார் பிடாரென ஓடும். பெரும் சத்தமாயிருக்கும். அந்த நேரம் வீட்டினுள்ளே புஸ் நின்றால் வாலையும் கிளப்பிக் கொண்டு பாய்ந்து ஓடிப் போய் வேப்பமரத்தின் உச்சியில் ஏறி நின்று பார்க்கும். வெளியில் நிற்கும் ரொமி அந்தக் கடகடச் சத்தம் கேட்டு, கண்ணாடி அறையில் ஓடிவந்து, எப்படியோ எலியைப் பிடித்துவிடும். எலி துடிக்கத் துடிக்க கவ்விக் கொண்டு வெளி வரும். வேப்பமரத்தின் உச்சியில் இருந்த புஸ், கிறுகிறுவென கீழிறங்கி ஓடிவந்து ரொமி யின் வாயில் இருக்கும் எலியை பறித்துக் கொண்டு பற்றைப் பக்கம் ஓடும். தன் கடமை முடிந்ததென ரொமி வேப்பமரத்தின் அடியில் படுக்கும

ஆனால் ரொமிக்கு கடமை முடிவதில்லை. அதுஎங்களுக்கும், எங்களால் விரும்பிவளக்கப் படுகிற அனைத்து உயிர்களுக்கும் சேவகம் செய்தான். அம்மா ஆடுகளைப் பற்றைப் பக்கம் கொண்டுபோய் மேயக்கட்டுவா. ரொமியும் கூடப் போகும். இடையில் ஆட்டுக்கு கழுநீர்த் தண்ணி கொண்டுபோய் வைக்கப் போவா. ரொமியும் கூடப்போகும். மத்தியானம், நடுவெய்யில். ஆடு பாவம் என்று அம்மா ஆட்டை அவிழ்த்து வருவா. ரெமி யும் கூடவரும். இடைப்பட்ட நேரம் ஒருநாள், ஆடே அவிழ்த்துக் கொண்டு தோட்டப் பக்கம் மேயப் போய்விட்டது. என்ன நடந்ததோ, எப்படி நடந்ததோ தெரியாது. ரொமி ஆட்டின் கயிற்றை வாயில் கவ்விக்கொண்டு வீட்டை இழுத்துக் கொண்டு வந்தது.

பிறர் வீட்டுக் கோழிகள் எங்கள் வளவினுள் வரமுடியாது. எங்கள் வளவு எங்கள் கோழிகளுக்கு மட்டுமே உரியது. அது ரொமி க்குத் தெரியும். பிற கோழிகளை வேலிவரை கலைத்து வெளியே அனுப்பி விட்டு வரும். நானோயா மாமாதான் ரொமியாய் பிறந்திருக் கிறார் என்று அம்மா சொல்வா. அம்மா மாத்திரமல்ல, நானோயா மாமாவைத் தெரிந்த ரொமியைப் புரிந்த அனைவரும் சொல்வார்கள்.

*- அ.இரவி*
*(காலம் ஆகிவந்த கதை)*

FINANCIAL SERVICES
COMMERCIAL
PROPERTY MANAGEMENT
VALUERS

WILSON
ESTATE AGENTS LTD

THE NATIONAL ASSOCIATION OF ESTATE AGENTS NAEA

FOR SALE

Croydon

| | | |
|---|---|---|
| Two Bed House | Bologne Road | £172,000 |
| Two Bed House | Princess Road | £169,000 |
| Three Bed House | Fairholme Road | £199,950 |
| Three Bed House | Fair Holm Road | £ 219,950 |
| Four Bed House | Grace Ltd | £ 224,950 |

TO LET

Croydon

| | | |
|---|---|---|
| Two Bed / 3 Receptions/2Bath | Dennett Road | £800pcm |
| Two Bed / Through Lounge | Pendevon Road | £825pcm |
| Three Bed / Through Lounge | Mitcham Road | £850pcm |
| Four Bed / Two Receptions | Fair Holm Road | £1000pcm |

வீடு வாங்கவோ, விற்கவோ, வாடகைக்கு
பெறவோ நாடுங்கள்
WILSON ESTATE AGENT
குறைந்த வட்டி வீதத்தில் Mortgage
வசதிகள் செய்து தரப்படும்.
இதில் இருப்பவை சில வீடுகள் இதை விட
எம்மிடம் இன்னும் பல வீடுகள் உள்ளன
Tel: 020 8689 6800
Web: www.wilsonestate.co.uk
331 London Road, Croydon, Surrey CR0 3PA
Branches: Southall, Tooting, South Harrow

# வீழா வீரங்கள்...!



அதிகாலை ஒரு மணி இருக்கும். வெடிச்சத்தம் காதைப் பிளக்க.. நித்திரை இடையில் கலைகிறது. ‘சண்டை தொடங்கிட்டுது எல்லாரும் எழும்புங்கோ’ அம்மா அவசரப்படுத்திக் கொண்டிருக்க, பலாலிப்பக்கம் இருந்து ‘ஆட்லறிகளும்’ கூவுகின்றன. ‘மண்டை தீவுப்பக்கம் தான் அடி விழுகுது’ அப்பா தன் பங்குக்கு சொல்லும் பொழுதே வெடிச்சத்தம் உக்கிரமடைகிறது. பயம் கௌவிக் கொள்ள வீட்டை விட்டு வெளிய வந்து மாமரத்துக்கு அருகில் நின்ற படி அவதானிக்கிறோம். ‘சந்திரிக்கா போட்ட யுத்த நிறுத்தம் இந்தளவும் தானா?’ அம்மா ஏக்கத்தோடு என்னைப் பார்த்துக் கேக்க, ‘அவ்வள் கதிரை பிடிச்சிட்டாள் எல்லோ எனி என்னவும் செய்வாள்’ அப்பா பதிலுரைக்கிறார். நித்திரை குழம்பிய பக்கத்து வீட்டு ‘அங்கிளும்’. வெளியே வந்து, வீதியில் நின்றபடி ‘என்ன அடி தொடங்கிட்டுது போல’. பதிலுக்கு அப்பா ‘ஓமோம் ஓமோம் சத்ததைப் பார்க்க அப்படித்தான் தெரியுது, பலாலி கோவமா இருக்குது இழப்புகள் போல’ .... ‘இருக்கும் விடிய பேப்பரில பார்க்கத்தான் தெரியும்’. என்ன சாதாரணமாய் இருக்கினம். என் மனம் கேள்வி கேட்டுவிட்டு, நினைவுகளால் விரிகின்றது.

அவனை சந்தித்து நண்பனாக்கியது அதிஸ்டமோ துரதிஸ்டமோ நான் அறியேன். வீட்டுக்கு அருகில்தான் அவனும் வாழ்ந்தான். இருந்தாலும் நாங்கள் பேசிக் கொண்டதே யில்லை. கனகாலம் முகம் அறிந்திருந்தும் பேச்சுக்கு அவசியம் இருக்கவில்லை. அன்று ஒருநாள் திலீபன் அண்ணாவின் நினைவு நாளுக்காய் வாழைமரம் கேட்டு வீட்டுக்கு வந்தான். ‘வாழைமரம் வேணும் தருவிங்களா?’ ‘ஏன் தம்பி எதுக்கு?’ சம்பிரதாயமாய் பதில் கேள்வி எழுகிறது அம்மாவிடம் இருந்து. ‘திலீபன் அண்ணாவின் நினைவு நாளுக்கு ‘ஆன்ரி’. ‘அதுதான் பொடியங்கள் வாழைமரம் கட்ட வேணாம் என்றிட்டினம் எல்லோ பிறகேன் கட்டுறீங்கள்..’. ‘ஓம் ‘ஆன்ரி’ இது நான் எங்கள் வீட்டில படம் வைக்க’ பதிலுக்கு அவன். ‘சரி தம்பி வெட்டிப் போங்கோ’ ‘அந்த வாழைகளைக் காட்டி விடப்பு’. என்னிடம் அம்மா. கத்தியோடு வாழை காட்ட அவனைத் தொடர்கிறேன். அப்போ.. ‘உங்களைக் கண்டிருக்கிறன் எங்க இருக்கிறனீங்கள்’ தெரிஞ்சும் கேட்கிறேன்.. ‘செல்வாண்ணா கடைக்கு அருகில’ எங்க படிக்கிறீங்கள் ‘கொக்குவில் இந்துவில’..பதிலுக்கு அவன் ‘நீங்கள்’... நான் ‘பற்றிக்ஸ்’.

அன்றிருந்து சந்திக்கும் போதெல்லாம் நாங்கள் கதைத்துக் கொள்வோம். ஒரு நாள் அவனே கேட்டான். ‘நீங்கள் தமிழுக்கு ரியுசன் போறனீங்களோ’.. இல்லை நான் தமிழுக்குப் போறதில்லை.. ‘கந்தசாமி மாஸ்ரட்ட போக விருப்பமா’. ‘அம்மாட்டக் கேட்டிட்டு சொல்கிறேன்’ அம்மாவிடம் கேட்க அவாவும் சம்மதிக்க நாங்கள் இருவருமே அவரிடம் படிக்க இணைந்தோம். அவருடைய வகுப்புகள் விடிய 6 மணிக்கு ஆரம்பிக்கும்.அவன் விடிய 5:00 க்கே வீட்டு கேற்றில் தட்டிக்கொண்டு நிற்பான். எனது ‘சைக்கிளில்’ அக்கறையோடு தோழமையோடு இருவரும் வகுப்புக்கு போவோம். கட்டுரைகள் வீட்டு வேலைகள் கலந்தாலோசித்து செய்வோம். அப்படியே நாங்களும் நல்ல நண்பர்களானோம்.

திடீர் என்று ஒருநாள் நான் கந்தரட்ட வரேல்ல என்றான்..‘ஏன் என்ன பிரச்சனை..’. என்றேன். ‘பிரச்சனை ஒன்றுமில்ல’...என்று இழுத்தான். ‘சொல்லுங்கோ நாங்கள் இயன்றது செய்யுறம் என்ற.. ‘நான் வேற ரியுசனுக்கும் போறனான்.. எல்லாத்துக்கும் காசு பிரச்சனை அதுதான்’ என்றான். பாவம்.. அது உண்மைதான். அவன் வீட்டில் அம்மா தான் எல்லாம்..வருமானம் குறைவுதான். அவன் அப்பா வேறு திருமணம் செய்து போய்விட்டார். நான் சொன்னேன் ‘சரி நாங்கள் கந்தரோட கதைப்பம்... அவர் கஸ்டம் என்றா இலவசமாப் படிக்க விடுவாராம்’. கதைச்சுப் பார்ப்பமே என்றேன். ஓம் என்றான். நாங்களும் கதைக்க அவரும் ஓம் என்ற அவன் வகுப்பைத் தொடர்ந்தான். பிரச்சனைகள் ஏதுமின்றி எங்கள் கல்வியும் நட்பும் தொடர்ந்தது.

வழமை போல் அன்றும் வகுப்பிருந்தது. ஆனால் அவன் வரவில்லை. வரமாட்டான் என்று சொல்லவும் இல்லை. காத்திருந்துவிட்டு நான் வகுப்புக்கு சென்றுவிட்டேன். அடுத்த நாளும் அவன் வரவில்லை. வீட்டில் போய் விசாரிக்க அவன் உறவுக்காரர் வீட்டுக்கு கிளிநொச்சி போனதாகச் சொன்னார்கள். ஏக்கம் ததும்ப எப்ப வருவார் என்று கேட்டேன். ‘அவர் அங்க இருந்துதான் படிக்கப் போறார்’ என்றார்கள்...அது கேட்டது முதல் மனசு கனத்தது. நண்பனென்று அவனுடன்தான் அதிகம் பழகியது. இருந்தும் இடையில் இப்படிச் செய்திட்டானே ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை... கோவமும் கவலையும் சேர ஏமாற்றத்துடன் நட்புக்கு முற்றுப்புள்ளி வைத்தேன்.

***எதிர்பார்ப்புகள்***

***இல்லா***

***உன்னதங்கள்***

***மாவீரர்கள்***

மணலாறில் மின்னல் இராணுவ நடவடிக்கை தொடங்கிய போது ஒரு மாதத்துக்கும் மேலாய் பெரிய சண்டை. காயமடைந்த போராளிகள் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்கள். பாடசாலையில் இருந்து போராளிகளைப் பராமரிக்க நண்பர்கள் போனார்கள். நானும் ஒரு நாள் கூடிப் போனேன். அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருப்பது அறியாமல் என் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். அப்போ ‘இங்க ஆக்கள் அதிகம் நிக்கிறீங்கள் மற்ற வாட்டுக்குப் போங்கோ’ என்று ஒரு போராளி அண்ணா சொன்னார். நானும் எங்களில் சிலரும் அங்கு போனதும் கண்டகாட்சி மனதை உலுக்கியது. முதற் கட்டிலில் அவன்.... நண்பனாகி.. சொல்லிக் கொள்ளாமலே.. என்னைப் பிரிந்தவன் கால் ஒன்றை இழந்து காயத்தோடு அனுங்கியபடி.... ஓடிச்சென்று பரிவோடு பார்வைகளால் பேசினேன். அவன் கண்கள் கலங்கின, ஏக்கங்கள் ததும்ப என் கைகளைப் பிடித்தான். கவலைப்படாதே எல்லாம் சரியாகிடும் என்று ஆறுதல் கூறிவிட்டு அவனையும் மற்றவர்களையும் பராமரிக்கும் பொறுப்பை கேட்டு வாங்கி சில தினங்கள் செய்தேன்.

சில வாரங்கள் கழித்து காயங்கள் ஆறி அவனும் வீட்டுக்கு வந்து பேசினான். நான் மீண்டும் போகப் போறன். ‘அம்மா பாவமில்லையா? என்றேன்..’ அப்படிப் பாத்திருந்தா நான் போயிருப்பேனா.. என் கடமையை நான் முழுக்க முடிக்க வேணும்’ என்றான் அவன். அவனிடம் உறுதி தெரிந்தது.. வேட்கை இருந்தது. பாசறையில் வளர்ந்தவன் எல்லா.. திடமாய் இருந்தான். உன் இலட்சியம் வெல்ல வாழ்த்துக்கள் என்று வாழ்த்துவதை விட வேறெதுவும் பேச சந்தர்ப்பம் அளிக்க வில்லை அவன். அவனுடைய உறுதி என்னை வியக்கவைத்தது. அன்று ஒருநாள் கோபத்தில்.. அவனுடன் வைத்த நட்புக்கான முற்றுப் புள்ளியை அந்தக் கணமே அகற்றிக் கொண் டேன். ஒரு இலட்சிய வீரனை நண்பனாக்கியதில் எனக்குள் இறுமாப்பு பற்றிக் கொண்டது.

அதன் பின் எங்கு சண்டை என்றாலும் அவன் எண்ணங்களே என்னை ஆட்கொள்ளும். இன்றும் சண்டை என்றதும் அவன் எண்ண ங்களே என்னில் வந்து மோதின. பொழுது விடிய விடிய சண்டையின் உக்கிரம் தணிந்தது. பயம் நீங்கி கொஞ்சம் படுப்பம் என்று தூங்கிய நான் எழும்ப 10 மணிக்கு மேல ஆகிட்டுது. முகத்தைக் கழுவிட்டு சைக்கிளை ஒரு மிதி மிதிச்சு பேப்பரோட வந்து நின்றேன். செய்தி பெரிசா இல்லை. ‘மண்டைதீவு இராணுவ முகாம் மீது தாக்குதல்’ தலைப்புச் செய்தியோடு விபரம் பெரிசா இருக்கவில்லை. விபரங்கள் கிடைக்கல்லப் போல ஸ்பெசல் பேப்பர் வரும் என்று காத்திருந்தன். வீட்டில் எல்லோருக்குள்ளும் செய்தியறிய ஏக்கம் கலந்த ஆவல். அன்றைய பொழுது அசாதாரண மாகவே கழிந்து கொண்டிருந்தது.

பிற்பகல் போல ஸ்பெசல் பேப்பர் வந்தது. விபரங்கள் தேடத்தேட ஏக்கங்கள் அதிகரித்தது, போராளிகளுக்கு என்ன இழப்பு. விபரம் காணேல்ல என்று எண்ணியபடி பக்கங்களைப் புரட்டினேன். ஓர் இடத்தில் வீரச்சாவு பட்டியலில் சிறிதாக இருந்தது. சில பெயர்கள் மட்டுமே இருந்தன. அப்பாடா பெரிய இழப்பு இல்லை. என் நண்பன் அவன் பெயரும் இருக்கவில்லை. ஏதோ சொல்லி மனம் தன்னைத்தானே தேற்றிக் கொண்டிருக்கும் போது சோக கீதம் இசைக்கும் சத்தம் கேட்டது. அப்போதுதான் மனதுக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வை உணர்ந்தேன். பல கேள்விகள் முளைக்கலாயின.. அவன் மட்டுமா எனக்கு நண்பன்.. பழகினால் தானா நட்பு.. சொந்த மண்ணுக்காய் வீழ்ந்துவிட்ட இவன் நண்பன் இல்லையா.. ஏன் நான் இப்படி சுயநலத்தோடு ..??! விடை காணத் துடித்தேன்.. அன்றிலிருந்து எல்லாப் போராளிகளயும் என் நண்பர்களா எண்ணிக் கொண்டேன். நண்பன் ஒருவன் வித்தாகி விழுந்துவிட்டால் கண்ணீர் சிந்தித்தான் செய்தியே படிப்பேன். வித்தாகி விட்டவர்களுக்கு தேடிச் சென்று மரியாதை செய்வேன். ‘எதிர்பார்ப்புகள் இல்லா உன்னதங்கள் மாவீரர்கள்’ என்ற வசனத்தை எனக்குள் பொறித்துக் கொண்டேன்..! அவர்களை உதாரணமாக்கி வாழப் பழகிக் கொண்டேன். உண்மையில் என் நண்பனே இந்தனை மாற்றங்களுக்கும் வித்திட்டவன். இப்போ அவனே புரட்சியாளன் எனக்குள். பிறிதொரு சண்டையில் அவன் வீரச்சாவடைந்த போது அவனுக்காக அழவில்லை.. இறுமாந்து கொண்டேன். எனக்குள் புரட்சியாளனாக அவனே வாழ்கிறான். அவன் வீழ்ந்தாலும் அவன் விட்டுச் சென்ற நினைவுகள் வீழாது. வாடாது.

- *தேசப்பிரியன்*



# அறுவைப் பக்கம்.

## தமிழ் நாடு ஒரு பள்ளிக்கூடமாக இருந்தால்

தமிழ் நாடு ஒரு பள்ளிக்கூடமாக இருந்தால் எப்படியிருக்கும் என்று ஒரு கற்பனை. மாணவர்கள்! நாம் தினமும் சந்திக்கும் அரசியல் தலைவர்கள்தான் மற்றும் திரைப்பட உலகை சேர்ந்தவர்கள் சரி, பள்ளிக்கூடம் ஆரம்பித்து விட்டது...

ஆசிரியர் காளிமுத்து வகுப்பறைக்குள் வருகிறார். எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவிக்கிறார்கள். ஆசிரியர் வந்தவுடன், ஒரு திருக்குறளை போர்டில் எழுதிவிட்டு மாணவர்களைப் பார்க்கிறார். இதை எழுதியது யார்?

நீங்கள் தான் சார் என்கிறார் கிரேஸி மோகன்.

நான் கேட்டது திருக்குறளை எழுதியது யார்? என்று.

நீங்கள் தான்!

வந்தவுடனேயே பிரச்சனையை ஆரம்பிக்காதீர்கள். அப்புறம் வெளியே அனுப்பிவிடுவேன்! என்று எச்சரிக்கிறார்.

அப்போது அன்பழகன் ஆசிரியரிடம் ஒரு கடிதத்தை கொடுக்கிறார்.

என்னப்பா உங்க தலைவர் இன்றும் லீவ் லெட்டர் கொடுத்தனுப்பினாரா? என்ன எழுதியிருக்கார்? நீயே படி!.

அன்பழகன் படிக்க தொடங்குகிறார். உடன்பிறப்பே, நேற்று அறிஞர் அண்ணாவும், பெரியாரும் என் கனவில் தோன்றினார்கள். இடித்த புளியான தமிழன் சூடு சொரணை அற்றவன். இப்படி ஒரு கூறுகெட்ட ஜன்மத்தை எந்த நாட்டிலே பார்க்க முடியும்? இளிச்சவாயானாக இருப்பது ஏன்? இதற்குக் காரணம் யார்? என்று என்னைக் கேட்டார்கள்.

என்னால் பதில் சொல்ல இயலவில்லை. இது சிந்திக்க வேண்டிய ஒன்று என்று கூறி சில நாள் அவகாசம் கேட்டுள்ளேன். எனக்குச் சிந்திப்பதற்கு சில நாள்கள் தேவைப் படுவதால் என்னால் பள்ளிக்கு வர முடியாது. அதனால், சில நாள்கள் எனக்கு விடுப்பு வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அன்புள்ள,மு.க.

ஸ்கூல் ஆரம்பித்ததிலிருந்து இப்படியே கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்? இவர் எழுதிய கடிதத்தை பைண்ட் பண்ணி ஒரு புத்தகமாகப் போடலாம். இப்படி ஸ்கூல் ஆரம்பித்ததிலிருந்து வராமல் இருந்தால் அவர் மேல் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்!

எல்லோரும் வீட்டுப்பாடம் எழுதி விட்டீர்களா? எங்கே அன்பழகன் உன் புத்தகத்தைக் கொடு! என்று வாங்கிப் படிக்கிறார். மதர் டங்க்? என்றால் ரொம்ம்ம்ப நீளம்....! னு போட்டிருக்கே, என்னப்பா இது?

ஆமாம் சார், மதர் என்றால் தமிழில் என்ன?

அம்மா, அம்மாவிற்கு எப்போதுமே வாய் நீளம் தானே சார்?

அப்படி எல்லாம் பேச கூடாது. நேற்று அம்மா அவர்கள் தான் பக்குவம் அடைந்து விட்டதாகக் கூறியிருக்கார்,

நினைவில்லையா?, சான்றோர் வாக்கை எப்போதும் மதிக்கணும்!

எல்.கணேசன் எழுந்து, சார், நான் சான்றோர் வாக்கைப் பார்த்திருக்கிறேன்!

என்ன, சான்றோர் வாக்கைப் பார்தையா? அதெப்படி.. சான்றோர் வாக்கைக் கேக்கத்தானே முடியும், பாக்க முடியுமா ?

சார், எங்கள் தலைவர் வைகோ அவர்கள் Walk செய்ததை எல்லோரும் பார்த்தோம்? அதைத் தான் சொன்னேன்!

ஐயோ உங்க தொந்தரவு பெரிய தொந்தரவாக இருக்கிறது. உட்கார்.

சரி, நேற்று பாண்டவர்கள் எத்தனை பேர் என்று கேட்டிருந்தேனே? எங்கே நீ சொல்லு? என்று எஸ்.ஆர்.பியை பார்த்துக் கேட்கிறார்.

ஆறு பேர் சார்!

ஆறா? ஐந்து பேர்தானடா... ஆறாவதா யாரு?

தருமன், பீமன், அர்சுணன், நகுலன், சகாதேவன் என பாண்டவர்கள் அஞ்சு பேர். போப் பாண்டவரைச் சேர்த்து மொத்தம் ஆறுபேர்!

இதிகாசத்தை இப்படி எல்லாம் மாத்த முடியாது!

மதச்சார்பின்மையை மதிக்கிற ஆசிரியர் என்று உங்களை நினைத்தேன்?! ஸிட்டவுன்!!

அப்போது வகுப்பறைக்கு லேட்டாக இளங்கோவன் வருகிறார். ஏண்டா லேட்?

சார், நான் விமானத்தில் ஏறி டெல்லி போறமாதிரி கனவு கண்டேன் அதனால் தான் லேட் ஆயிருச்சு..

பின்னால் ஜி.கே.வாசன் வர.. ஏண்டா நீயும் லேட்?

இளங்கோவன் டெல்லி போனான் சார், அவனை வழியனுப்ப நான் போனேன் சார்..

இப்படி நீங்க கனவு காண்பதனால் தான் தமிழ் நாட்டிலே உருப்பட மாட்டேங்கிறேங்க!

பின் வரிசையில் இருந்து தா.பாண்டியன் சார் எனக்கு ஒரு சந்தேகம்..

என்ன சந்தேகம்?

தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் நீர் விழுச்சி தமிழக அரசுக்குச் சொந்தமா? அல்லது கர்நாடக அரசுக்குச் சொந்தமா ?

நல்ல கேள்வி, அம்மையார் இதற்கு பதில் அளிப்பார்!

அம்மையார் எழுந்து பச்சை ஃபைலைப் பார்த்து, எல்லோருக்கும் தெரியும் இது ஒரு..... (எல்லோரும் மேஜையை தட்டுகிறார்கள்.)

சார்!

யாரப்பா அது?

நான்தான் சார், கணேசன், எனக்கு பொன்முடி பக்கத்தில் உட்கார சீட் தர மாட்டேங்கிறாங்க!

ஏம்பா கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து கணேசனுக்கு இடம் கொடுங்கப்பா!

எனக்கே இடம் இல்லை, வேறு எங்காவது போய் உட்காரச் சொல்லுங்கள்.

பார்த்து அட்ஜஸ்ட் பண்ணி இடம் கொடுங்க.

ஏன் அம்மா பக்கத்தில் இடம் இருக்கே அங்கே போய் உட்காரச் சொல்லுங்கள். உடனே கணேசன்

சார், நான் இங்கேயே அட்ஜஸ்ட் பண்ணி உட்கார்ந்துக் கொள்கிறேன்.

பின்னாடியிலிருந்து ஒரு சத்தம் வருகிறது ஐயா, ஒரு கோரிக்கை.. என்ன ராமதாஸ்?

ஐயா, தமிழன், தமிழ்நாட்டில், தமிழ் வகுப்பில்..

சீக்கிரம் சொல்லு என்ன வேண்டும்?

நீங்கள் வருகைப் பதிவை எடுக்கும் போது எல்லோரும் எஸ்..சார், எஸ்.. சார் என்று கூறுகிறார்கள். அப்படிக் கூறாமல் உள்ளேன் ஐயா! என்று கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல யோசனை! தாங்க்கியு சார், மே ஐ ஸிட்டவுன்?

எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் எழுந்து,

சார் எங்கள் பிரதம மந்திரி, மன்மோகன் சிங் சீக்கியர்களுக்கு நடந்த கொடுமைகளுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னாலிருந்து ஒரு குரல் வருகிறது... மன்னிப்பு, தமிழில் எனக்குப் பிடிக்காத ஒரே வார்த்தை..

யாரப்பா அது, இவரை யார் உள்ளே விட்டது.

சரி, மறக்கும் முன், உங்கள் பரிட்சை பேப்பரைத் திருத்திக் கொண்டிருந்தேன். ராஜா என்று நினைக்கிறேன் ஆர்.எஸ்.எஸ். துணை என்று போட்டு எழுதி இருக்கார், அப்படி எல்லாம் போடக் கூடாது.

நல்லா படிக்கணும், நல்லா படித்தால் எல்லோருக்கும் வேலை கிடைக்கும், வேலை இல்லாவிட்டால் எல்லோரும் நாக்ஸலைட்கள் ஆகிவிடுவீர்கள்!

சார், நான் ஒரு புதுக்கவிதை எழுதி இருக்கேன்,எல்லோருக்கும் படித்துக் காண்பிக்கவா? என்று செல்வி ஜெயலலிதா எழுந்து படிக்க ஆரம்பிக்கிறார்.

(இப்போது பலர் டாய்லட் வருகிறது என்று எழுந்து போகிறார்கள்.)

*மதமாற்றத் தடை வாபஸ்,*

*பலி தடுப்பு வாபஸ்,*

*ஹெச் முத்திரை வாபஸ்,*

*விவசாயி மின்சாரக் கட்டணம் வாபஸ்,*

*பத்திரிகைகள் மீது வழக்கு வாபஸ்,*

*பல்கலைக்கழகப் பெயர்மாற்றம் வாபஸ்..!*

*அரசு ஊழியர்கள் நடவடிக்கை வாபஸ்!*


ஆஹா! அருமையான கவிதை!! நீங்கள் வாபஸ் வாபஸ் என்று கவிதை படித்தவுடன் வெளியே நம் ஸ்கூல் பஸ் வந்துவிட்டது.

எல்லோரும் வீட்டுக்குப் போகலாம்?

*- ஒண்ணும் ஒண்ணும் ரெண்டு*



I Only accept Master and Visa cards




கொட்டுண்டாப் பிறகு கொலுகேட் என்ன கொளுக்கட்டை என்ன




என்னணித் துணியிறாராம் கருமம் துணிஞ்ச பிறகு எண்ணுறது இழுக்காம்

### கேட்கப்படும் கேள்விகளும் வரும் விடைகளும்

| | |
|---|---|
| எப்படி சினிமாவிற்குள் வந்தீங்க | - அது ஒரு விபத்துங்க |
| உங்கள் திருமணம் | - அதுக்கு இப்போ எனக்கு நேரம் இல்லை |
| நடிகருடன் கிசுகிசு | - இருவருக்கும் இடையே நட்பு மட்டும்தான் |
| உங்கள் இலட்சியம் | - நடிச்சு நல்ல பெயர் வாங்கணும் |
| வாழ்க்கையப் பத்தி | - நான் ஒரு சின்னப் பொண்ணு சார் |
| அந்த டைறக்டர் கூட | - அவரு எனக்கு அண்ணன் மாதிரி |
| இப்போ நடிக்கிற படம் | - அதுல வக்ரம் கூட ஜோடியாப் பண்ற |
| ரசிகர்களுக்கு என்ன சொல்றீங்க | - நல்லா என் படத்தைப் பாருங்க |



# சினித்துளி

## வெயில் !



இயக்குநர் ஷங்கர் ஒரு படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இந்தப் படத்தை இயக்கப் போவது ஆல்பம் பட இயக்குநர் வசந்தபாலன். ஷங்கரிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த அவர் தனது குருநாதரைப் பார்த்து ஒரு கதை சொன்னார். கதை ஓ.கே. ஆகி விடவே, இப்போது படப்பிடிப்புக்குத் தயாராகி வருகிறார். ஷங்கரின் முந்தைய தயாரிப்பான காதல் படத்தில் நடித்த பரத்தான் வெயில் என்ற இந்தப் படத்திலும் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு ஜோடியாக கேரளாவைச் சேர்ந்த பாவ்னா, பிரியங்கா ஆகியோர் நடிக்கிறார்கள். இப்படத்தின் மூலம் ஏ.ஆர்.ரஹ்மானின் சகோதரி மகன் ஜி.வி.பிரகாஷ் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார்.

## தவமிருந்து !



சேரன் இயக்கத்தில் வெளிவரப்போகும் தவமாய் தவமிருந்து படம் நான்கு மணி நேரம் ஓடுமாம். படத்திற்கு இரண்டு இடைவேளைகள். இந்த நான்கு மணி நேர படத்தை இரண்டரை மணி நேரமாக குறைத்திருக்கலாமே? யாருக்கும் எழுகிற பொதுவான கேள்விதான் இது. உண்மையில் இப்படத்தை எடிட் செய்து பார்த்த போது ஏழரை மணி நேரம் ஓடுகிற படமாக இருந்ததாம். எந்த காட்சியையும் வெட்டியெறிய மனசில்லாத சேரன், இருபது நாட்கள் எடிட்டிங்கில் உட்கார்ந்து மிகவும் கஷ்டப்பட்டுதான் நான்கு மணி நேரமாக குறைத்திருக்கிறார். தீபாவளி ரிலீஸ் என்று அறிவிக்கப்பட்டு, இம்மாதம் 18-ந் தேதி ரிலீஸ் செய்யும் முடிவில் இருக்கிறாராம்.

## சிவகாசி !



சிவகாசி படத்தில் நடிகர் பாஸ்கர் கோர்ட்டில் வக்கீல்கள் அணியும் கறுப்பு கோட் அணிந்து கொண்டு ரோட்டில் நடந்து செல்வதை நடிகர் விஜய் கிண்டல் செய்வதை போலவும், வக்கீல் ஒருவரை கூமுட்டை வக்கீல் என்று அழைப்பதும் உள்ளது. மற்றொரு காட்சியில் சட்டபுத்தகத்தை நடிகர் பாஸ்கர் தலைக்கு அடியில் வைத்து கொண்டு பிளாட்பாரத்தில் படுத்து தூங்கு கிறார். அவருக்கு அருகில் பிக்பாக்கெட், செயின் கொள்ளை போன்ற குற்றங்களுக்கு குறைந்த செலவில் வழக்கு நடத்தி தரப்படும் என்று போர்டு உள்ளது. இந்த காட்சிகளை படத்திலிருந்து நீக்க உத்தரவிட வேண்டும் என்று திருச்சி கோர்ட்டில் வக்கீல்கள் மனுதாக்கல் செய்து உள்ளனர்.

## சிவாஜி !

சிவாஜி படத்திற்காக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடன் வாங்கியிருக்கிறார்கள். இந்த பணத்தை வைத்துக் கொண்டுதான் படப்பிடிப்பை நடத்த போகிறார்கள். இதற்கு முன் பேங்கில் லோன் வாங்கி எடுக்கப்பட்ட படம் அந்நியன். ஷங்கருடன் ஆறு உதவி இயக்குனர்கள் பணியாற்றுகிறார்கள். அதில் விளம்பர படங்களை இயக்கிக் கொண்டிருக்கும் இரட்டையர்கள் ஜேடி-ஜெர்ரி, காதல், சாமுராய் படங்களை இயக்கிய பாலாஜி சக்திவேல், செல்லமே படத்தை இயக்கிய காந்தி கிருஷ்ணா ஆகியோர் முக்கியமானவர்கள். வசனத்தை எழுத்தாளர் சுஜாதா எழுதுகிறார். இசை ஏ.ஆர்.ரகுமான், பாடல் வைரமுத்து. சிவாஜி, அடுத்த தீபாவளிக்கு வெளிவரவுள்ளதாம்.

## சிறுதுளி !

சிம்புவை வைத்து படம் எடுப்பது யானையை கட்டி தீனி போடுவது போல்! ஆனால், படம் துவங்கி மூன்றே மாதத்தில் சரவணாவை முடித்துவிட்டார் கே.எஸ். ரவிக்குமார். சிம்புவிற்கு காவடி எடுக்காத குறையாம் யூனிட்டில்!

❖ ❖ ❖

ஸ்ரீகாந்த் நடித்த பம்பரக் கண்ணாலே வியாபார ரீதியாக பெரும் வெற்றியை அடைந்திருக்கிறது. இதையடுத்து கிடப்பில் கிடந்த சதுரங்கம் படம் வேக வேகமாக வளர்ந்து வருகிறது. டிசம்பரில் ரிலீஸ் என்கிறார்கள்.

❖ ❖ ❖

தசாவதாரம் படத்தில் பத்து விதமான கெட்டப்பில் நடிக்கிறார் கமல். சில இடங்களில் இவர்தான் கமல் என்பதே தெரியாதாம். அந்த இடங்களில் சப்-டைட்டில் போட போகிறார்களாம். அட..!

❖ ❖ ❖

தெலுங்கு பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்திருக்கும் சூர்யா, தான் ஜோதிகாவை திருமணம் செய்து கொள்ள போவதை வெளிப்படையாக தெரிவித்திருக்கிறார்.

❖ ❖ ❖

தமிழ் படிக்க கற்று கொண்டு வருகிறார் மீராஜாஸ்மின். பாரதியாரின் கவிதைகளை படிக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ் கற்று வருகிறாராம்.

❖ ❖ ❖

சமீபத்தில் நடந்த வருமான வரித்துறை ரெய்டு திரையுலகத்தை திடுக்கிடச் செய்திருக்கிறது. நடிகர் விஜயகாந்த் புதுக்கட்சி ஆரம்பித்ததால்தான் இந்த ரெய்டு என்றும், தொடர்ந்து அரசியலுக்கு வர நினைக்கும் சினிமாக்காரர்களை மிரட்டவே இது போன்ற ரெய்டுகள் என்றும் பேச்சுகள் நிலவுகிறது.

இலவசம் !!!
சரியான விடை சொல்லும் அதிஸ்டசாலிக்கு
றமியின் D.V.D இலவசம்

இந்த இதழுக்கான கேள்வி
லண்டனில் இனி தமிழ் சினி டிக்கட் விலை?
1. 5 2. 6.50 3. 7.50

கடந்த இதழின் கேள்விக்குப் பரிசு பெறும் அதிஸ்டசாலி
சுதன், Ashford

சரியான விடையுடன் நீங்கள் அணுக வேண்டிய இலக்கம்
020 8286 9327



## அசின் வெற்றி ரகசியம் !

படிப்பில் நான் படுசுட்டி என்றாலும் இளம் வயதில் இருந்தே எனக்கு நடிப்பின் மீதுதான் தனி ஆர்வம் இருந்தது. எனவே நான் முழு ஈடுபாட்டுடன் நடிக்கிறேன். பணத்துக்காக நடிப்பதை விட பெயர் வாங்க வேண்டும் என்ற அக்கறையுடன்தான் நான் நடிக்கிறேன்.

3 வயதில் இருந்தே முறைப்படி நடனம் கற்றேன். பள்ளிக்கூடத்தில் படிக்கும் போது நடனம், பாட்டு, பேச்சு, கவிதை, நாடகம் என்று எல்லாவற்றிலும் ஆர்வமுடன் கலந்து கொள்வேன். 14 வயதிலேயே மாடலிங் ஷோகளில் கலந்து கொண்டேன். இந்த ஆர்வம்தான் எனக்கு மலையாளப் படங்களில் நடிக்கும் வாய்ப்பை பெற்றுத் தந்தது.

முதலில் நரேந்திரன் மகள் பின்னர் தெலுங்கு படங்கள், அடுத்து தமிழ்ப்பட உலகில் காலடி எடுத்து வைத்தேன். தமிழில் விஜய், விக்ரம், அஜீத், சூர்யா என்று முன்னணி கதாநாயகர்கள் அனைவருடனும் நடிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இது கடவுளின் கருணை என்றுதான் சொல்ல வேண்டும். எனக்கு கிடைத்த வேடத்தை சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைக்கிறேன். அதற்கு கிடைத்த வெற்றியாகவும் இதை சொல்லலாம்.

திரைப்பட உலகில் நான் இன்னும் எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டியது இருக்கிறது. தொடர்ந்து நன்றாக உழைத்து என் பெயரை நிலை நிறுத்த பாடுபடுவேன். கஜினி பட வெற்றியை ஒருதனிப்பட்ட வெற்றியாக கருத முடியாது. அதற்காக உழைத்த கூட்டணிக்கு கிடைத்த வெற்றி இது. கதை, இயக்கம், நடிப்பு, இசை, கேமரா என்று எல்லா தரப்புக்கும் நல்ல பெயர் கிடைத்திருக்கிறது.

இது போல சிவகாசி, மஜா படங்களும் ரசிகர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் இருக்கிறது. எனவே அமோக ஆதரவுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. நான் நடிப்புக்காக தனி பயிற்சி எதுவும் பெறவில்லை. பாத்திரங்களுடன் ஒன்றி நடிக்கிறேன்.

நான் நடிக்கும் படங்களில் எத்தனை கதாநாயகி என்று பார்ப்பது இல்லை. எனக்கு கிடைத்திருக்கும் வேடம் என்ன என்றே பார்க்கிறேன். கஜினி படத்தின் கதை கேட்டேன். என் வேடம் என்ன என்பதை தெரிந்து கொண்ட பிறகே நடிக்க சம்மதித்தேன். அந்த படத்தில் நயன்தாராவும் நடித்திருந்தார். இரண்டு பேருக்குமே முக்கியமான பாத்திரங்கள்தான். எனவே எத்தனை கதாநாயகிகள் என்பது எனக்கு ஒரு பிரச்சினையே இல்லை.

நான் இப்போது தமிழ், தெலுங்கு, மலையாள படங்களில் நடிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறேன். இங்கு நிரந்தர இடம் பிடிக்கும் அளவு என்னை வளர்க்க முயற்சி செய்கிறேன். இப்போது இந்தி படங்களில் நடிப்பது பற்றி நான் யோசிக்கவில்லை. வித்தியாசமான வேடங்களில் நடிப்பதில் முழு கவனம் செலுத்துகிறேன். இப்படி சொல்லிக் கொண்டே போகிறார் அசின்.

RS Printers
Design, Full Colour Printing, Foil Printing, Leaflets
Wedding, Birthday, Puberty Ceremony Cards, Rubber Stamps, Cake Boxes & Stationery

இல்லங்களின் இனிய நிகழ்வுகளை
எண்ணங்களின் கனவுகளை
வண்ணங்களில் மெருகேற்றி
அழைப்பிதழ்களை அச்சிட
வாரீர்! வாரீர்!! வாரீர்!

PRINTERS

3 Halsbury Road West, Northolt, Middx, UB5 4PL.
Tel: 020 8864 5151 / Mobile:07765 224 337
Fax: 020 8422 9752
Email: rsprintersltd@aol.com
info@rsprinters.com
www.rsprinters.com

# சினிமா

## தைரியமான பெண் சந்திக்க வேண்டிய சோதனைகள்!



சுஹாசினி மீது கிரிமினல் வழக்கு தமிழ் முரசின் தலைப்பு செய்தி இது. குஷ்புவினை ஆதரித்து சுஹாசினி இப்போது களத்தில் குதித்திருக்கிறார். தனிப்பட்ட முறையில் விவாத மேடைகள் நடத்தும் ரேவதி, சுஹாசினி, லட்சுமி மீது பெரிதான அபிப்ராயங்கள் எனக்கில்லை. ஆனாலும், இன்றைக்கு சுஹாசினி மீது இரண்டு கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக செய்திகள் சொல்கின்றன.

இன்றைக்கு அ.தி.மு.கவில் இருக்கும் தீப்பொறி ஆறுமுகம் ஒரு காலத்தில் தெரு வோர கூட்டங்களில் ஜெயலலிதாவினைப் பற்றி பேசியதை எழுத முடியாது. கேட்கவும் முடியாது. நாராசத்தின் உச்சம் என்ன என்பதை அங்கு தெரிந்துக் கொள்ளலாம். மைக்கினை மூடிக் கொண்டு, சட்ட சபையில் கருணாநிதி அன்றைக்கு ஜெயலலிதாவினை என்ன சொல்லி ஏசினார் (வாயை மூடுறீ *** (முண்ட) என்பது உலகறியும்.

சமீபத்தில் தீபாவளிக்கு வந்த விஜய் படத்தில், மிகக் கேவலமாக நாயகியின் ஆடையினை பிரா, ஜட்டி லெவலுக்கு பேசியிருப்பார். தமிழ்க் கலாச்சார காவலர்கள் விசிலடித்து கைதட்டி படத்தினை சூப்பர் டூப்பர் ஹிட்டாக்கி இருக் கிறார்கள். உச்ச நட்சத்திரம் ஒரு படத்தில் அதிகமாக கோவப்படும் பெண்ணும்..... என்று டயலாக் பேசியிருப்பார். சூப்பர் ஆச்சே விட்டு விடுவோமா நாம். படத்தினை கைத்தட்டி பார்த்து ரசித்து இருக்கிறோம். இவையனைத்துக்கும் அடிப்படையான காரணம் இதில் எல்லா வற்றிலும் சமூகத்தின் கருத்தினைத் தாண்டி சொன்னவர்கள் பெண்கள். ஒரு ஆணாதிக்க சமூகத்தில் ஒரு தைரியமான பெண் சந்திக்க வேண்டிய சோதனைகள் நிறைய.

கலாச்சாரக் காவலர்களை மிக கேவலமாக, அநாகரீகமாக பலபேர் பேசியிருக்கிறார்கள். ஆனால் பிரச்சனை ஒரு பெண் பேசும் போதுதான் ரோஷம் பொத்துக்கொண்டு வருகிறது. உள்ளே சும்மா குவாட்டர் அடித்து குந்தியிருக்கும், கலாச்சார காவலன், தலைக்கு குளித்து, கையில் அரிவாளோடு சாமியாட புறப்பட்டு விடுகிறார். ஆணாதிக்க, தந்தை வழி சமூக சிந்தனையினால் வரும் பிரச்சனையிது.

இன்றைக்கு தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகள், எத்தகைய பிற்போக்கு, புறம்போக்கு தனம் என்பதைப் பற்றிய சிந்தனை ஊடகங்களுக்குக் கொஞ்சமும் இல்லை. ஊடகங்களுக்கு தேவை செய்திகள். இச்செய்திகளின் ,வழியே ஊட்டப்படும் சிந்தனைகள் அபாயகரமானவை. சில பல வழக்குகளைப் போட்டு எல்லோரையும் வாய் மூடச் செய்துவிடும், வாயடைக்கச் செய்துவிடும் புல்லுருவிகள் தமிழகத்தில் ஏராளம்.

ஒரு கருத்தினைச் சொல்லக் கூட ஒரு சுதந்திர நாட்டில் உரிமையில்லை என்பதை யோசித்தால், எத்தகைய அழுகிய ஒரு சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்கிற உண்மை புலனாகும். அவ பொம்பள! அவளுக்கென்ன அவ்வளவு வாயி என்று என் அடுக்கத்திலேயே பெண்கள் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன்.


மாற்றமும், மாற்று சிந்தனைகளும் தான் சுதந்திரத்தினை நிர்ணயிக்கின்றன. மாற்ற மில்லாத சமூகமும், மொழியும், மக்களும் கால வெள்ளத்தில் அடித்து செல்லப்படுவார்கள்.

பெண்ணின் கருத்துச் சுதந்திரத்தினை காணச் சகிக்காதவர்கள் தான் இன்றைய கலாச்சாரக் காவலர்கள். ஒரு பொம்பள போயி நம்மள விட ஜாஸ்தியா யோசிக்கிறாயா என்று உறுமும் அடிபட்ட ஆண்கள் தான் கொடும்பாவி எரிக் கிறார்கள். இதில் இன்னொரு கொடுமை, சில கட்சிகளில் மகளிரணி என்ன பேசியிருக்கிறார் என்று தெரியாமலேயே நடுரோட்டில் மறியல் செய்வதை தமிழகத்தினைத் தவிர வேறெங்கும் காண இயலாது.

பெண்ணடிமையினை ஒட்டு மொத்தமாக முச்சந்தியில் போட்ட பெரியாரின் வாரிசுகள் தான் இன்றைக்கு கற்பினை காபந்து பண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். பெண்களுக்கு சொத்தில் பங்கு கொடுத்த தலைவனின் பேரர்கள்தான் பெண்ணடிமையின் அங்கீ கரிக்கப்படாத ஹோல்சேல் ஏஜெண்டாக இருப்பதை விட வேறென்ன சொல்ல முடியும்.

அந்த கொடுமையினையும், வன்முறை யினையும் இங்கே ஒரே பத்திரிக்கையில் பார்க்க முடியும்.

*- உருப்படாதது*



விமர்சனம்

## அது ஒரு கனாக்காலம்

மின்னல் வேக ரயிலெல்லாம் வந்தாச்சு. ஆனாலும் கட்டை வண்டி பயணத்திலும் ஒரு சின்ன சுகம் இருக்கிறதல்லவா? காட்சிகள் நகர்வதிலிருந்து கமரா சுழல்வது வரை அத்தனையிலும் ஒரு நிதானம். ஆனாலும் இது பாலுமகேந்திராவின் படம் என்பதை பார்த்த மாத்திரத்திலேயே புரிய வைக்கிற அழகு! இளவயசு குறும்புகள் எல்லை மீறினால் என்னாகும்? இதை காதல் என்ற நூலில் கோர்த்து மாலையாக தொடுத்திருக்கிறார் பாலுமகேந்திரா.

அப்பாவும், அம்மாவும் ஊருக்கு போய் விடுகிறார்கள். தனிமையில் தனுஷ். கோலிங் பெல் ஒலிக்க கதவை திறந்தால் சந்தனச் சிலையாக பிரியாமணி. அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதான் வேலைக்கு என்னை அனுப்பிச்சாங்க... டயலாக் முடிந்த அடுத்த வினாடியே என்ன நடக்க போகிறது என்பது புரிகிறது. இருவரின் உடலிலும் ஏற்படுகிற வேதியியல் இம்சைகள் இருக்கிறதே... அது பச்சை பசேல் பாலுமகேந்திரா ரகம்.

உங்கப்பா உன்னை அடிக்கிறத பார்த்துட்டு என் பாவாடையிலேயே ஒண்ணுக்கு போயி ருக்கேன். - இது ப்ரியாமணி.

அதான் நீ என்னை கிராஸ் பண்ணி போகும் போதெல்லாம் மூத்திர வாடை அடிச்சுதா? -இது தனுஷ்

வசனங்களில் யதார்த்தம் இருக்க வேண்டி யதுதான். அதற்காக....? அங்கங்கே வழிகிற குறும்புகளையும் பாராட்டியே ஆக வேண்டும்.

சிறுசுகள் இரண்டும் கள்ளத்தனமாக காதலை தொடர்ந்து கொண்டிருக்க, இந்த காப்பியை அண்ணன்கிட்ட கொடு என்று அம்மா சொல்கிற போது தியேட்டரே கலகல!

ஒரே ஒருநாள் லாக்கப் வாசம். வாழ்க்கை யையே பறி கொடுத்துவிட்டு தவிக்கிறார் தனுஷ். இயக்குனர் கையில் தன்னை களி மண்ணாக ஒப்படைத்துவிட்டு இழுத்த இழுப்பு க்கெல்லாம் வளைந்து கொடுத்தமைக்காக பாராட்டலாம். அம்மாவின் மரணத்தை அழுத்தத்தோடு எதிர்கொண்டு சிறை க்குள் வந்த பின் கதறுகிறா்ரே... நெஞ்சை உலுக்குகிற வலி.

அந்த சிறைச்சாலைக்குள் நம்மை கவர்கிற இன்னொரு நபர் கருணாஸ். தன் கானா குரலில் அவர் பாடுகிற அந்த பாடல் உயிரை உருக்குகிறது. மேக்கப்பே இல்லாவிட்டாலும் தேவதை போலிருக்கிறார் பிரியாமணி. கவர்ச்சியை காட்டி கவர்ந்தாலும், நடிப்பில் குன்றிமணி அளவுகூட குறை வைக்கவில்லை இந்த பிரியாமணி.

கடைசி சில நிமிடங்களில் தலை காட்டுகிற சண்முகராஜா, ஒரு கொலை குற்றவாளியை தப்பவிடுகிற காரணம் நம்பும் படியாக இல்லை. ஆனாலும் மிடுக்கான போலீஸ் ஒபிசர்.

சோக காட்சிகளில் வம்படியாக பாட ஆரம்பித்துவிடுகிறார் இளையராஜா. எத்தனை படங்களுக்கு இதையே கேட்பது? போர்... ஆனால் பின்னணி இசை மட்டும் வழக்கம் போலவே ஜோர்! முதன் முறையாக அகல திரையில் ராஜாங்கம் நடத்தியிருக் கிறார் பாலு மகேந்திரா. பாலுமகேந்திராவின் படங்கள் மனசுக்குள் புகுந்து உணர்வுக்குள் கலகம் விளைவிக்கும். ம்ம்ம்... அது ஒரு கனாக்காலம்!

*- ஆர்.எஸ்.அந்தணன்*


CARLTON LEISURE
Worldwide Travel & Tours

SriLankan Emirates ROYAL JORDANIAN CSA Czech Airlines QATAR AIRWAYS

Specialist in Holiday Packages to India, Sri Lanka, Maldives and South Africa

உல்லாசப் பயணமா? உத்தியோகப் பயணமா?

உலகெங்கும் பறந்துசெல்ல சகலவிதமான விமானசீட்டுகளையும் மலிவாக,

இருந்த இடத்திலிருந்தே பெற்றுவிட நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

FOR EMERGENCY TRAVEL CALL 07957 450 895 (OR) 07796 174 376




HARROW & WEMBLEY
299 RAYNERS LANE
HARROW, MIDDX HA5 5EG
0800 279 2211
(T) 0208426 1266
(F) 020 8426 1267

CENTRAL LONDON
68 GREAT PORTLAND STREET
LONDON W1W 7NG
0800 043 1943
(T) 020 7636 7636
(F) 020 7636 7236

EAST LONDON
212A HIGH STREET NORTH
EAST HAM, LONDON E6 2JA
0800 279 1100
(T) 020 8586 7675
(F) 020 8471 8126

SOUTH LONDON
233 MITCHAM ROAD,
TOOTING, LONDON SW17 9JG
0800 279 5657
(T) 020 8672 5757
(F) 020 8767 9803



Web: www.carltonleisure.com / Email: info@carltonleisure.com

தரமான மலிவான சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கு Vx HOME ACCOUNT உடன் இணையுங்கள்

For great International call rates switch to Vx Home Account and discover the benefits!

**Vx Telecom** இன்

*Free Raffle Draw*

Vx HOME
Add wings to your voice

1ம் பரிசு Sri Lanka சென்று வர விமானச் சீட்டு
2ம் பரிசு £25 பெறுமதியான Vx Home Account
3ம் பரிசு £15 பெறுமதியான Vx Home Account
சிறுவர் சிறுமியர்க்கு இலவச பரிசுகள் வழங்கப்படும்

**Competitive rates for all countries**
The above rates are based on calls made from 0207 / 0845 access numbers and include VAT.

Sri Lanka only 6p

UK யில் Vx Home Account ஐ ஆரம்பித்து அதே Vx Home Account இனூடாக உங்கள் உறவுகள் இலங்கையிலிருந்து UK Land Line க்கு அழைக்க நிமிடத்திற்கு 5p மட்டுமே.

| | | | |
|---|---|---|---|
| Australia | 2p | New Zealand | 2.5p |
| Canada | 2p | USA | 2p |
| Europe | 2.5p | Saudi Arabia | fr 6p |
| India | fr 6.5p | Srilanka | 6p |
| Malaysia | 2.5p | UAE | 16p |

£25 உடன் Vx Home Account ஆரம்பித்தால் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகள் இலவசம். Vx Home Account இனை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகளை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

இன்றே இணைந்து கொள்ள அழையுங்கள்

**0800 989 0002 / 0207 952 0106 (24 Hrs)**



Travel, Shipping and Forwarding Agents

# UNIWEST INTERNATIONAL

19 Ryhope Road, London N11 1DR

Tel: 020 8361 5087
020 8368 9544
Fax: 020 8361 8498

Tea chest

£10.00 to Colombo -Freight only

**Don't look elsewhere Our Freitht charges are lowest in the United Kingdom**

**Door to Door service available on request**

Full house contents collected, packed and shipped to colombo at special rates, No hidden charges

We can ship your goods to India at highly competitive rates Madras, Bombay, Trivandrum, Cochin

**Special discount over 200 Cubic ft**

Specaial Offer!
**Send 3 Teachests Then, 4th one is free**

**The Most Trusted and Reliable Shipper**




**Kandy Warehouse**
Ceylon Shipping Lines Ltd
175 Paranagantota Road
Mawilmada
kandy, Sri Lanka

**Colombo Warehouse**
Ceylon Shipping Lines Ltd
194/10 D.R.Wijewardena Mawatha
Colombo -10
Sri Lanka

We are open from 9.00am to 6.00pm



உடன் ELS உங்கள் எதிர்காலத்தை வளமாக்குங்கள்



**ELS கீழ்கண்டவற்றை வழங்குகிறது**

- கட்டிட நிர்மான வேலை பெறுமதியின் 80% அல்லது கொள்வனவு விலையின் 70% அல்லது செலுத்த வேண்டிய கடனை மீட்டுதல்
- ஆகக் குறைந்த கடன் ரூபாய் 500, 000
- மீள செலுத்தும் காலம், 5 வருடங்கள் வரை
- கவர்ச்சிகரமான நிரந்தர வட்டி 13.5% (சொந்த வியாபாரம் செய்பவருக்கு 14.5%)
- சமனான மாதாந்த தவணைக் கட்டணங்கள்
- துரிதமான 3 வார கால கடன் ஏற்பாடு
- நட்புறவுடனான வாடிக்கையாளர் சேவை

மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

**020 8901 7917**

Radiance

**Radiance Consultancy Limited**
2, Gayton Road, Harrow, Middlesex,
HA1 2XU, United Kingdom.
Tel: 44 20 8901 7917 / Fax: 44 20 8901 4001
email: info@radiancecl.com

# PALM PALACE

Taste of Paradise

Sri Lankan and South Indian Restaurant

## New Look

## புதுப் பொலிவுடன்



**Very Modern with Old Values!**

What? Highly Recommended

Who? Time Out, ES magazine

Evening Standard

Hot Tickets

Guardian Rough Guide

Curry Club

PALM PALACE

**Winners of 2005 'Curry Club'**

## the Only Cuisine you need to know



Hence no disappointment,


"Only Excitement and Full Satisfaction"

Visit us with your Family and Friends




லண்டன் பத்திரிகைகளால் பாராட்டப்பட்ட சிபார்சு செய்யப்பட்ட
உயர்தர உணவகம் . உங்கள் வைபங்களை ஐந்து நட்சத்திர
ஓட்டல்களில் நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்றவர்கள்.
ஒருவருக்கான உணவு 2.50 லிருந்து 80 பவுண்கள் வரை

எங்களால் மலர் அலங்காரம்,மண்டப வடிவமைப்பு
கேக், உணவு வடிவமைப்பு உணவு பரிமாற்றம்,விழா
ஒருங்கிணைப்பு வரை செய்து தரப்படும்.
எந்த ஒரு வைபவத்திற்கும் எங்கும்
எவருக்கும் எங்கள் சேவை உண்டு



Vegetarian & Non Vegetarian
Specialised in Catering
for all occasions



**Note:**
Our Goal is 'Customer Satisfaction' & we always thrive to IMPROVE. We like to listen to you when you are not happy, but you may of course tell others when you are 'really happy'!

We go from Good to Best, skipping -better-. We mean our new MEETING PALACE.

**We are specialised in catering for all occasions including Weddings & Parties**

Open 7 days **12.00** noon - **3.00** pm
**6.00** pm - **11.30** pm

எதிர் பாருங்கள் விரைவில் புதிய
**Await the opening of our new ... Meeting Palace**

80 South Road, Southall UB1 1RD
**Mob: 07950 382 969 / 07737 878 475**
**Tel: 020 8574 9209**

at
34, High Street, Wealdstone,
Harrow HA3 7AB
**Mob: 07801 054 205**